உ

குகன் துணை

விவேக சிந்தாமணி

மூலமும்,

ஜீவகசிந்தாமணி வசனம், அரிச்சந்திரபுராண வசனம்,
அருணாசலபுராண வசனம், ஸ்ரீ பகவத்கீதை வசனம் ஆகிய
நூல்களின் ஆசிரியரும், விவேகசிந்தாமணி முதற்பாகம்
உரையாசிரியருமாகிய

மதுரை ஜில்லா செம்பூர்-வித்வான்
ஸ்ரீமத். வீ. ஆறுமுகஞ்சேர்வை அவர்களால்

இயற்றப்பெற்ற

உரையும்.

[இரண்டாம் பாகம்]

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை,
87, தம்புசெட்டி வீதி, சென்னை.

1924

விலை அணா 10

[All Rights Reserved]

உ

முகவுரை

ழறிவிற் சிறந்த [illegible]!

இவ் விவேக[illegible] யென்னும் நூலிற்கு இவ் ரையை யெழுத[illegible] காரணம், இந்நூற் சிற , இதன் பயன் [illegible]வைகளெல்லாம் இதன் முதற் கத்தின் முகவுரை[illegible]ளக்கி யெழுதப்பெற்றிருத்த ன், அதனைக் கண்ணுறின் நன்கு விளங்கும். அதிற் றியபடியே இவ் விரண்டாம் பாகத்தில் இப்போது சிறப் ற நூறு பாடல்களைத் தேர்ந்தெடுத்துச் சேர்த்து அவற் ற்கு விளக்கமான வுரை யெழுதி முடித்துளேன். இதி ள்ள சில பாடல்கள் மிகவும் உயர்ந்த கருத்துக்களுள்ள வகளா யிருந்தமையின், அவற்றிற்கு உரை சற்று விரித் தெழுதப்பட்டிருக்கின்றது; அதனால், இது முதற்பாகத்தி ம் இரண்டு பாரங்கள் அதிகமுள்ளதாகிவிட்டது. ஆயி ம், அங்ஙனம் வளர்த்தெழுதப்பட்டிருக்கும் உரையி ள்ள விஷயங்கள் மிகவும் உயர்ந்தவைக ளாதலால் இந் லை வாசிக்கும் நண்பர்கள் அவற்றைப் பொறுமையுடன்

கவனித்து ஆராய்ச்சி செய்யுமாறு பிரார்த்திக்கின்றே
இதிலுள்ள காப்புச் செய்யுள் மட்டும் என்னு லிய
பெற்றது. மற்றைச் செய்யுட்க ளெல்லாம் பழைய
களிலிருந் தெடுக்கப்பட்டன. இதன் முதற்பாகத்தி
இதிலும் சேர்க்கப்பட்டிருக்கும் செய்யுட்களன்றி
னும் பல அருமையான பாடல்க ளிருக்கின்றன. அ
யெல்லாம் உரையுடன் அடுத்து மூன்றும் பாகத்தில் வெ
வரும். இவ்விரண்டாம் பாகத்தின் உரையில் என் பு
கெட்டாமல் ஏதேனும் பிழை சேர்ந்திருப்பின் அறிவு
யோர் அதனை எனக் கறிவித்தால், யான் வந்தனத்து
ஏற்றுத் திருத்திக் கொள்வேன்.

இங்ஙனம்:

☞ வீ. ஆறுமுகன்

உ

குகன் துணை

விவேகசிந்தாமணி இரண்டாம் பாகத்தின்
செய்யுள் முதற் குறிப்பு அகராதி

செய்யுள்	பக்கம்
அ	
...ஞ்சனவை	73
[illegible]	14
[illegible]	129
[illegible]	36
[illegible]	72
...ருமெய்யும	121
...லகில்லா	143
...லலலே	29
...ன்பிலா	88
...ன்னே தயை	28
இ	
...ஞ்சிநெல்லி	105
...ணையிறன	86
...றையவன்	133
...ன்றருனேஞ	62
உ	
...துநீர்க்கட	149
ஊ	
...ருளெழுந்த	75
எ	
...ன்ஞன்கு	124
...தொழிலே	144
...தற்கரிய	51

செய்யுள்	பக்கம்
எவ ...ரமனங்	150
எழுதரி...	38
எறியெர்தெற	100
என்பொரு	130
ஏ	
ஏ...யிடலி	13
ஏர்பெறு	138
ஒ	
ஒருவருமறிகி	147
க	
கடவுளீகுவ	93
கடன்படு	11
கடாவிடுஞ்ச	123
கட்டிபடிப்	25
கண்வனப்பு	118
கல்லாலயமாந்	3
கல்லுழு	42
கற்புடைய	120
கா	
காமத்தா	70
காலேமாலே	104
கெ	
கெட்டசாறு	89

செய்யுள்	பக்கம்
கை	
கைதவமி	141
கைப்பொருள்	57
கொ	
கொண்டான்	56
கோ	
கோதறுகல்வி	46
கோபத்தாற்	79
சி	
சிவிகைமுன்	49
செ	
செந்தமி	55
செல்வத்தைப்	99
சோ	
சோரமனே	146
த	
தகுதிகொள்	21
தட்டாணிடத்	107
தரித்திரங்க	44
தரித்திரமிக்க	43
தரித்திரவெம்	114
தன்னுரைகொ	148
தன்னேத்தான்	137

செய்யுள்	பக்கம்
தன்னைப்புகழ்	26
தன்னையளித்	24
தா	
தான்கெடினுந்	151
தி	
திரவியம்	139
தீ	
தீதுநன்	7
தீமையுள்ளன	71
து	
துர்ச்சனரும்	23
துற்சனன்	32
ந	
நம்பனடிய	53
நற்பொரு	2
நன்றியைக்	142
நி	
நிட்டூரமாக	9
நிறைபொருளு	106
நே	
நேசனைக்	19
ப	
பகலோன்றெறு	41
பகையினை	142
பசிமிகுந்த	60
படைதுணைக்கு	117
பந்தவுடக்	59
பா	
பாலுக்குச	111
பி	
பிறப்பித்	37
பு	
[illegible]	1
புரைதப	65
புலியொடு	106
பூ	
பூசாரி	33
பெ	
பெண்ணுதவுங்	67
பொ	
பொய்யருக்கு	112
பொருணனி	49
பொலிவளர்	115
ம	
மக்களாக்கை	69
மங்கையர்க	98
மங்கையர்விருந்	1[illegible]
மந்திரந்தன்னை	
மற்றொருவனை	1[illegible]
மனைக்கு	
மன்னவன்	1[illegible]
மா	
மாடில்லான்	
மாதர்க்	
மால்று	
மாரிட்டொரு	
மு	
முத்தியில்	
முனியதட்டு	
மூ	
மூங்கிலிற்	
மை	
மைந்தனைப்	
வி	
விருந்தினு	
வெ	
வெகுளியே	
வெள்ளத்தே	1[illegible]

செய்யுள் முதற்குறிப்பு அகராதி முற்றுப்பெற்றது.

உ

கடவுள் துணை

விவேக சிந்தாமணி

இரண்டாம் பாகம்

மூலமும் உரையும்

காப்பு

[நேரிசை வெண்பா]

புண்ணியமாம் பாவம்போம் புத்திமிகும் வித்தையுண்டாம்
எண்ணியநற் செய்கைமுடி வெய்துமே—நண்ணுந்
திருமருப்பொன் றாலவுணன் றீரங் கெடுத்தான்
குருமலர்ப்பா தந்தொழுவார்க் கு.

(பதவுரை) திரு நண்ணும் - அழகு பொருந்துகின்ற, மருப்பு ஒன்றால் - (தன்னுடைய) ஒற்றைக் கொம்பினாலே, அவுணன் - கஜமுகாசுரனுடைய, தீரம் - வலிமையை, கெடுத்தான் - கெடுத்து அவனைக் கொன்ற விநாயகக் கடவுளுடைய, குரு - நிறம் பொருந்திய, மலர் - தாமரை மலர்போன்ற, பாதம் - அடிகளை, தொழுவார்க்கு - வணங்கும் அடியார்க்கு, புண்ணியம் ஆகும் - (உலகத்தில்) புண்ணியங்களெல்லாங் கைகூடும்; பாவம் போகும்-பாவங்களனைத்தும் நீங்கும்; புத்தி மிகும் - அறிவு அதிகரிக்கும்; வித்தை உண்டாம்-கல்வி விருத்தியாகும்; எண்ணிய-செய்யக்கருதிய, நற்செய்கை-நல செயல், முடிவு எய்தும்-பூர்த்தி பெறும்.

இக் காப்புச் செய்யுள் இவ் வுரையாசிரியரால் இயற்றப்பெற்றது.

(விசேடவுரை) விநாயகக் கடவுள் தம்முடைய ஒற்றைக் கொம்பினை யொடித்துக் கயாமுகசுரன்மீது பிரயோகித்து அவனைக் கொன்றா ரென்பது கந்தபுராண கதை; இதனை,

"நின்றவன் றன்னை நோக்கி நெடியபல் படைக ளேவிற்
சென்றிவன் றன்னைக் கொல்லா சிவனருள் வரத்தின் சீரா
லின்றினிச் செய்வ தென்னென் றெண்ணவரை யுன்னி யெந்தை
தன்றிருக்கோட்டிலொன்று தடக்கையா லொடித்துக்கொண்டான்."

"தடக்கையி லேந்து கோட்டைத் தழியா மவுணன் மீது
விடுத்தலு மனைய்ன் மார்பை வெய்தெனக் கீண்டு போகி
யுடற்படி மிசையே வீழ்த்தி யெல்லையி லோடித் தெண்ணீர்க்
கடற்படிந் தமலன் மைந்தன் கரத்தில்வந் திருந்த தன்றே."

என்ற கந்தபுராணச் செய்யுட்களா னுணர்க. புண்ணிய மாகும், பாவம் போகும், வித்தை யுண்டாகும் என்பவற்றுள் ஆகும், போகும் என்பன இடை யுயிர்மெய் கெட்டு ஆம், போம் என நின்றன. 'நண்ணும் திரு' என்பதை, 'திரு நண்ணும்' என மாற்றுக. தொழுவார்க்குப் புண்ணிய முதலியன உண்டாமெனவே, தொழாதார்க்கு அவை யுண்டாகா வென வுணர்க. (௧)

நூல்

உலகத்திற் பொருளே சிறந்த தென்பது

[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

நற்பொரு ளறத்தை யின்ப நலத்தைஞா னத்தை மிக்க
பற்பல ருறவைப் பொல்லாப் பகைதவிர்த் திடுந்தி றத்தைச்
சொற்பெரும் புகழை யென்றுந் துகளிலாப் பெருமை தன்னைப்
பொற்புறுங் கதியை வாய்ந்த பொருளலாற் பெறுவ தின்றே

(ப-ரை) நல்-நல்ல, பொருள்-(ஆபரணம்முதலிய) உடைமை
ளையும், அறத்தை-தருமத்தையும், இன்பம்-சுகத்தையும், நலத்தை-
ழகையும், ஞானத்தை-விவேகத்தையும், மிக்க-மிகுதியாகிய, பற்
லர்-அநேகருடைய, உற[illegible] பொல்லா-கெட்டதாகிய,
கை - விரோதத்தை, த[illegible]ம்; திறத்தை - வலிமை
யயும், சொல் - உயர்[illegible] சொல்லுகின்ற, பெரும் - பெரிய,
ழை - கீர்த்தியையும், [illegible] எக்காலத்தும், தாள் இல்லா -
ற்றமில்லாத, பெரு[illegible]பார்வையும், பொற்பு உறும்-அழகு
ாருந்திய, கதி[illegible], வாய்ந்த-உயர்வு பொருந்திய,
ாருள் அல்லா[illegible]லாமல், பெறுவது - (உலகத்தில்
[illegible]வது, இ[illegible]லை.

[illegible] உலகத்தில் பொருளற்றவர் எவ்வித பயனையும் அடை
முடியாது. இதனை, "இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்
ரை, யெல்லாருஞ் செய்வர் சிறப்பு," "அறனீனு மின்பமு மீனுந்
னறிந்து, தீதின்றி வந்த பொருள்," "அருளில்லார்க் கவ்வுலக
லை பொருளில்லார்க், கிவ்வுலக மில்லா தியாங்கு," என்னுந்
நக்குறட் செய்யுட்களா னுணர்க. 'தவிர்த்திடும்' என்பதில் 'இடு'
திப் பொருள் விகுதி; இதனைத் துணைவினை யென்றுங் கூறுவர்.
ல சில வெனுமிவை......" என்னும் (ந. உயி. பு. ௨௦) சூத்திர
யால், 'பற்பல' என்பது, சிலமொழியீற் றகரங் கெட லகரம்
ரமாய்ப் 'பற்பல' என வந்தது. (௨)

உலுத்தன் ஒன்றுக்கு முதவா னெனல்

[பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்]

கல்லா லயமாந் தேவருமாங்
கழுதை கசடர் பொதிசுமக்கும்
கடாவோ வுழுது பயிரிடற்காங்
கட்டம் பன்றிக் கிரையாகும்

புல்லே றீசர் வாகனமாம்
 பொதியுஞ் சுமக்கும் பிணமதுவும்
பூசி முடித்து மறையோர்க்குப்
 பொருளை யீந்து புகழெய்தும்
மல்லார் குட்டிச் சுவ..ர்தானு
 மறைவா மாடு ..ய்த்திடற்காம்
மதியாத் துடைப்பந் தி....தோறு
 மாட கூடங் களைவிள..கும்
அல்லா ருலுத்த னெதற்குதவு
 மவனுக் கிணையிங் கெதுவுமிலை
யவனைக் குறித்துக் கூ..மிடத்
 தவனுக் கவனே சரிதானே.

(ப-ரை) கல் - கல்லும், ஆலயமாம் - (திருப்பணி செய்வோ தன்னை எடுத்துக் கட்டுவதனுல்) சிறந்த கோவிலாகும்; தேவரு ஆம்-(மனிதர் வணங்குதற் பொருட்டுத் தன்னைத் தேவர்களி உருவமாக வகுத்துப் பிரதிஷ்டை செய்தால்) கடவுளரு மாகு கழுதை-(மிருகங்களிற் ருழ்ந்த) கழுதையும், கசடர்-(வண்ணர் மு லிய) இழிசனர்களுடைய, பொதி சுமக்கும் - மூட்டையைச் சுமந் செல்லும்; கடாவோ - எருமைக்கடாவோ, உழுது - (பயிர்த் தொ லுடையார்) உழவுத்தொழில் செய்து, பயிர் இடற்கு-பயிரிட்டு ஜீவி ப்பதற்கு, ஆம்-உதவியாகும்; கட்டம்-(கண்ணுற் பார்க்கவுந் தகா மலமும், பன்றிக்கு-வராகத்திற்கு, இரை ஆகும்-உணவாகும்; பு அற்பமாகிய, ஏறு-எருதும், ஈசர் - பரமசிவக் கடவுளுக்கு, வாகன ஆம்-ஊர்தியாகும்; (அஃதின்றிப்) பொதியும்-மூட்டையையும், சும கும் - தாங்கிச் செல்லும்; பிணமதுவும் - (உயிரற்ற) பிணமும், பூசி (தன்மேல் சந்தனக் குழம்பு முதலியவற்றைச் சுற்றத்தார் பூச முடித்து-(மலர்முதலியன) முடிக்க, மறையோர்க்கு-வேதியர்க

ரு, பொருளை-திரவியத்தை, ஈந்து-(தன்பொருட்டுத்) தருமமாகக் ாடுக்க, (இச் செய்கைகளுக் குரியதாய்) புகழ் எய்தும்-கீர்த்தியை டையும்; மல் ஆர்-வலிமை பொருந்திய, நட்டிச் சுவர்தானும்-சிறு ரும், மறைவு ஆம்-(மலஜல முதலியன கழிப்போர்க்கு) மறை -மாகும்; (அன்றியும்) ... ரு ..., ...ய்த்திடற்கு ஆம் - (தினவு) உராய்தற்கும் உதவி... ...(உயர்வாக) மதிக்கப்படாத, டைப்பம்-விளக்குமா... ...றும் - நாடோறும், மாடம்- பரிகைகளை யுடை..., ... - வீடுகளை, விளக்கும் - (மாசு கிப்) பிரகாசிக்கச் ...ஆர்-(மனத்தில்) இருள் பொருந் , உலுத்தன் - உலோப குண...முடையவன், எதற்கு-எக் காரியத்தி ... ... - ...பயோக மாவான்? (ஒன்றுக்கு முதவான்); அவனு - ... ...ழிவடைந்த அவ் வுலோபனுக்கு, இங்கு-இவ் வுலகத் , எதுவும்-எந்தத் தாழ்ந்த பொருளும், இணை இல்லை-நிக ரில்லை; ...க் ...து - அப் பாவியைக் குறிப்பிட்டு, கூறுமிடத்து - ணை சொல்லும்போது, அவனுக்கு அவனே சரி - அவனுக்கவனே ராவான்.

(வி-ரை) மலமும் பன்றிக் குணவாகும் உலுத்தன் ஒன்றுக்கு தவா னெனவே, அவன் மலத்தினுந் தாழ்ந்தவ னென்பதாயிற்று த்தகைய உலோபி உலகத்தி லிருப்பதாற் பய னொன்றுமில்லை; னை, "ஓயாமற் பொய்சொல்வர், நல்லோரை நிந்திப்ப ருற்றுப் பற்ற, தாயாரை வைவர் சதியா யிரஞ்செய்வர் சாத்திரங்க, ளாயார் றர்க்குப காரஞ்செய் யார்தம்மை யண்டினர்க்கொன், றீயா ரிருக் தன்ன போயென்ன காண்கச்சி யேகம்பனே'' என்னும் பட்டினத் கள் செய்யுளா னுணர்க. தேவருமாம், பொதியுஞ் சுமக்கும், ய்த்திடற்குமாம் என்பவற்றி லுள்ள உம்மைகள் இறந்தது தழுவிய சவும்மைகள்; மற்றைய வும்மைக ளெல்லாம் இழிவு சிறப்புப் ாருளன. "உவப்பினு முயர்வினு....." (ச. பொ. உஅ) என்னுஞ்

சூத்திர விதிபற்றி உயர்வினுல், 'ஈசன்' என்னும் ஒருமைப்பால் 'ஈ
எனப் பன்மைப் பாலாயிற்று. பூச, முடிக்க, ஈய என்னும் செய
னெச்சங்கள், "சொற் றிரியினும் பொருடிரியா வினைக்குறை," (
வி-உஎ) என்னுஞ் சூத்திர விதியால் செய்தெ னெஞ்சங்களா
திரிந்துவந்தன. (

புத்திரரைப் படிப்பியாது வளர்த்தல் தீங்கென்பது

[கலி விருத்தம்]

மாலினு லிருவரு மருவி மாசிலாப்
பாலனைப் பயந்தபின் படிப்பி யாதுயர்
தாலமேற் செல்வமா வளர்த்தல் தங்கட்கோர்
காலனை வளர்க்கின்ற காட்சி போலுமால்.

(ப-ரை) மாலினுல்-விருப்பத்தினுல், இருவரும் - தாய்தந்தை
யாகிய இருவரும், மருவி-கூடி, மாசு இல்லா-குற்றமற்ற, பாலனை
புத்திரனை, பயந்தபின்-பெற்றபின், படிப்பியாது-(உரிய பருவத்
அவனுக்கு) வித்தியாப்பியாசஞ் செய்வியாமல், உயர் - மேலான
தாலமேல்-புவியின்மீது, (உயர்ந்த உணவுகளை உண்பித்து ஆடை
யாபரணங்களை யணிந்து) செல்வமாக-சீராக, வளர்த்தல் - (அவனை
வளர்ப்பது, (எதை நிகர்க்குமெனில்) தங்கட்கு-(தாய்தந்தையராகிய
தங்களுக்கு, (இடையூறு செய்யும்பொருட்டு) ஓர் காலனை-ஓர் எமனை
வளர்க்கின்ற - வளர்த்துவரும், காட்சி போலும்-செய்கையின் தோ
றத்தை நிகர்க்கும்,

(வி-ரை) புத்திரனைப் படிப்பியாமல் செல்வத்துடன் வளர்த்
வந்தால் அச் செல்வச்செருக்கால் அவன் புத்தி கெட்டுத் துஷ்டனு
அடாத காரியங்களைச் செய்து தாய் தந்தையர் தளர்ச்சி யடைந்
விருத்தாப்பிய காலத்தில் அவர்களையுந் துன்புறுத்துவா னுதலின்
அவனை அவ்வாறு விவேகங் கெட வளர்த்தல் உயிர்கொல்லும் எமனை

ார்ப்பது போலாம். எத்தனையோ பேதையர் அறிவீனத்தால் தற்
பருமை கொண்டு பிள்ளைகளுக்குக் கல்வி கற்பியாமலும், புத்தி கற்
க் கொடுக்காமலும், 'அவர்கள் அதிகமாகப் படித்தால் இளைத்துப்
ாவார்கள்'என்று அவர்களை வீட்டில் வைத்து இளமையில்இஷ்டம்
ால் விளையாடவிட்டுக் கண்டகண்ட உணவுகளையெல்லா மூட்டித்
திரடையச் செய்து, பின்னர் அவர்களுக்கு யௌவன பருவம்
து தாங்கள் தளர்ந்தவுடன் அவர்கள் வேசிக்கள்ளராய்ப் பொருளைத்
ர்வினியோகஞ் செய்தலோடு தங்களுக்கும் உணவு கொடாமல்
னந்தோறும் தங்களை நையப்புடைக்க எண்ணிலாத் துயரடைகின்
ார். ஆகலின், புத்திரரை இளம் பருவத்திலேயே சீர்ப்படுத்துதல்
தந்தையர் கடனும். ஆல் - அசை. (அ)

புதல்வர்க்குப் புத்தி கற்பியாத தாய் தந்தையர்
அவர்களுக்குச் சத்துருக்க ளென்பது

[இதுவுமது]

தீதுநன் றறிகிலாச் சேய ரென்செய்வார்
கோதற வவரைநன் னெறியிற் கூட்டிடா
தேதங்க ளவர்முன்செய் திழிவைக் கற்பிக்குந்
தாதைதாய் புதல்வர்க்குச் சத்து ருக்களே.

(ப-ரை) தீது - தீங்கினையும், நன்று - நன்மையையும், அறி
லா - (இன்னது தீது, இன்னது நன்று என்று) பகுத்தறியாமல்
னம்போனபடி கெட்ட வழியில் நடக்கின்ற, சேயர்-புத்திரர், என்
ய்வார் - (அவர்கள் குற்ற நீங்குதற்கு) என்ன உபாயத்தைச் செய்
ர்கள்?,(அவர்கள் மன முழுதுங் கெட்டிருப்பதால் அதனை நல்வழி
ற் திருப்புதல் அவர்களா லியலாது; அவர்களை நிந்திப்பதிற் பய
ல்லை; அவர்கள் இவ்வாறு கெட்டதற்குக் காரணம் அவர்களுடைய
ய் தந்தையர் அவர்களுக்கு நல்லொழுக்கங்களைக் கற்றுக்கொடாமல்
ப செயல்களைக் கற்றுக்கொடுத்ததேயாம்; ஆதலால்) கோது அற -

குற்றம் நீங்க, அவரை - அப் புதல்வரை, நல் நெறியில் - நல்ல வ
யில், கூட்டிடாது-நடக்கும்படிச் சேர்க்காமல், அவர் முன்-அவர்க
க்கு முன்னே, எதங்கள் செய்து - பல குற்றமான செய்கைகளை
தாங்களே நடத்திக் காட்டி, இழிவை - தாழ்மையான செய்கை
கற்பிக்கும் - அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும், தாதை-தகப்பனு
தாய் - அன்னையும், புதல்வர்க்கு-அப் புத்திரர்களுக்கு, சத்துருக்க
விரோதிகளாவர்; (ஆதலால், புத்திரர்க்கு செய்தால் இவர்களை
நிந்திக்கவேண்டும்).

(வி - ரை) புத்திரர் நல்வழியில் நடக்கத்தக்கவர்களா யிருந்
லும் சில குடும்பங்களில் தாய்தந்தையருடைய துர்ச் செய்கை
பார்த்து அவர்களும் கெட்டுப்போவார்கள்; எப்படியெனில், ஒருவ
தன் புத்திரன் பார்த்திருக்க மதுபானம் பண்ணினால், அப் புத
னும் அவ்வாறே செய்யத் தொடங்குவான்; ஆதலால், தாய்தந்தை
இழி தொழிலை யுடையவர்களா யிருந்தாலும் புத்திரருக்கு முன்
அதனைச் செய்யாதிருத்தல் நலமாம்; அப்படி யிருப்பின் புத்தி
கெடார். இதனை யறியாத பேதையர் தாமே கெட்ட செய்கை
நடத்திக் காட்டிப் புத்திரரைக் கெடுத்துப் பின் வருந்துவர். (

புத்திரனு லடையும் பயன்

[இதுவுமது]

மைந்த னைப்பெறு கின்றது மாசிலாப்
புந்தி யன்பொடு போற்றி வளர்ப்பதுந்
தந்தை மாண்டுழித் தன்முறைக் கேற்பன
அந்த மாங்கட னாற்றுதற் கேயன்றோ.

(ப - ரை) மைந்தனை - புத்திரனை, பெறுகின்றதும் (தந்
யானவன்) பெறுவதும், மாசு இல்லா - குற்றமற்ற, புந்தியொடு
புத்தியுடனும், அன்பொடு - அன்புடனும், போற்றி - (அவனை

ணி, வளர்ப்பதும் - வளர்த்து வருவதும், (எதற்காகவெனில்) தை - அத் தகப்பன், மாண்டுழி - இறந்தபோது, தன் முறைக்கு- னுடைய குலாசாரத்துக்கு, ஏற்பன - பொருந்துவனவாகிய, ந்தம் ஆம் - அழகான, கடன் - ஈமக்கடன் பிதிர்க்கடன் முதலிய றை, ஆற்றுதற்கே - செய்தற்கேயாம்; (ஆதலால், புத்திரன் தைக்குரிய கடன்களை அவசியம் செய்யவேண்டும்).

(வி - ரை) தந்தை இறந்தபின் புத்திரன் அவனுக்குச் செய்ய வண்டிய சிராத்த முதலிய கர்மங்களைத் தவறாது செய்து வருவா ின் அத் தந்தை மேலுலகத்தில் நன்மை யடைவான்; அதன்பொரு ட அத்தந்தைபுத்திரப்பேற்றைவிரும்பி அருந்தவ முயன்று புதல்வ ப் பெறுகின்றான். ஆதலின், புத்திரன் தந்தைக்குரிய கடனைத் செய்தல் அவசியமாம்; அவ்வாறு செய்யாத புத்திரன் பிறந் னில்லை; இங்குக் கூறியபடி புத்திரரால் தந்தையர்க்கு நன் ண்டாமென்பதை, "எழுபிறப்புந் தீயவை தீண்டா பழி பிறங் ப், பண்புடை மக்கட் பெறின்," என்னும் வள்ளுவர் வாக்கா ணர்க.

"முக்கா லத்தினு மொத்தியல் பொருளைச், செப்புவர் நிகழுங் லத் தானே" (ந பொ. கஉ) என்னுஞ் சூத்திர விதியால், பெறு ற்றொழில் மூன்று காலத்திற்கு முரியதாதலின் நிகழ்கால மேற்று ந்தது. ஓடு என்பதை புந்தி, அன்பு என்னும் இரண்டிடத்துங் ட்டுக; உழி-இடம்; இஃது இங்குச் சமயத்தை யுணர்த்திற்று. ன்றே - அசை. (சு)

இயற்கைக்கு விரோதமாக நடப்போர் சுகமடையா ரேன்பது

[நேரிசை வெண்பா]

நிட்டூர மாக நிதிதேடு மன்னவனும்
இட்டதனை மெச்சா விரப்போனும்—முட்டவே

கூசிநிலை நில்லாக் குலக்கொடியுங் கூசிய
வேசியுங் கெட்டு விடும்.

(ப - ரை) நிட்டூரம் ஆக - (தன்னிடத்தே மிகவும்) கொடு
யுண்டாக, (அதாவது: தான் மிகவுங் கொடுமையுடையவனாய்க்
களை வருத்தி) நிதி தேடும் - பகுதிப்பொருளைச் சேகரிக்கின்ற,
னவனும் - அரசனும், கெட்டுவிடும்-கெட்டொழிவான்; இட்டதை
(தனக்குக்) கொடுத்ததை, மெச்சா-(போதுமென்று கொண்டாடி
திருப்தி யடையாத, இரப்போனும் - யாசகனும், கெட்டுவிடும் - (
மடையாமற்) கெடுவான்; மூட்ட - (பர புருஷரிடத்தில்) நெரு
கூசி - கூச்சத்தை யடைந்து, நிலை-(கணவன் கட்டளைக் கடங்கி
த்தலாகிய) கற்புநிலையிலே, நில்லா - நிற்காத, குலக்கொடியும் -
மகளும், கெட்டுவிடும்-கெடுவோள்; கூசிய - (தன்னை விரும்பி வ
ரிடத்து நெருங்கிப் பேசுதற்கு) நாணிய, வேசியும் - பரத்தைய
கெட்டுவிடும் - கெட்டுப்போவாள்.

(வி - ரை) மன்னன் செங்கோன்முறை தவறிக் குடிகளுக்கு
தீங்கு செய்வானாயின், அவன் நிச்சயமாகக் கெடுவான்; "கூழு
குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச், சூழாது செய்யு மரசு," எ
பது திருக்குறள். கிடைத்தவரையில் திருப்தி யடையாத யாசக
பலராலும் வெறுக்கப்படுவானாதலின் பின்னர் அவன் ஒன்று
கிடையாது வருந்துவான். பரபுருஷரிடத்து அருவருப்புக் கொள்ள
தவளாய் நாணத்தைக் கைவிட்டுப் புருஷன் கட்டளைப்படி நடவாத
ளும் தீங்கடைவள்; இத்தகைய அடக்கமற்ற பெண்களை ஒருவ
கட்டிக்கொள்வது மடியில் நெருப்பை வைத்திருப்பது போலாம்
இதனை, "துடியிற் பெண்டிர் மடியி னெருப்பு," என்பதனா லுணர்
வேசி, பிற ரினிமை யடையும்படி பேசி அவரை மயக்கிப் பொருள்
கவர்ந்து ஜீவிப்பவளாதலின் அவள் வெட்கத்தை யடைவது அ
ளுடைய பிழைப்புக்குக் கேடாம்.

இட்டது - வினையாலணையும் பெயர். கொடி - உவமையாகு
பர். "பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற், செல்லா
ஞ் செய்யுமென் முற்றே" (ந-வி-உக) என்னுஞ் சூத்திர விதி
, 'கெட்டுவிடும்' என்கிற தொடர் பலர்பாற் படர்க்கையோடு
ந்து முடியாதாதலின் நான்கிடத்துந் தனித் தனியே கூட்டப்
டது. 'கெட்டுவிடும்' என்பதில் 'விடு' துணிவுப்பொருளை யுணர்த்
விகுதி; இஃது உம் என்னும் படர்க்கை வினைமுற்று விகுதி
டு சேர்ந்து, 'விடும்' என்றாயது. (எ)

உரியோரும் சத்துருக்களாகு மியல்பு

[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

...படு பிதாவு மென்றுங் கற்பினிற் றவறித் தீங்கிற்
...படு மன்னை தானு முயர்ந்திடு மழகு தானே
...ர்ந்திடும் பாரி வித்தை யறிந்துகல் லாத பிள்ளை
...ங்கட லுலகுள் ளோர்க்குச் சார்ந்தசத் துருக்க ளன்றே.

(ப-ரை) தடம் - விசாலமாகிய, கடல் - சமுத்திரத்தாற் சூழப்
..., உலகு - உலகத்தில், உள்ளோர்க்கு - இருக்கின்ற மனிதர்க்கு,
ன் படு-(கையி லிருக்கும் பொருளையு மழித்துக்) கடனுக் குள்ளா
ற, பிதாவும் - தந்தையும்; என்றும் - எப்பொழுதும், கற்பினில்-
விரதா தர்மத்தில், தவறி-தவறுதலடைந்து, தீங்கிற்கு - (வியபி
ம் முதலிய) கெட்ட செய்கைகளுக்கு, உடன்படு-இணங்கி நடக்
ற, அன்னைதானும் - மாதாவும்; உயர்ந்திடும் - மேலாகும், அழகு-
கானது, அடர்ந்திடும் - சேர்ந்து நிறைந்திருக்கின்ற, பாரி-மனை
ரும்; வித்தை - சாஸ்திரக் கல்விகளை, அறிந்து-ஆராய்ந்தறிந்து,
லாத - படிக்காத, பிள்ளை - புத்திரனும்; (உரியவர்களா யிருந்தா
) சார்ந்த-நீங்கு பொருந்திய, சத்துருக்கள்-பகைவ ராவார்கள்.

(வி-ரை) பிதா கடன்படுவோனுகில் பிந்திய காலத்தில் அக் கட புத்திரனுக்கு மிக்க துன்பத்தைச் செய்யுமாதலால் அப் பிதா அப் பு திரனுக்குச் சத்துருவே யாவான்; தாய் கற்புநிலை தவறியவளா யிரு தால் அச் செய்கை புத்திரனுக்கு மிக்க மானக்கேட்டை யுண்டாக் அவன் அவமானத்தைச் சகிக்காமல் தன்னுயிரை மாய்த்துக் கொள் தற்கு மேதுவா மாதலின் அவளும் சத்துரு வாவாள்; மிக்க அழ பொருந்திய மனையாள் சற்குண முடையவளா யிருந்தாலும் அ ளுடைய அழகு பலராலும் விரும்பக் கூடியதா யிருத்தலின் அ ளுக்குத் தீயரால் ஒரு சமயம் துன்ப நேருமாதலின், அதனுல் தி ப்தி யுண்டாவதற் கிடமில்லாமற்போம்; ஆதலால், அவளும் சத்து வை நிகர்த்தவ ளாவாள்; ஆயினும், இக் கருத்தைக்கொண்டு அழ டைய ஸ்திரீகளை மணஞ்செய்தல் தீங்கென்று கருதலாகாது; இ அழகுடைய ஸ்திரீகளைப் பாதுகாக்கும் சக்தியற்றவர்களுக்கும், அவ களை இஷ்டம்போல் வெளியேறித் திரியும்படி விடும் நூதன நாகரிக சாரர்களுக்கும் கூறப்பட்டதாதலின், இத்தகையினர்க்கே அவள் ச திருபோலாவா ளென்றும், அவளைப் பாதுகாக்கும் சக்தி யுடையவ களுக்குத் திருப்தியைச் செய்பவளாவா ளென்றுங் கொள்க. அ குடைய ஸ்திரீகளைப் பொன்னைப்போலப் போற்றுவார் பெரும்பான் மையும் அவர்களால் மனக்களிப் படைவதையும், அவர்களை இஷ்ட படி நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு ஆகிய குணங்களை விட்டு வெ யேறித் திரியும்படி விடுவோர் அவர்களுக்கு நேரும் பல மானக்கே டால் பெரும்பான்மையும் சகிக்கவொண்ணுத் துயரடைவதையும் நா பிரத்தியக்ஷமாகப் பார்க்கிறோம். ஜனங்கள் நெருக்கமாகக் கூடு விசேஷ காலங்களில் இவ்விஷயத்தின் உண்மையைப் புத்திமான்கள் நன்கு தெரிந்து கொள்ளலாம். கல்வியறிவில்லாத பிள்ளைகள் தீ வழிகளிற் புகுந்து எக்காலத்தும் தந்தைக்கு மிக்க பழிப்பை யுண்ட க்குவார்களாதலின் அவர்களும் சத்துருக்களே யாவர். 'அன்னை த

ம்' என்பதில், தான்-அசை. 'அழகுதானே' என்பதிலும், தான்-
சை. 'அடர்ந்திடும்' என்பதில், 'இடும்' என்பது துணைவினை.
லகுள்ளோர்-ஏழாம் வேற்றுமைத்தொகை. அன்றே-ஈற்றசை. ()

ழிவான தானத்தி னியல்பும், கெட்ட மனையா ளியல்பும்,
தாழ்ந்த சிநேகத்தி னியல்பும்

[நேரிசை வெண்பா]

ஏசி யிடலி னிடாமையே நன்றெதிரிற்
பேசு மனையாளிற் பேய்நன்று—நேசமிலா
வங்கணத்தி னன்று வலியபகை வாழ்வில்லாச்
சங்கடத்திற் சாவதே நன்று.

(ப - ரை) ஏசி - (உலகத்தில் யாசகரை ஒருவர்) பலவிதமாக
இகழ்ந்து பேசி, இடலின்-(பின்னர்) பொருளை அவர்க்குக் கொடுப்ப
தைக் காட்டினும், இடாமையே - கொடாமலிருப்பதே, நன்று -
நன்மையாம்; எதிரில் - (கணவனுக்கு) நேரில், பேசும் - எதிர்த்துப்
பேசும், மனையாளின் - மனைவியைக் காட்டினும், பேய் நன்று -
(பலவித தீங்குகளைச் செய்யும்) பேயே நல்லதாகும்; நேசம் இல்லா-
அன்பில்லாத, வங்கணத்தின் - உறவைக்காட்டினும், வலிய-வலிமை
யுள்ளிய, பகை நன்று - விரோதமே நல்லதாகும்; வாழ்வு இல்லா -
(உலகத்திற் செல்வம் முதலியவற்றைப் பெற்றுச் சுகமாக) வாழ்த
லில்லாத, சங்கடத்தின்-துன்பத்தைக் காட்டினும், சாவதே - இறந்து
போவதே, நன்று - நல்லதாம்.

(வி - ரை) முகமலர்ந்து கொடுக்கும் தானமே சிறந்ததாதலின்
அப்படியே கொடுக்கவேண்டும்; அவ்வாறு கொடாமல் யாசகரை நிந்
தித்துக் கொடுத்தலாற் பய னில்லை; "அகனமர்ந் தீதலி னன்றே
முகனமர்ந், தின்சொல னாகப் பெறின்," என்பது திருக்குறள். கண

வன் வார்த்தைக்கு மாறு பேசும் மனையாள் பேயினுந் தாழ்ந்தவளாத லால் அவளை மணந்துகொள்வதினும் பேயை மணந்துகொள்வது நலமாம். உள்ளன்பில்லாத நேயத்தால் ஒரு பயனு மில்லையாதலின் அதனினும் பகையே நன்றாம்; "முகநக நட்பது நட்பன்று நெஞ் சத், தகநக நட்பது நட்பு," என்னுந் திருக்குறள் இதனை வலியுறுத் தும். சுகவாழ்வில்லார் உலகத்தி லிருப்பதாற் பயனில்லை யாதலின் அவர் இறப்பதே நன்றாம்.

இடலின், மனையாளின், வங்கணத்தின், சங்கடத்தின் என்ப வற்றிலுள்ள ஐந்தாம் வேற்றுமை இன்னுருபுகள் எல்லைப்பொரு ளன. (கூ)

மானிடப்பிறவி யின்பம் அற்ப மென்பது

[அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்]

அடுகரி தொடர வீழ வைந்தலை நாகங் காண
விடிகிணற் றறுகின் வேரைப் பற்றிநான் றிடவவ் வேரைக்
கடுகவோ ரெலியும் வந்து கறித்திட வதினின் றேனுக்
கிடைதுளித் தேனக் கின்பம் போலுமிப் பிறவி யின்பம்.

(ப - ரை) இப் பிறவி - இம் மானிடப் பிறவியாகிய மனித னுடைய, இன்பம்-அற்ப சுகமானது, (எதை நிகர்க்குமெனில்) அடு-கொலை செய்கின்ற, கரி-ஒரு யானையானது, தொடர-(ஒரு காட்டில் ஒரு மனிதனைக் கொல்லக் கருதிப்) பின்பற்றித் துரத்த, (அதைக் கண்டு அம் மனிதன் பயந்தோடி) இடி கிணற்று - இடிந்து வீழ் கின்ற (ஒரு பழமையான) கிணற்றிலே, (தொங்கிக்கொண் டிருந்த) அறுகின் வேரை - அறுகம்புல்லின் வேரை, பற்றி - பிடித்துக்கொ ண்டு, வீழ - பாய்ந்திறங்க, (அத் தருணத்தில் அக் கிணற்றி னடியிற் கிடந்த) ஐந்தலை நாகம்-ஐந்தலை யரவமானது, காண-அவனைக் கண்டு சீற, (அதனால் அம் மனிதன் அக் கிணற்றிற்குள்ளே விழாமல் அறு

ின் வேரைப் பற்றினபடியே) நான்றிட - தொங்கிக்கொண்டிருக்க, யானையும் வந்து மேலே நிற்க அப்போது) அவ் வேரை - அவன் பற்றித் தொங்கும் அவ் வறுகின் வேரை, ஓர் எலியும் - ஒரு எலியும், ந்து - அங்குச் சேர்ந்து, கடுக-வேகமாக, கறித்திட-கடிக்க, அதில் - க் கிணற்றில், நின்றோனுக்கு - (அறுகின் வேரைப்பற்றி அந்தர ாக) நின்ற அம் மனிதனுக்கு, (மேலுள்ள மரத்திற் சார்ந்த தேன் ட்டி விருந்து தோள்மீது ஒரு துளி தேன் வீழ) இடை - இவ் ாபத்துக்களிடையே, துளி தேன் - அத் துளியாகிய தேனை, நக்கு இன்பம் போலும் - அவன் நக்குவதனு லேற்படும் அற்ப இன்பத்தை கர்க்கும்.

(வி - ரை) "ஒரு மனிதன் ஒரு காட்டினிடையே செல்லும் போது அவனை ஒரு யானை கண்டு துரத்த, அதற்கஞ்சி அவனோடி ரு இடிகிணற்றிற் குதிக்க உத்தேசிக்கையில், அக் கிணற்றினடியில் க்தலைநாகங் கிடக்கக் கண்டு அதில் வீழ்ந்தாலும் அபாயம் வரு மென் றெண்ணி மேலிருந்து அதிற் றொங்கிக்கொண்டிருந்த அறு ின் வேரைப் பற்றிக்கொண்டு அக்கிணற்றினடுவே தொங்க, யானை ம் வந்து கோபத்தோடு மேலே நின்றது; அத்தருணத்தில் அவனால் ற்றப்பட்டிருந்த அறுகின் வேரை ஒரு எலி வந்து கடித் தறுத்தது; ப்போது அம் மனிதன், 'இப்போதோ நாம் பற்றியிருக்கும் அறு ம் அறுபடப்போகின்றது; கீழே குதிக்கலாமென்றாலோ நாகங் ிடக்கின்றது; மேலேறலா மென்றாலோ யானை நிற்கின்றது; ஆத ால், இன்னும் சிறிது நேரத்திற்குள் எவ்வகையினாலாவது நாம் யிர் துறப்பது நிச்சயம்,' என்று உறுதிகொண்டான்; அத் தருணத் ில் அவன் தலைக்குமேல் வளர்ந்திருந்த மரக்கிளையில் சார்ந்த தேன் ட்டிவிருந்து ஒரு துளி தேன் அவனுடைய தோண்மீது விழுந் து; அவ்வாறு விழுந்த மாத்திரத்தில் அவன் இவ்விதம் பல ஆபத் க்களுக் கிடையிலிருந்தும், தான் சாவதற்குள் அத் தேனை நக்கி

அதன் இனிமையை அனுபவிக்கலா மென்று விரும்பி அத் தேன் றுளியை நாவினால் நக்கினான்," என்பது உலகத்தின்பம் நிலை யாமையைப்பற்றிக் கூறும் பழைய கதைகளுள் ஒன்று. மானிட ஜென்மத்திற் கேற்படும் உலகவின்பம், பிணி, மூப்பு, சாக்காடென் னும் பல ஆபத்துக்களுக் கிடையில் சிறிது காலம் ஏற்பட் டழியக் கூடிய அற்பவின்ப மாதலின் அது மேற் கூறியபடி தேன் றுளியை நக்கி யவ னடைந்த இன்பத்தைப்போல் மிகவும் தாழ்ந்த வின்பமாம். ஆதலின், மானிடராகப் பிறந்த ஒவ்வொருவரும் நிலையற்றதாகிய இவ் வுலக வின்பத்தைப் பெரிதாக நினையாமல் எப்பொழுதும் நிலை ப்பதான பேரின்பத்தைத் தேடவேண்டும்.

அடு கரி-வினைத்தொகை. இடி கிணறு-வினைத்தொகை. துளி தேன் - பண்புத்தொகை. பிறவி: இதில் வி-தொழிற்பெயர் விகுதி பிறவி யென்னும் இத் தொழிற்பெயர் ஆகுபெயராய் அப் பிறப்பை யுடைய மனிதனை யுணர்த்திற்று. 'எலியும்' என்பதி லுள்ள உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை. (க0

பிரயோசன மில்லாதவை

[நேரிசை வெண்பா]

மாடில்லான் வாழ்வு மதியில்லான் வாணிபமும்
நாடில்லான் செங்கோ னடாத்துவதுங் — கூடுங்
குருவில்லா வித்தை குணமில்லாப் பெண்டும்
விருந்தில்லான் வீடும் விழல்.

(ப - ரை) மாடு இல்லான் - (உலகத்தில் பொரு ளில்லாத னுடைய, வாழ்வும்-இல்லற வாழ்க்கையும்; மதி இல்லான்-(எவரிட தும் நேயம் பாராட்டும்) அறிவில்லாதவனுடைய, வாணிபமும்-விய பாரமும்; நாடு இல்லான் - நல்ல நாடு கைவசத்தி லில்லாத அரசன் செங்கோல் நடாத்துவதும் - அரசாட்சி செய்வதும்; கூடும் - (பக்

புடன்) அடையத்தக்க, குரு இல்லா - ஆசிரிய னில்லாமற் கற்றுக் கொண்ட, வித்தை - கல்வியும்; குணம் இல்லா - நற்குண மில்லாத, பெண்டும் - பெண்ணின் கூட்டுறவும்; விருந்து இல்லான் - விருந்தினர் வரப்பெறாதவனுடைய, வீடு - இல்லமும்; விழல் - (உலகத்தில்) விழலைப்போலப் பிரயோசன மற்றவைகளாம்.

(வி - ரை) பொருளே உலகத்தில் எல்லாச் சுகத்தையும் தருவதாதலின் அஃதில்லார் வாழ்க்கை பிரயோசன மற்றதாம். வியாபாரம் செய்பவனுக்கு எவரிடத்தும் முகமலர்ந்து பேசி, அவரை வசப்படுத்தத்தக்க அறிவுவேண்டும்; அவ்வித அறிவு அவனிடத்திலையாயின் எவரும் அவனிடம் சேரார்; அதனால் அவனுடைய வியாபாரமும் நடைபெறாது; இக்காலத்திற் சில அறிவீனர் வியாபார ஸ்தானத்தி லிருந்தவுடன் தங்களைச் சக்கரவர்த்திகளென்று கருதிக்கொண்டு வருபவரோடு முகமலர்ந்து பேசாமல் எரிமுகங் காட்டி முதலிழந்து வறிஞராய்த் திரிவதை நாம் பிரத்தியக்ஷமாகப் பார்க்கின்றோம்; அத்தகையினர்க்கு இச் செய்யுள் நன்றாக அறிவுறுத்தத்தக்கது. நாடில்லாத அரசன் செங்கோல் நடத்துவது புருஷனில்லாத மங்கைக் கேற்பட்ட அழகைப்போல் பயனற்றதாம். குருவில்லாமலேற்படும் வித்தை அறிவுடையோரால் கொண்டாடப்படமாட்டாது; சான்றோன்றிகளாய்த் திரியும் சில போலிக் கவிஞர் பெரியோரால் இகழப்படுவது நிச்சயம். குணமில்லாப் பெண்ணோடு சேர்ந்து இல்லறம் நடத்துவதும் பயனற்றதாம். தினந்தோறும் விருந்தினரை உபசரிக்கும் இல்லமே சிறந்ததாம்; அஃதில்லாதவன் வீடு இருந்தும் பயனற்றதாம்; "அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து, நல்விருந் தோம்புவா னில்," என்னும் திருக்குறளால் விருந்தி னுயர்வு உணரப்படும்.

நடத்துவது - நடாத்துவது என இடை நீண்டது. பெண்டு - ஆகுபெயராய்ப் பெண்ணின் உறவை யுணர்த்திற்று; பின்னர் அஃறிணை முடிபாக முடிக்கவேண்டி யிருப்பதால் இங்ஙனம் பொருள்

கொள்ளப்பட்டது. விருந்து - புதுமை; இது ஆகுபெயராய்ப் பு
யவர் என்று பொருள்படும் விருத்தினரை யுணர்த்திற்று. விழல்
ஒருவகைப் புல்; இஃது ஒன்றுக்கு முதவாதது. உம்மைகளெல்லா
எண்ணும்மைகள். (கக

வெளியிடக் கூடாதவைகள்

[எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்]

மந்திரந் தன்னைப் பிறரவ மதித்தல்
 மகளிரைச் சேர்தல்வஞ் சனைதன்
நந்தலி லாயுள் பிறந்தநா ளில்லி
 னண்ணிய குற்றநீ ணிதியம்
முந்திய கற்பின் மனைவிதன் குணங்கண்
 மொழிந்தவிவ் வொன்பது மாவி
சிந்துற வரினும் பிறரொடு மொழித
 றீதெனவுரைப்பரே தெளிந்தோர்.

(ப - ரை) மந்திரம் - (ஒருவன், தனக்கு ஆசிரிய னுபதேசித்த
இரகசியப் பொருளாகிய), மந்திரமும்; தன்னை —, பிறர்-அன்னியர்,
அவமதித்தல் - நன்குமதியாமல் நிந்தித்தலும் (அதாவது நிந்திக்கும்
மானக்கேடான செய்கையும்); மகளிரை - உரிய பெண்களை, சேர்
தல் - கூடுதலாகிய இரகசியச் செய்கையும்; வஞ்சனை -(தான் கொடி
யவனுகிய எதிரிக்குச் செய்ய நினைத்திருக்கும்) சூதான காரியமும்,
தன் - தன்னுடைய, நந்தல் இல் - குறைதலில்லாத, ஆயுள் - ஆயுள்
முடிவும்; பிறந்த நாள் - பிறந்த நக்ஷத்திரமும்; இல்லில் - தன் வீட்
டில், நண்ணிய - பொருந்திய, குற்றம் - குறைகளும்; நீள்-நீண்ட,
நிதியம் - பொருளினளவும்; முந்திய - முதன்மையாகிய, கற்பின் -
கற்பினையுடைய, மனைவிதன் - பாரியினுடைய, குணங்கள் - நற்
குணங்களும்; (ஆகிய) இவ்வொன்பதும் - இந்த ஒன்பது விசேஷங்
களையும், மொழிந்த உரிமையானதென்று பெரியோர் கூறிய, ஆவி-

தன்னுடைய உயிர், சிந்துற - சிதறி நீங்கும்படி, வரினும் - (துன்பம்) வந்தாலும், பிறரொடு - அன்னியரிடத்தில், மொழிதல் - சொல்லுதல், தீது என - தீங்காகுமென்று, தெளிந்தோர் - சாஸ்திர வுணர்ச்சிகளில் தெளிந்தவராகிய அறிவுடையோர், உரைப்பர் - சொல்லுவார்கள்; ஆதலின், இவற்றை வெளியிடுவதால் தீங்குண்டாம்.)

(வி - ரை) ஒருவன், மந்திரத்தை வெளிப்படுத்தின் அதனாலெற்படும் சித்தி யில்லாமற்போம்; தனக்கு வரும் மானக்கேட்டை வெளியிட்டால் பின்னும் அதிகமான அவமதிப்பு நேரும்; மகளிரைச் சேர்தலை வெளியிடின் மிக்க இழிவுண்டாம்; எதிரிக்குத் தான் செய்யக் கருதியிருக்கும் வஞ்சனையை வெளியிடின் அவ்வெதிரிக்கும் அது தெரிந்து தான் உத்தேசித்த காரியம் நிறைவேறுமற்போம்; தன் ஆயுள் முடிவைக் கூறின் தன் எதிரிகள் அஞ்சாமல் தன் குடும்பத்திற்குக் கேடு செய்ய ஏது வுண்டாகும்; பிறந்த நக்ஷத்திரத்தை வெளியிட்டால் எதிரிகள் தனக்குச் சூனியம் முதலியன செய்வதற்கேதுவாம்; வீட்டிற் பொருந்திய குற்றத்தை வெளியிடின் அவமதிப்புண்டாம்; பொருளினளவை வெளியிடின் விரோதிகள் தன் பலாபலந் தெரிந்து பகை முடிக்க ஏது வுண்டாம்; கற்புடைய மனைவி குணத்தை வெளியிட்டால் பொறாமையுடைய அற்பர் அக் குணத்தைக் கெடுக்க முயல்வர்.

'சிந்துற வரினும்' என்பதில் 'துன்பம்' என்னும் சொல் இடையில் இசையெச்சமாக வருவித் துரைக்கப்பட்டது. 'ஆவி சிந்துற வரினும்' என்பதின் உம்மை உயர்வுசிறப்புப் பொருளது. (கஉ)

இன்ன இன்னவரை இன்ன இன்ன சமயத்தில் துதிக்கவேண்டுமெனல்

[நேரிசை வெண்பா]

நேசனைக் காணவிடத்து நெஞ்சாரவே துதித்தல்
ஆசானை யெவ்விடத்து மப்படியே—வாச

மனையாளைப் பஞ்சணையில் மைந்தர்தமை நெஞ்சில்
வினையாளை வேலைமுடி வில்.

(ப-ரை) நேசனை-(ஒருவன் தன்னுடைய) நட்பாளனை, காணு இடத்து - காணுதவிடத்தில் (அதாவது, அவனில்லாதபோது), நெஞ் சார - மனம் பொருந்த, துதித்தல்-புகழவேண்டும்; ஆசானை-ஆசிரி யனை, எவ்விடத்தும்-எந்த விடத்திலும் (அதாவது நேரிலும் மறைவி லும்), அப்படியே துதித்தல் - அவ்விதமே புகழவேண்டும்; வாசம் - (மலர்மாலை முதலியவற்றை யணிந்திருப்பதால்) வாசனை பொருந் திய, மனையாளை - மனைவியை, பஞ்சணையில் துதித்தல்-சயனத்தில் (கூடி யிருக்குங் காலத்தில்) புகழவேண்டும்; மைந்தர்தமை - புத்திர ரை, நெஞ்சில் துதித்தல் - (எப்பொழுதும்) மனதிற்குள்ளேயே புகழ்ந்துகொள்ளவேண்டும்; வினை ஆளை - தொழிலாளியை, வேலை முடிவில் துதித்தல் - அவன் செய்யுந் தொழில் முடியுங் காலத்தில் புகழவேண்டும்.

(வி - ரை) நேசனை எதிரே துதித்தால் அது முகஸ்துதியாக முடியுமாதலின் காணுவிடத்துப் புகழ்தலே சிறப்புடைத்தாம்; ஆசான் எப்போதும் தற்பெருமை முதலியன கொள்ளாமல் பெருந் தன்மையுடையனுய்ப் புகழ்ச்சிக்குத் தக்கவாறு தன்மீது அன்பைச் செலுத்தி நல்விஷயங்களை உபதேசிக்கக் கூடியவனுதலின், அவனை எவ்விடத்தும் புகழ்வதால் நன்மையே யுண்டாம். மனையாளைப் பஞ் சணையிலன்றி எனையவிடத்துத் துதித்தால் அவள் தற்பெருமை கொண்டு நாயகனிடத்து அஞ்சுதலின்றிக் குடும்ப காரியங்களைச் சரி வர நடத்தமாட்டாளாதலின் அவளைப் பஞ்சணையில் சரசமாயிருக்குங் காலத்தில் மட்டும் துதித்தலே சிறப்புடைத்தாம். மைந்தரை மனத் திற்குளன்றி வெளியிற் புகழ வாரம்பித்தால் அவர்கள் தந்தையிடத் தச்சமின்றிப் பெருமை கொண்டு மனம் போனபடி நடக்கத் துணி வார்களாதலின் அவர்கள் எவ்வித திறமை வாய்ந்தவர்களா யிருந்தா

னும் அவர்களை மனத்திற்குள்ளேயே புகழ்ந்துகொள்ள வேண்டும். வேலையாளை அவன் செய்யும் வேலை முடிவதற்குட் புகழ்ந்தால் அவன் தற்பெருமை கொண்டு அவ் வேலையை ஒழுங்காகச் செய்து முடிக்கமாட்டா னாதலின் அவ் வேலை முடிந்த பின்பே அவ் வேலைத் திறைமையைப் பற்றி அவனைப் புகழவேண்டும்.

துதித்தல் - ஒருவகைத் தல்லீற்று வியங்கோள்; இது 'துதிக்க' என்று பொருள்படும்; இதுபற்றி 'வேண்டும்' என்னும் வியங்கோள் வாக்கியம் விரித்துப் பொரு ளுரைக்கப்பட்டது. 'மனத்துக்கண் மாசிலனாத லனைத்தற, னாகுல நீர பிற,'' என்னுந் திருக்குறட் செய்யுளில், ''மாசிலனாதல்'' என்பதற்குப் பரிமேலழகர் "மாசிலனாகுக" என்று பொருள் கூறியிருத்தலால் இது துணியப்படும். மற்றைய நான்கிடத்தும் 'துதித்தல்' என்பது கூட்டப்பட்டது. இன்னும் 'துதித்தல்' என்பதை முடிக்குஞ்சொல் எஞ்சி நின்ற இசையெச்சமெனக் கொள்ளுதலு மொன்று. (கரு)

பிறரிடத்து வெளிப்படுத்தத் தக்கவை

[எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

தருதிகொள் கடனக் கடன்றனைத் தீர்த்த
  ளுன்பொருள் கோடல்பின் பகர்தல்
மகளிரைக் கொடுத்தல் தன்னுடை யொழுக்க
  மாபிணிற் புரிந்ததன் பூவம்
புகலரு மயலோர் நற்குண மென்னப்
  புகன்றவிவ் வொன்பது மெவர்க்கு
மிகலற மறையா துரைத்திட லொழுக்கத்
  தியல்பென மொழிவர்நன் குணர்ந்தோர்.

(ப - ரை) தருதி - (உலகத்தில் ஒருவன் தன்னிடத் துண்டாகிய) உத்தம குணங்கள்; கொள் கடன் - தான் கொள்ளும் கடன்;

அக்கடன்தனைத் தீர்த்தல் - அக் கடனைத் தீர்க்கும் விவரம்; தான் பொருள் கோடல்-(வியாபாரத்தின்பொருட்டுத் தான் பிறரிடத்துப்) பொருள்களை வாங்கிக்கொள்ளுதல்; பின் - பின்னால், பகர்தல் - அப் பொருளை விலை பகர்ந்து விற்றல்; மகளிரை - பெண்களை, கொடுத் தல் - மணஞ்செய்து கொடுப்பது; தன்னுடை - தன்னுடைய, ஒழுக் கம் - ஆசாரங்கள்; மரபினில் - வரிசைக் கிரமமாக, புரிந்த - செய்த, தன் பாவம் - தன்னுடைய பாவங்கள்; புகலரும் - சொல்லுதற்கரிய, அயலோர் - அன்னியருடைய, நற்குணம் - நல்ல குணங்கள்; என் னப் புகன்ற - என்று சொல்லிய, இவ்வொன்பதும் - இந்த ஒன்பது செய்கைகளையும், இகல் அற - விரோத மில்லாமல், எவர்க்கும் - எவரிடத்தும், மறையாது-ஒளிக்காமல், உரைத்திடல் - சொல்லுதல், ஒழுக்கத்து இயல்பு என - நற்குணத்தின் இயற்கையென்று, நன்கு உணர்ந்தோர் - (உலகத்தி லேற்படும் நன்மை தீமைகளை) நன்றாக ஆராய்ந்தறிந்த பெரியோர், மொழிவர்-கூறுவார்கள்; (ஆதலின், உல கத்திற் புகழை விரும்பும் ஒவ்வொருவரும் இவ்வொன்பது காரியங் களையும் மறைக்காமல் வெளியிடவேண்டும்).

(வி - ரை) உலகத்தில் ஒருவன் தன்னிடத்துண்டாகிய நற் குணங்களை வெளிப்படுத்துவதனால் தனக்குப் பலரிடத்தும் நல்ல மதிப்புண்டாகும். தான் கடன்கொள்ளும் போது அதனைப் பலரிட த்துஞ் சொல்லிக்கொண்டால் பின்னர் ஒரு பிசகும் வராது. கடனைத் தீர்க்குங் காலத்தும் பலரறியத் தீர்க்கவேண்டும்; அவ்வாறு தீர்த் தால் கடன் கொடுத்தவன் பின்னே அழிவழக்கிட எதுவுண்டாகாது: வியாபாரத்திற்குப் பொருளை வாங்கும்போது பலரறிய வாங்கினால் பின் கணக்குத் தீர்ப்பதில் பிசகொன்று முண்டாகாது; அதை விற் குங் காலத்திலும் பலரறிய விற்றால் பொருட்காரனுக்கு விலை கொடுக்கும்போது தர்க்கமொன்றும் வாராது. பெண்ணைக் கொடுக்குங் காலத்தில் பலரறியக் கொடுத்தல் 'இன்னவனுக்கு இன்னவள்'

மனைவி' என்னும் உறுதி ஏற்படும்; "பல்லா ரறியப் பறையறைந்து நாட்கேட்டுக், கல்யாணஞ் செய்து கடிபுக்க மெல்லியல், காதன் மனையாளும்..." என்னும் நாலடிச் செய்யுளும் இதனை நன்கு விளக்கும். தன்னுடைய ஆசாரத்தை வெளிப்படுத்தினால் உலகத்தவர் தன்னை அதற்குத் தக உபசரிப்பர். தன்னுடைய பாவத்தை ஒளிக்காமல் வெளிப்படுத்தினால் "மெய் கூறுவோன்" என்ற புகழ் தனக் கேற்படுவதன்றிப் பெரியோரால் அப் பாவத்திற்குப் பரிகாரமு மேற்படும். அயலார் நற்குணத்தை வெளிப்படுத்தினால் அவர்க்கு நன்மையுண்டாவதோடு தனக்கும் 'உள்ளது கூறுவோன்' என்ற நற்பெயருண்டாகும்.

கொள்கடன்-வினைத்தொகை. கொள்தல் - என்பது "லளவேற் றுமையிற் றடவு மல்வழி, யவற்றோ டுறழ்வும் ... ..." என்னும் (ந. மெ. பு. உச) சூத்திர விதியால் நிலைமொழியீற்றுகரம் டகரமாகவும், "னலமுன் றனவும் ணளமுண் டணவு, மாகுந் தநக்க ளாயுங் காலே," என்னும் (ந. மெ. பு. ௩௪) சூத்திர விதியால் வருமொழி முதலாகிய தகரம் டகரமாகவும் திரிந்து விகாரத்தால் இடையொற்றுக் கெட்டு நிலைமொழி முதனீண்டு, 'கோடல்' என்றாயது. (கச)

தண்டனையால் பயன்றரு மிடங்கள்

[நேரிசை வெண்பா]

துர்ச்சனரும் பொன்னுந் துடியுந் துரகதமும்
அச்சமற முன்னிற்கு மாயிழையும்—நச்சரவும்
கண்டித்த வெள்ளுங் கரும்பு மிளநீருந்
தண்டித்தார்க் கன்றோ சயம்.

(ப-ரை) துர்ச்சனரும்-துன்மார்க்கரையும்; பொன்னும்-பொன்னையும்; துடியும் - பறையையும்; துரகதமும் - குதிரையையும்; அச்சம் அற - மனத்தில் பயம் நீங்க, முன்னிற்கும் - (புருஷனுக்கு)

முன்னே நின்று தைரியத்தோடு எதிர்த்துப் பேசும், ஆயிழையும் மனைவியையும்; நச்சு - நஞ்சையுடைய, அரவும்-அரவத்தையும்; கல டித்த-(செடிகளைப் பிடுங்கி யுலர்த்தி) அடித்துருத்த, எள்ளும்-எள்ளை யும்; கரும்பும் - கரும்பையும்; இளநீரும் - இளநீரையும்; தண்டித்தா க்கு-(அடித்தோ நசுக்கியோ வெட்டியோ) வருத்தினோர்க்கே, சயம் வெற்றி (அதாவது பயன்) உண்டாம்.

(வி - ரை) துன்மார்க்கர், அடித்து வருத்துவோர்க்கே இதஞ் செய்வர். பொன், உருக்கி அடித்து நீட்டினாற்றான் ஆபரணமா அமையும். பறை, கொம்பினால் அடித்தாற்றான் ஒலியைத் தரும் குதிரை, அடித்து வருத்தி ஓட்டுவோர்க்கே வசப்பட்டு நடக்கும் அடங்காப் பெண், தண்டிக்குங் கணவனுக்கே அடங்கி நடப்பாள் அரவம், தன்னைக் கொன்றவர்க்கே தன்னிடத்துள்ள இரத்தின தைக் கொடுக்கும். எள், தன்னைச் செக்கிலிட்டு நசுங்க ஆட்டுவோர் கே எண்ணெயைத் தரும். கரும்பு, தன்னை ஆலையிலிட்டுச் சிதை தாட்டுவோர்க்கே இரசத்தைத் தரும். இளநீர், தன்னை வெட்டிக் கண் திறப்பவர்க்கே மதுரமான நீரைக் கொடுக்கும்.

துர்ச்சனர், பொன் முதலியவற்றில் இரண்டனுருபுகள் தொக கன. அவற்றை ஏழாம் வேற்றுமைத் தொகையாகக் கொண்டு, 'வரு த்துவோர்க்கு, துர்ச்சனரிடத்தும், பொன்னிடத்தும், துடியிடத் தும், குதிரையினிடத்தும், ஆயிழையிடத்தும், அரவினிடத்தும், எள்ளிடத்தும், கரும்பிடத்தும், இளநீரிடத்தும் வெற்றி யுண்டாம் எனப் பொருளுரைத்தலு மொன்று. ஆயிழை-அன்மொழித்தொகை, நஞ்சு என்பது நச்சு என வலித்தல் விகாரம் பெற்றது. அன்றே - அசை.

(கரு)

இன்னவர் தாய்மா ரெனல்

[நேரிசை வெண்பா]

தன்னை யளித்தா டமையன் மனைகுருவின்
பன்னி யரசன் பயிறேவி—தன்மனையைப்

பெற்றா ளிவரையே பேசி லெவருக்கும்
நற்றாய ரென்றே நவில்.

(ப - ரை) (மனமே!) பேசில்-(நீ ஒரு மனிதனுக்குரிய தாய் மாரைப்பற்றி ஆராய்ந்து) சொல்லுமிடத்து, தன்னை அளித்தாள் - தன்னைப் பெற்றவளும்; தமையன் மனை - மூத்தோன் மனைவியும்; குருவின்-ஆசிரியனுடைய, பன்னி-பாரியும்; அரசன் பயில்-(தன்னை யாளும்) மன்னன் பழகி நேசங் கொள்ளுகின்ற, தேவி - மனைவி யும்; தன் மனையை-தன்னுடைய மனைவியை, பெற்றாள்-ஈன்ற மாமி யும்; (ஆகிய) இவரையே - இவர்களையே, நல் தாயர் என்று - நல்ல தாய்மார்களென்று, எவருக்கும்-எத்தகையினர்க்கும், நவில்-கூறுவா யாக.

(வி - ரை) 'நவில்' என்னும் ஏவலுக்குத் தகுதியாக, 'மனமே!' என்னும் விளி வருவித் துரைக்கப்பட்டது. பெற்ற தாயோடு மற் றையரையுஞ் சேர்த்து, 'நற்றாய ரென்றே நவில்' என்றதனால், தன் னைப் பெற்றவளோடு தமையன் மனைவி முதயோரையும் தாய்மார்க ளென்றே கொள்ளவேண்டு மென்பதாயிற்று.

அளித்தாள், மனை, பன்னி, தேவி, பெற்றாள் என்பவற்றில் எண்ணும்மைகள் தொக்கன. இவரையே, என்றே, என்பவற்றி லுள்ள ஏகாரங்கள் தேற்றப் பொருளன. (கக)

கல்வியறிவற்ற உலோப ரியல்பு

[நேரிசை வெண்பா]

கட்டி யடிப்போர்க்குங் கன்மீதி லேற்றுவர்க்கும்
எட்டி யடிப்போர்க் கீவரே—திட்டமுடன்
பாடுவோர்க் கீயாரே பல்லுதிரத் தாடையினிற்
போடுவோர்க் கீவார் பொருள்.

(ப - ரை) (பாடல்களின் அருமை யறியாத உலோபர்கள்) பொருள்-(தம்மிடத்துள்ள) பொருளை, திட்டமுடன்-உறுதியோடு, பாடுவோர்க்கு - (தன்னைப் புகழ்ந்து) பாடும் புலவருக்கு, ஈயார் - (மனமுவந்து) கொடார்; (பின்னை எவருக் கீவா ரெனில்) கட்டி-தம்மைக் கட்டிவைத்து, அடிப்போர்க்கும்-அடித்து வருத்திப் பொருள் கவரும் கொடுங்கோன் மன்னருக்கும்; கல்-கல்லை, மீதில் - தம் நெற்றியின்மேல், ஏற்றுவர்க்கும் - ஏற்றி அண்ணாந்து நிற்கச் செய்து துன்புறுத்துங் கொடியர்க்கும்; எட்டி-தாவிப் பாய்ந்து, அடிப்போர்க்கும் - அடித்து இரவில் வழிப்பறி செய்கின்ற திருடருக்கும், ஈவர்-தடையின்றிக் கொடுப்பார்கள்; (அன்றியும்) பல் உதிர-அவர்களுடைய பற்கள் உதிரும்படி, தாடையினில் - கன்னத்தில், போடுவோர்க்கு - கையால் போடுவோர்க்கும் (அதாவது கையா லறையும் துர்ச்சனர்க்கும்), ஈவார் கொடுப்பார்கள்.

(வி-ரை) கல்வியறிவில்லாத மூடர் தம்மை வருத்துவோர்க்கே தம் பொருளைக் கொடுப்பார்கள்; மனம் பொருந்தி வித்வான்கட்குக் கொடுக்கமாட்டார்கள்.

கல்மீதில் - இரண்டாம் வேற்றுமைத் தொகை. உலோபர் என்னும் எழுவாய் வருவிக்கப்பட்டது. (கஎ)

பேய்த்தன்மையுடையார் இன்னவ ரென்பது

[நேரிசை வெண்பா]

தன்னைப் புகழ்வானுஞ் சாட்சிசொல்லி நிற்பானும்
பொன்னைமிகத் தேடிப் புதைப்பானும்—ஒன்னலர்தம்
நண்புத்தி கேட்பானு நாணமில் லாதானும
பெண்புத்தி கேட்பானும் பேய்.

(ப-ரை) தன்னைப் புகழ்வானும்-(உலகத்தில்) தன்னைத் தானே புகழ்ந்து தற்பெருமை கொண்டு திரிபவனும்; சாட்சி சொல்லி-(எப்

பொழுதும் நியாய ஸ்தலங்களில் ஒரு கக்ஷியாரிடம் பணம் வாங்கிக்கொண்டு நியாயத்தை விட்டு நீங்கிப்)பொய் சாட்சி சொல்லி, நிற்பானும் - (அந்தக் கெட்ட வழியிலே) நிற்பவனும்; மிக - மிகுதியாக, பொன்னைத் தேடி-திரவியத்தைச் சம்பாதித்து, (அதனை நல்ல வழியிற் செலவிடாமலும், தானும் அனுபவியாமலும்) புதைப்பானும் - பூமிக்குள் புதைத்து வைப்பவனும்; ஒன்னலர்தம் - (தன்னைச் சமயம் பார்த்துக் கெடுக்கும்) பகைவர்களுடைய, நண் - (நய வஞ்சமாகப்) பொருந்திய, (அதாவது, அவர்கள் கெடுக்கும்பொருட்டு உறவினர் போல நடித்து வஞ்சனையாகக் கூறும்) புத்தி - கெட்ட புத்திகளை, கேட்பானும்-கேட்டு நடப்பவனும், நாணம் இல்லாதவனும்-மனத்தில் வெட்க மில்லாமல் பிறர் நகைக்கும் மானக் கேடான காரியங்களை நடத்தித் திரிபவனும், பெண் புத்தி-பேதைமையுடைய பெண்கள் கூறும் புத்திகளை, கேட்பானும்-கேட்டு அவர்கள் மனம்போல் நடப்பவனும், பேய்-(தோற்றத்தில் மானிடரா யிருப்பினும் செய்கையில்) பேய்போல இழி..ன்மை யுடையராவர்.

(வி-ரை) ஒருவன் எவ்வளவு சிறப்புடையனாயினும் அவன் பிறரால் புகழப்படவேண்டுமே யன்றித் தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளலாகாது; அவ்வாறு புகழ்வதால் அவமதிப் புண்டாகுமே யன்றிப் புகழ்ச்சியுண்டாகாது; "தோன்று தோற்றித் துறைபல முடிப்பினுந், தான்றற் புகழ்தல் தகுதி யன்றே,"என்பதனால் இதனை யுணர்க; இதனை யறியாதார் தாம் சிறப்பற்றவராயிருப்பினும் தம்மை உயர்ந்தவராகக் காட்டிக்கொள்ளற்பொருட்டுக் கண்டவிடத்தெல்லாம் தம்மைத் தாமே புகழ்ந்து திரிந்து அறிவுடையோரால் அவதிக்கப்படுவர். பொய்ச்சாட்சி சொல்லித் திரிபவன் பிறர் நிந்தைக் காளாவதுமன்றி மறுமையில் நரகத்தையு மடைவான். பொன்னைத் தேடிப் புதைத்தலால் ஒரு பயனு மில்லை; "பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக், கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் - கூடுவிட்

டிங், காவிதான் போயினபின் பாரே யனுபவிப்பார், பாவிகா ளந்த
பணம்,'' என்பதனு லுணர்க. பகைவர் எத்தகைய நயமான வார்த்தை
களைக் கூறினும் அவை கேட்டிற்கே ஏதுவாமாதலின் அவற்றை
கேட்டு நடப்பதால் தீங்கே வரும். நாண மில்லாமல் நடப்பவன் எ
லோராலுந் தூற்றப்படுவான். எவ்வளவு உயர்வுடையனுயினும் பெண்
புத்தி கேட்டு நடப்பவனுக்குச் சிறப்பு உண்டாகாது; இதனை, ''அ
வினையு மான்ற பொருளும் பிறவினையும், பெண்ணேவல் செய்வார்
ணில்,'' ''பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி னுணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து,'' என்னுந் திருக்குறட் செய்யு
களா னுணர்க். (கஅ

இன்ன இன்ன குணங்களையுடையாள் மனைவி யென்பது

[நேரிசை வெண்பா]

அன்னை தயையு மடியாள் பணியுமலர்ப்
பொன்னி னழகும் புவிப்பொறையும்—வன்னமுறும்
வேசி துயிலும் விறன்மந் திரிமதியும்
பேசி லிவையுடையாள் பெண்.

(ப - ரை) பேசில்-(நற்குணமுடைய பெண்ணைப் பற்றி ஆரா
ந்து) கூறுமிடத்து, அன்னை தயையும் - (புருஷனிடத்து) அன்னை
யைப் போன்ற அன்பையும்; அடியாள் பணியும் - அடிமைப் பெண்
ணைப் போன்ற பணிவிடையும்; மலர் - தாமரைமலரில் வீற்றிரு
கின்ற, பொன்னின் - இலக்குமியைப் போன்ற, அழகும்-வனப்பும்
புவி - பூமியைப் போன்ற, பொறையும் - பொறுமையும்; வன்ன
உறும் - அழகு பொருந்திய, வேசி - பரத்தையைப் போன்ற, து
லும்-சயன வின்பத்தையும், விறல்-வெற்றி பொருந்திய, மந்திரி
அமைச்சனைப் போன்ற, மதியும்-அறிவும், (ஆகிய) இவை உடை
யாள்-இவைகளை யுடையவளே, பெண்-(இல்லற நடத்துதற் குரியவ
ளென்று சொல்லத்தக்க) பெண்ணுவாள்.

(வி - ரை) ஒருவனுக்கு மனைவியா யிருப்பவள் புருஷன்மீது தாயைப்போன்ற அன்புடையவளா யிருத்தல்வேண்டும்; அவனுக்கு அடிமைப்பெண்ணைப்போலச் சலியாது தொண்டு செய்யத்தக்கவளா யிருத்தல்வேண்டும்; அழகிலும் சிறந்தவளா யிருத்தல்வேண்டும்; மானிடர் தன்னை வெட்டியும், தோண்டியும், தன்மீது மலஜலமுதலிய கழித்தும் எத்தனையோ தகாச்செய்கைகள் புரியினும் அவர்களைத் தள்ளிவிடாமல் பொறுமையோடு தாங்கும் பூமியைப்போலப் பொறுமை யுடையவளாயு மிருத்தல்வேண்டும்; சயனகாலத்தில் விலைமாதைப்போல இதமாக நடந்து இனிமை செய்யக்கூடியவளா யிருத்தல்வேண்டும்; மந்திரியைப்போலச் சமயத்தில் புத்தி கூறத்தக்கவளாயு மிருத்தல்வேண்டும்; இங்ஙன மிருப்பின் இத்தகைய பெண்ணை மணந்தவன் நடத்தும் இல்லறமானது மிகவும் திருப்தியோடு நடைபெறும்; இவளும் எல்லோராலுங் கொண்டாடப்படுவாள். பூமி பொறுமையிற் சிறந்ததென்பது, "அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை, யிகழ்வார்ப் பொறுத்த றலை," என்னும் வள்ளுவர் வாக்கா லுணரப்படும். துயில் நித்திரை; இது இடக்கரடக்கலாய்க் குறிப்பால் நித்திரை செய்யுங்காலத்தி லேற்படும் இன்பத்தை யுணர்த்திற்று. ()

தரித்திரனுக்கு மனைவியாகும் பெண்ணுக்கு மிகுந்த துன்பமெனல்

[கலி விருத்தம்]

அல்லலே பெண்ணெனப் பிறத்த லாங்கதி
னல்லலே யிளமையிற் சிறத்த லாங்கதி
னல்லலே கட்டழ குடைமை யாங்கதி
னல்லலே யிரவலர்ச் சார்பி னுறுதல்.

(ப-ரை) பெண்ணெனப் பிறத்தல்-(உலகத்தில் எல்லாப் பிறப்புக்களுள்ளும்) பெண்ணாகப் பிறப்பது, அல்லலே - துன்பமேயாம்;

ஆங்கு - அவ்வாறு பிறந்தவிடத்து, இளமையில் - இளம் பருவத்தில், சிறத்தல்-சிறந்திருத்தல்(அதாவது, மங்கைப்பருவத்தை யடைந்திருத்தல்), அதின்-அவ்வாறு பெண்ணாகப் பிறப்பதிலும், அல்லலே மிகுந்த துன்பமேயாம்; ஆங்கு - அங்ஙனம் பருவமடைந்திருக்குமிடத்து, கட்டழகு உடைமை-பேரழகுடைத்தாயிருத்தல், அதின்-அவ்வாறு பருவமடைந்திருப்பதைக் காட்டினும், அல்லலே - மிக்க துன்பமேயாம்; ஆங்கு-அங்ஙனம் அழகைப் பெற்றிருக்குமிடத்து, இரவலர் - (யாசித்துண்டு ஜீவித்திருக்கும்) தரித்திரர்களுடைய, சார்பின்-பக்கத்தில், ஆகுதல்-(அவர்களுக்கு மனைவியாக) அமைதல், அதின்-அவ்வாறு அழகைப்பெற்றடையுக் துன்பத்தைக் காட்டினும், அல்லலே - மிக்க துன்பமேயாம்.

(வி-ரை) சுயேச்சையாக நடத்த லில்லாமையாலும், ஆடவரிடத்தடங்கி யிருத்தலாலும், பிரசவவாதனை முதலிய துன்பங்களை யடைதலாலும், எல்லாப் பிறப்புக்களுள்ளும் பெண்பிறப்பு மிக்க துன்ப முடையதாம்; அங்ஙனம் பிறப்போர் பருவ மடைந்தால் அக்காலத்தில் தம் கன்னித்தன்மை யழியாமற் கற்பைக் காப்பாற்றிக் கொள்ளும் விஷயத்திலும், தனக்குரிய நாயகன் தன்னைத் தேடி மணம் புரிய வரும் வரவை எதிர்பார்க்கும் விஷயத்திலும் அவளுக்கு மிக்க கவலை யேற்படு மாதலால் துன்பம் அதிகரிக்கும்; அதனோடு அவளுக்குப் பேரழகும் அமைந்திருந்தால் துர்ச்சனர் முதலியோரால் தீங்கு நேராமல் தன்னைப் ப்ரதுகாத்துக்கொள்ளும் விஷயத்தில் இன்னும் அதிகமான துன்ப முண்டாம்; அங்ஙனம் அழகைப் பெற்றுத் துன்பத்தை யடைதலோடு, செல்வ முடையோனுக்கு அவள் மனைவியாகாமல் தரித்திரனுக்கு மனைவியானால் அவளுக்கு இஷ்டபோகங்களை அனுபவிக்க ஏதுவில்லாமற்போகு மாதலால் தன் அழகு முதலியன வீணாக மனக்கவலை அதிகரித்து இன்னும் அளவிடற்கரிய துன்ப முண்டாம். ஆதலால், பெண்கள் முதலிற் கூறிய

மூவகையாலும் துன்பத்தை யடைந்தாலும் தனவந்தனுக்கு மனைவி யாகவேண்டும்; அங்ஙனமாயின் அவர்கள் அம் மூவகையாலும் ஏற்பட்ட துன்பம் நீங்கிச் சுகம் பெறுவார்கள். இச் செய்யுட் கருத்தால் பெண்ணைக் கொடுப்போர் தகுதியுடையவனுக்கே கொடுக்கவேண்டுமென்று துணியப்படும்.

'அல்லலே' என்பவற்றிலுள்ள ஏகாரங்கள் தேற்றப்பொருளன. 'அதின்' என்பவற்றிலுள்ள ஐந்தாம் வேற்றுமை இன்னுருபுகள் பண்பளவுப் பொருளன. (உ0)

நற்குணமுடைய மனைவி, சற்புத்திரர் இவர்களின் உயர்வும், கல்வி, அறிவு இவற்றின் சிறப்பும்

[நேரிசை வெண்பா]

மனைக்கு விளக்க மடவாள் மடவாள்
தனக்குத் தகைசால் புதல்வர்—மனக்கினிய
காதற் புதல்வர்க்குக் கல்வியே கல்விக்கங்
கோதிற் புகல்சா லுணர்வு.

(ப·ரை) ஓதின் - (அறிவுடையோர் ஆராய்ந்து) சொல்லுமிடத்து, மனைக்கு - (ஒருவனுடைய) வீட்டிற்கு, விளக்கம் - பிரகாசம், மடவாள் - (நற்குண நற்செய்கைகளையுடைய பெண்ணாகிய) மனைவியேயாவள்; மடவாள் தனக்கு - (அம் மனைவியாகிய) பெண்ணுக்கு, விளக்கம் - (அவளைப் பிரகாசிக்கச்செய்யும்) தீபம், தகை சால் - நற்குணம் நிறைந்த, புதல்வர்-புத்திரர்களேயாவர்; மனக்கு இனிய-மனத்திற் கினிமையாகிய, காதல் - விருப்பத்தை யுடைய, புதல்வர்க்கு - அப் புத்திரர்களுக்கு, விளக்கம்-(அவர்களை விளக்கிக் காட்டும்) தீபம், கல்வியே - சாஸ்திரப் பயிற்சியேயாம்; கல்விக்கு - அப் படிப்புக்கு, விளக்கம் - (அதனைப் பிரகாசிக்கச் செய்யுந்) தீபம், கோதில் - குற்றமற்ற, புகழ் சால் - கீர்த்தி மிகுந்த, உணர்வு - (கல்வி கற்றதற்குத்தகல்லொழுக்கங்களை யனுசரிக்கும்) அறிவேயாம் (என்க).

(வி-ரை) நற்குண நற்செய்கைகளையுடைய மனைவியால் ஒருவனுடைய இல்லச்சிறப்பு எங்கும் விளங்குமாதலின் அவள் அவ் வீட்டிற்கு விளக்கமாவள். நல்ல புத்திரர்களால் அவர்களுடைய தாய் சிறப்புற்று எங்கும் புகழுடன் விளங்குதற் கேதுவுண்டா மாதலின் அப் புத்திரர்கள் தாய்க்கு விளக்க மாவர். புத்திரர்களைக் கல்வியே எங்கும் பிரகாசிக்கச் செய்வதாதலின் அஃது அவர்களுக்கு விளக்கமாம். கல்வியைக் கற்றாலும் நல்லறிவிருந்தால் மாத்திரம் அக் கல்வி பிரகாசிக்குமாதலின் அக் கல்விக்கு அறிவே விளக்கமாம்.

விளக்கம் நான்கிடங்களினும் கூட்டப்பட்டது. 'விளக்கம்' என்பதில் ஈற்றிலுள்ள அம் சாரியை. 'மனத்துக்கு' என்பது 'மனக்கு' என அத்துச்சாரியை குறைந்து வந்தது. 'கல்விக்கங்கு' என்பதில் 'அங்கு' என்பது அசை. "அந்திலாங் கசைநிலை யிடப்பொரு ளென்ப" (ந-இ-கஅ) என்னுஞ் சூத்திரப்படி யமைந்த ஆங்கு என்னும் அசையிடைச்சொல் இங்ஙனம் 'அங்கு' என முதல் குறுகி வந்தது. இவ்விடத்து 'அங்கு' என்பதற்கு வேறு பொரு ளின்மையால் இங்ஙனம் அஃது அசையெனக் கொள்ளப்பட்டது. 'ஓதின்' என்பதற்குத் தக' 'என்க' என்னுஞ் சொல் வருவித் துரைக்கப்பட்டது. (உக)

கொடியவனுக்கு அரசளித்தால் அவன் கேடு செய்வானென்பது

[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

துற்சனன் றனக்கு மேலாந்
துரைத்தனங் கொடுத்தா லென்றும்
சற்பனை துரோகங் கேடு
தரணியின் மிகவே செய்வான்
மற்கடந் தனக்கு நீண்ட
வாலிலே தேளுங் கொட்ட
உற்றிடங் கொள்ளி யீந்தா
லூரெலாங் கொளுத்து மன்றே.

(ப - ரை) மற்கடம் தனக்கு - (இயற்கையிலேயே பல சேஷ்டைகளைச் செய்யும்) குரங்குக்கு, நீண்ட - நீட்சி பொருந்திய, வாலிலே - வாலில், (இன்னும் அஃது அதிகமாகத் துள்ளும்படி) தேளும் கொட்ட - தேளுங் கொட்டிவிட, (அவ் வேதனையால் அது மிகவும் துள்ளும்போது) உற்று - மனம் பொருந்தி, இடம் - அதன் கையினிடத்தே, கொள்ளி ஈந்தால் - கொள்ளிக்கட்டையையும் எடுத்துக் கொடுத்துவிட்டால், (அஃது அக் கொள்ளிக்கட்டையோடு பல விடங்களிலும் தாவி) ஊர் எல்லாம்-ஊரையெல்லாம், கொளுத்தும் - (அக் கொள்ளிக்கட்டையை நீட்டிக்) கொளுத்திச் சுட்டெரிக்கும்; (அதுபோல) துற்சனன் தனக்கு - (இயற்கையிலேயே பல கொடுஞ் செய்கைகள் பொருந்தியிருக்கின்ற) துஷ்டனுக்கு, (மேலும் செருக்குண்டாக) மேலாம் - உயர்வாகிய, துரைத்தனம் - அதிகாரத்தையும், கொடுத்தால் - கொடுத்துவிட்டால், (அவன்) என்றும் - எப்பொழுதும், தாணியில் - இப் பூவுலகத்தில், (மனிதருக்கு) சற்பனை - சதி, துரோகம் - மற்றைய கொடும் பாவங்கள், கேடு-நஷ்டம், (ஆகியவைகளை) மிக - மிகுதியாக, செய்வான் - செய்து உலகத்தைக் கெடுப்பான்.

(வி - ரை) பிறப்பிலிருந்தே துஷ்ட செய்கைகள் பொருந்தியிருக்கின்ற குரங்குக்கு வாலில் தேள் கொட்டிவிட்டால் அஃது இன்னும் விசேஷமாகத் துள்ளிப் பல சேஷ்டைகளைச் செய்யும்; அத் தருணத்தில் அதன் கையில் கொள்ளிக்கட்டையையும் கொடுத்துவிடின் ஊரையெல்லாம் கொளுத்திவிடும். அதுபோல், துஷ்டனுக்கு அதிகாரங் கொடுத்தால் உலகினுக்குக் கேடு செய்வான். (உஉ)

போய் அதிகமாகத் தங்கு மிடம்

[நேரிசை வெண்பா]

பூசாரி பொய்யும் புலவோ ருரைத்தபொய்யுங்
காசாசை வேசியர்கள் கற்றபொய்யும்—கூசாமல்

தட்டா ருரைத்தபொய்யுஞ் சவளிக் கடைப்பொய்க்குக்
கட்டாவே கால்வாசி காண.

(ப - ரை) பூசாரி பொய்யும் - கோவிலில் பூஜை செய்யும் பூசாரிகள் சொல்லும் பொய்யும்; புலவோர் - போலிப் புலவர்கள், உரைத்த - கூறிய, பொய்யும் - புரட்டும்; காசு ஆசை - பண விருப்புடைய, வேசியர்கள்-பரத்தையர், கற்ற-படித்த, பொய்யும்-புரட்டும்; கூசாமல் - (சிறிதும் மனங்) கூசாமல், தட்டார் - கம்மாளர், உரைத்த - சொல்லிய, பொய்யும் - புரட்டும்; சவளிக்கடைப் பொய்க்கு - புடைவைக்கடைக்காரர்கள் கூறும் புரட்டுக்கு, கால்வாசி - கால் பங்கும், கட்டா - (இணையாய்ப்) பொருந்தமாட்டா.

(வி - ரை) கோவிற் பூசாரிகள் அர்ச்சனை முதலியன செய்வதாக ஒப்புக்கொண்டு பக்தர்களிடம் பணம் வாங்கி அவ்விதம் செய்யாமல் எல்லாவற்றையும் சரிவர நடத்திவிட்டதாகப் பொய் சொல்வது இயற்கை. கல்வி நிரம்புத லில்லாமல் புலவர்களைப்போல நடித்துத் திரியும் போலிக் கவிஞர், தங்கள் நடிப்புத் தொழிற்கேற்பப் பலரிடத்தும் பொய் வார்த்தைகளையே கூறித் திரிவர். வேசிகள், தம்மை விரும்பி வந்தோரை மயக்குதற்பொருட்டு அளவற்ற பொய்களைக் கூறுவர். தட்டார், தங்களிடம் ஏழைகள் நகைசெய்யக் கொடுத்த பொன் முதலியவற்றை அபகரித்துக்கொண்டு அவர்களை ஏமாற்றவேண்டி இடைவிடாது பொய்ம்மொழிகளையே கூறுவது வழக்கம். புடைவைக்கடைக்காரர்கள் அழுத்தமற்ற துணியை அழுத்தமுடையதென்றும், சாயம் போகுந் துணியைப் போகாததென்றும், குறைந்த விலையுள்ளதை உயர்ந்த விலையுள்ளதென்றும் பலவிதமான பொய்களைக் கூறி மனிதரை ஏமாற்றுவது வழக்கம். மற்றவர் பொய்களெல்லாம் புடைவைக்கடைக்காரர்கள் கூறும் பொய்யில் காற்பங்குக்கும் இணையாகாவெனவே இவர்கள் பொய் அளவற்றதென்றதாயிற்று.

கடை - ஆகுபெயராய்க் கடையிலுள்ள மனிதரை யுணர்த்திற்று. காண் - அசை. (உ௯)

அறிவுடையோர் செய்யும் ஆண்மைக் குணங்கள்

[கட்டளைக் கலித்துறை]

மாதர்க் கிதங்கவி வாணர்க்குச் சால வணக்கங்குரு
நாதர்க்கு நீதியோ டாசாரங் கல்வி நயந்தவர்க்குக்
கோதற்ற வாசகம் பொய்க்குப்பொய்கோளுக்குக்கோளறிவி
லாதர்க் கிரட்டிப் பறிவுடை யோர்செய்யு மாண்மைகளே.

(ப - ரை) மாதர்க்கு - பெண்களுக்கு, இதம் - இனிமையான செய்கைகளைச் செய்தலும்; கவிவாணர்க்கு - வித்வான்களுக்கு, சால - மிகுதியாக, வணக்கம் - வணக்கத்தைச் செய்தலும்; குருநாதர்க்கு - ஆசிரியர்களுக்கு, நீதியோடு-ஒழுங்கோடு, ஆசாரம் - வழிபாடு செய்தலும்; கல்வி - வித்தையை, நயந்தவர்க்கு - விரும்பிக் கற்கும் மாணக்கருக்கு, கோது அற்ற-குற்றமற்ற, வாசகம் - வார்த்தைகளைக் கூறிக் கல்வி கற்றுக்கொடுத்தலும்; பொய்க்கு - துன்மார்க்கர் கூறும் பொய் வார்த்தைகளுக்கு, (எதிராக) பொய்-பொய்யைக் கூறுதலும்; கோளுக்கு - பழிமொழிக்கு, கோள் - பழிமொழியே கூறுதலும்; அறிவிலாதார்க்கு - புத்தியில்லாதவர்களுக்கெதிரில், இரட்டிப்பு - (அவர்களைப்போன்ற அறிவில்லாத்தன்மை) இரண்டு பங்கு அதிகமாக நடத்தலும், (ஆகிய இவைகள்) அறிவுடையோர் - விவேகிகள், செய்யும் - இவ் வுலகத்தில் நடத்தும், ஆண்மைகள்-ஆண்மைச் செய்கைகளாம்.

(வி-ரை) பெண்களுக் கிதஞ் செய்யின் அவர்கள் மனமகிழ்ச்சியோடு இல்லற நடத்திக் கணவருக் கின்பத்தைச் செய்வார்கள்; அவர்களைக் கடினமாக நடத்தினல் அவர்கள் வெறுப்படைந்து மாறு

பாடாக நடந்து கணவனுக்குக் கவலையையே உண்டாக்கிக்கொண் டிருப்பார்கள். வித்துவான்களிடத்தில் வணக்கத்தைக் காட்டினால் அவர்கள் துதித்துப் பாடுவார்கள்; அதனால் நன்மை யுண்டாகும். ஆசிரியர்க்கு வழிபாடு செய்யின் அவர்கள் மகிழ்ந்து வித்தைகளை விளக்கமாகக் கற்றுக்கொடுப்பார்கள். கல்வியை விரும்பும் மாணாக் கருக்குக் குற்றமற்ற வார்த்தைகளைக் கூறிக் கல்விக் கற்றுக்கொடுத் தால் அவர்கள் ஆசிரியரிடத்து விசுவாசத்துடன் நடந்துகொள்வார் கள். பொய் கூறுவோனிடத்தில் பொய்யே கூறவேண்டும்; அங்ஙன மின்றி மெய் கூறினால் அவனுக்கு அது திருப்தியாயிராது. கோட் சொல்லுவோனிடத்தில் கோளே கூறவேண்டும்; அங்ஙனம் கூறினல்மாத்திரம் அவனால் நன்மை யுண்டாகும். இவ்விதம் நடப் பது அறிவுடையோர் செய்கையாகும்.

இதம், வணக்கம் முதலியவற்றில் செய்தல் முதலிய சொற்கள் இசையெச்சமாக வருவித்துரைக்கப்பட்டன. 'அறிவிலாதார்' என் பது 'அறிவிலாதர்' எனத் தகரங் குறுகி வந்தது. ஏ-ஈற்றசை. பொய்- நடக்காததை நடந்ததாக ஒரு காரணமு மின்றிக் கூறுவது. கோள் - விரோதங் காரணமாக ஒருவன்மீது பழிமொழி கூறுவது. இவையே இவ் விரண்டிற்கும் வேறுபாடாம். (உ௬)

கல்வி கற்கத் தகாத திதிகள்

[நேரிசை வெண்பா]

அட்டமியி லோதினு லாசானுக் காகாது
சிட்டருக்குப் பன்னான்கு தீதாகும்—கெட்டவுவா
வித்தைக்கு நாசமாம் வெய்ய பிரதமையிற்
பித்தரும் பேசார் பிழை.

(ப - ரை) அட்டமியில் - எட்டாவது திதியாகிய அஷ்டமி யிலே, ஓதினல் - (வேதசாஸ்திர பாடங்களை ஆசிரியன் மாணாக்

னுக்குச்) சொல்லத் தொடங்கினால், (அத் திதியின் பலனாவது) ஆசானுக்கு - அப் பாடத்தைச் சொல்லும் குருவுக்கு, ஆகாது-கெட்டதாய் முடியும்; பன்னான்கு - பதினான்காந் திதியாகிய சதுர்த்தசியில், ஓதினால்-அப் பாடங்களைச் சொன்னால், (அத் திதியின் பலனால்) சிட்டருக்கு-தொண்டராகிய மாணாக்கருக்கு, தீது ஆகும்-கேடுண்டாகும்; கெட்ட - தீமை யுடையதாகிய, உவா - பூரணை அல்லது அமாவாசியில், ஓதினால் - பாடஞ் சொன்னால், (அத் திதியின் பலனால்) வித்தைக்கு - கல்விக்கு, நாசம் ஆம் - கேடுண்டாகும்; வெய்ய - வெவ்விதாகிய, பிரதமையில் - முதற்றிதியாகிய பிரதமையிலே, ஓதினால் - பாடஞ் சொன்னால், (அத் திதியின் பலனால்) பிழை - குற்ற முண்டாம்; (ஆதலால், இத் திதிகளில்) பித்தரும் - பயித்தியம் பிடித்தவரும், பேசார் - (மாணாக்கருக்குப்) பாடஞ் சொல்லமாட்டார்.

(வி-ரை) அட்டமியும், சதுர்த்தசியும், பூரணை அமாவாசிகளும் பிரதமையும் வித்தியாரம்பஞ் செய்வதற்கு ஆகாத் திதிகளாம். ஆதலின், இத் திதிகளை யொழித்து வேறு நற்றினங்களில் வித்தியாப் பியாசஞ் செய்தல் நலமாம்.

ஓதினால் என்பது மற்றைய மூன்றிடங்களிலும் கூட்டப்பட்டது. 'ஆகாதது' என்பது 'ஆகாது' எனத் தொகுத்தலாயிற்று. 'வெய்ய' என்பதில் வெம்மையின்மை விகுதி போய் மகரமெய் யகரமெய்யாகத் திரிந்தது. 'பிழை' என்பதன் பின், 'உண்டாம்' என்னுஞ் சொல் வருவித் துரைக்கப்பட்டது. (உரு)

இன்னவர் இன்னவர் பிதாக்களெனல்

[நேரிசை வெண்பா]

பிறப்பித்தோன் வித்தைதனைப் பேணிக் கொடுத்தோன்
சிறப்பி னுபதேசஞ் செய்தோன்—அறப்பெரிய
பஞ்சத்தி லன்னம் படைத்தோன் பயந்தீர்த்தோன்
எஞ்சாப் பிதாக்களென வெண்.

(ப - ரை) (மனமே!) பிறப்பித்தோன் - (மிக்க தவத்தை செய்து ஒரு மனிதனைத் தனக்குப் புத்திரனாகப்) பிறக்கும்படி செய் வனையும்; வித்தைதனை - கல்வியை, பேணி - விரும்பி, கொடு தோன் - (அவனுக்குக்) கற்றுக்கொடுத்த ஆசிரியனையும்; சிறப்பின் சிறப்போடு, உபதேசம் செய்தோன் - மந்திரோபதேசஞ் செய்த ஞா சிரியனையும்; அறப் பெரிய - மிகவும் பெரியதாகிய, பஞ்சத்தில் கருப்புக்காலத்தில், அன்னம் படைத்தோன் - அன்னமிட்டுக் கா பாற்றியவனையும்; பயம் தீர்த்தோன் - வந்த பயத்தை நீக்கித் தைரி முண்டாக்கியவனையும்; (அம் மனிதனுக்கு) எஞ்சா - குறையா பிதாக்கள் என - தந்தைகள் என்று, எண் - நீ கருதக்கடவை.

(வி - ரை) 'எண்' என்னும் ஏவலுக்குத் தக, 'மனமே' என் னும் விளி வருவித் துரைக்கப்பட்டது. வித்தை கற்றுக்கொடு தோன், மந்திரோபதேசஞ் செய்தோன், பஞ்சத்தி லன்னங் கொடு தோன், பயந் தீர்த்தோன் ஆகியவர்களும் பிதாவைப்போலவே அன் புடையவர்களாதலின் அவர்களும் பிதாக்களே யாவர். ஒவ்வொரு ரும் தம்தம் மனத்தை நோக்கிச் சொல்லி இத்தகையரைப் பிதாக் ளாகக் கொள்ளவேண்டுமென்பதுபற்றியே இக் கவி செய்தோர் இ செய்யுளை மனத்தை நோக்கிக் கூறுவதாக இயற்றினர். (உக)

நூலைக் கற்பினும் அந்நூன் முறைப்படி நடத்த லருமை யென்பது

[நேரிசை வெண்பா]

எழுதரிது முன்ன மெழுதியபின் னத்தைப்
பழுதறவா சிப்பரிது பண்பா—முழுதுமதைக்
கற்பரிது நற்பயனைக் காண்பரிது கண்டக்கால்
நிற்பரிது தானந் நிலை.

(ப - ரை) முன்னம் - முன்னே, எழுதுதல் - (ஒரு நூலை யாவர்க்கும் பயன்படுமாறு ஒருவர்) எழுதிவைத்தல், அரிது - அருமையாம்; எழுதிய பின் - (அங்ஙனம் எழுதிய பின்னர், அத்தை - அந்நூலை, பழுது அற - குற்றம் நீங்க, வாசிப்பு - (ஒருவர்) படித்தல், அரிது - அருமையாம்; (அங்ஙனம் வாசிப்பினும்) பண்பா - விருப்பமாக, அதை - அதனை, (இடையில் விட்டுவிடாமல்) முழுதும் - எல்லாம் (சரிவர), கற்பு - (மனப்பாடஞ் செய்து முறைப்படி) கற்றுக்கொள்ளுதல், அரிது - அருமையாம்; (அங்ஙனங் கற்றாலும்) நல்-நல்ல, பயனை-பொருளை, காண்பு - காணுதல், அரிது - அருமையாம்; கண்டக்கால் - (அங்ஙனம் பொருளைச்) காணினும், அந்நிலை - அந் நூற்கருத்தின் உறுதியான நிலையிலே, நிற்பு - நின்று அதன் வழியில் நடத்தல், அரிது - மிகவும் அருமையாம்.

(வி-ரை) ஒருவர் ஒருநூலை வாசித்துணர்ந்தாலும் அதிற் கூறப்படும் சன்மார்க்கத்தில் நிற்றல் அருமையாமென்பது இதன் கருத்து. இதனால், நற்குணங்களைக் கடைப்பிடித் தொழுகாதோர் எத்துணை நூற்களைக் கற்பினும் பயனில்லை யென்பது பெறப்படுகின்றது. "கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத் தக," என்னுந் திருக்குறளானு மிஃதுணரப்படும். இக்கருத்துணராத அறிவிலிகள் சிலர், நூற்களைக் கற்றிருப்பினும் நடுநிலைமை, பொறை முதலிய நற்குணங்களைக் கைவிட்டுத் தமக்குப் பொருளீவோர் எத்தகையராயினும் அவரைமட்டும் புகழ்ந்து, நல்லன கூறும் பெரியோரை இகழ்ந்து திரிவர்.

எழுதுதல் என்னுந் தொழிற்பெயர் தல் விகுதி கெட்டு முதனிலைத் தொழிற்பெயராய் 'எழுது' என நின்றது. முன்னம்-இதில் அம் சாரியை. அதை என்பது 'அத்தை' என வல்லொற்று விரிந்து விகாரப்பட்டது. வாசிப்பு, கற்பு, காண்பு, நிற்பு என்பன தொழிற்

பெயர்கள். இவற்றின் ஈற்றிலுள்ள பு - தொழிற்பெயர் விகுதி
தான் - அசை. (உஎ)

கைக்கோலின் பிரயோசனங்கள்

[நேரிசை வெண்பா]

முனியதட்டு முட்டேக்கு முன்னீ ரளக்கும்
கனியுதிர்க்குங் கவ்வுநாய் காக்கும்—தனிவழிக்குப்
பத்திரம தாக்கும் பயந்தீர்க்கும் பாம்படிக்கும்
கைத்தலத்திற் றண்டிருந்தக் கால்.

(ப-ரை) கைத்தலத்தில் - (ஒருவனுடைய) கரத்தினிடத்தில், தண்டு இருந்தக்கால் - கோல் (ஒன்று எப்போதும்) இருக்குமே யானால் (அது) முனி-(எதிர்ப்பட்ட) முனியை, அதட்டும்-அதட்டி யோட்டுதற் குதவியாயிருக்கும்; முள்-வழியிற் கிடக்கும் முட்களை, தூக்கும்-தூக்கி அப்புறத்தெறியும்; முன் - தனக்கெதிரில் குறுக் கிடும், நீர் - ஜலத்தை, அளக்கும் - (இவ்வளவு ஆழமுடைத்தா யிருக் கின்றதென) அளந்து காட்டிச் சந்தேகத்தை நீக்கும்; கனி உதிர்க் கும் - எட்டாத மரங்களிலுள்ள இனிய கனிகளைப் புசிக்கும்படி உதிர்த்துக் கொடுக்கும்; கவ்வும் - கடிக்கின்ற, நாய் - நாயை, காக் கும் - (கடிக்கவொட்டாமல் அடித்துத் துரத்திக்) காவல் புரியும்; தனி வழிக்கு - தனியே செல்லும் வழிப் பயணத்திற்கு, பத்திரமது ஆக்கும் - (உதவியாயிருந்து) நன்மையை உண்டாக்கும்; பயம்-(தனி யே செல்லும்போ துண்டாகும்) அச்சத்தை, தீர்க்கும் - நீக்கும்; பாம்பு அடிக்கும்-தனக்கபாயஞ் செய்ய வரும்) பாம்புகளை யடித்துக் கொன்று நாசமாக்கும்.

(வி - ரை) ஒருவன் கையில் ஒரு கோலிருக்குமெனில், எதிர்ப் படும் முனியைத் துரத்தியும், முட்களைத் தூக்கி யெறிந்தும், நீரின் ஆழத்தை அளந்து காட்டியும், இனிய பழங்களை உதிர்த்துக் கொடுத்

றும், கடிக்க வரும் நாயை அகற்றியும், வழித் துணையாகியும், அச்சத்தை நீக்கியும், விஷப் பாம்புகளை யடித்துக் கொன்றும் மிக்க உதவி புரியுமாதலின், தங்களுக்கு வரும் ஆபத்துக்களினின்றும் நீங்கிக்கொள்ள விருப்பமுடைய ஒவ்வொருவரும் கையில் ஒரு கோல் வைத்துக் கொள்ளுதல் அவசியமாம். மனிதராற் செய்யப்படும் ஒவ்வொரு செய்கைக்கும் கோல் உதவியாதல்பற்றி இங்கு அதனுதவிகொண்டு செய்யப்படும் மனிதன் செய்கைகளெல்லாம் அக்கோலின் செய்கைகளாகக் கூறப்பட்டன.

பத்திரமது - இதில் அது சாரியை. (உஅ)

குடையின் பிரயோசனங்கள்

[நேரிசை வெண்பா]

பகலோன் றெறுங்கிரணம் பாய்பறவை யெச்சம்
மிகமே லுறாதகற்றும் விண்ணின்—முகிலதனால்
பெய்யுமழை யைத்தடுக்கும் பேரழகு மாமொருவன்
கையிற் குடையிருந்தக் கால்.

(ப - ரை) ஒருவன் - ஒரு மனிதனுடைய, கையில் - கரத்தில், குடை இருந்தக்கால்-ஒரு குடை யிருக்குமேயானால் (அது) தெறும்-(வெதுப்பித் தேகத்தி னழகை) அழிக்கின்ற, பகலோன்-சூரியனது, கிரணம்-வெப்பத்தையும், பாய்-(ஆகாயத்திற்) பறக்கின்ற, பறவை - பட்சிகளின், எச்சம்-(மலமூத்திர முதலிய) எச்சங்களையும், மேல் - தேகத்தின்மீது, மிக - மிகுதியாக, உறாது - பொருந்தி விழாதபடி, அகற்றும் - (தான் தாங்கி) நீக்கும்; விண்ணின்-ஆகாயத்தில் நிறைந்திருக்கின்ற, முகில் அதனால் - மேகத்தினால், பெய்யும் - சொரியப்படும், மழையை - மாரியையும், தடுக்கும் - தேகத்தில் விழாதபடி தடைசெய்து காக்கும்; பேர் - பெரிய, அழகும் ஆம் - அழகு முண்டாகும்.

(வி-ரை) ஒருவன் கையிற் குடையிருந்தால் அது மேற்கூறி இடர்களை நீக்குதலோடு அழகையுஞ் செய்யு மாதலால் அதனை ஒ வொருவரும் அவசியங் கைக்கொள்ளவேண்டும். (உ

பாதரட்சையின் பிரயோசனங்கள்

[நேரிசை வெண்பா]

கல்லு முறுத்தாது காலின்முட் டையாது
எல்லைமார்த் தாண்டன்சூ டேறுது—தொல்லைவரு
மாலை யிருளில் வழிநடக்கக் கூசாது
காலிற் செருப்பிருந்தக் கால்.

(ப-ரை) காலில்-ஒருவனுடைய பாதங்களில், செருப்பு இரு தக்கால்-பாதரட்சை யிருக்குமேயானல், கல்லும் - (வழியிற் கிட கும்) பாறகல்லும், உறுத்தாது-உறுத்தி வருத்தமாட்டாது; காலின் அடியில், முள்-முள்ளானது, தையாது - பாய்ந்து வருத்தமாட்டாது எல்லை - பகற்பொழுதில், மார்த்தாண்டன்-சூரியனது, சூடு-வெப் மானது, ஏறுது-பாதங்களின் வழியாகத் தேகத்தி லேறமாட்டாது தொல்லை வரும் - துன்பங்கள் வரக்கூடிய, மாலை - மாலைக்காலத் லும், இருளில் - இரவிலும், வழி நடக்க - வழியில் நடந்து செல் கூசாது-பாதங் கூசமாட்டாது.

(வி-ரை) செருப்பானது பல விதத்திலும் நன்மையைத் தா கூடியதா யிருத்தலால் வழிச்செல்வோர் அதனை அவசியம் தரித்து கொள்ளவேண்டும்.

கல்லும் என்பதில் உம்மை எதிரது தழுவியது. "ளவே றமையிற் றடவு மல்வழி, யவற்ரோ டுறழ்வும் வலிவரினும்,... என்ற (ந. மெ. பு. உச) சூத்திர விதிப்படி முள் என்பதனீற் ளகாம் வலிவா டகாமாகத் திரிந்தது. மாலை யிருளில் என்பதி

ஏழாம்வேற்றுமை யுருபும் உம்மையும் தொக்கன. வழி நடக்க என்ப
தில் இல்லுருபு தொக்கது. (௩௦)

வறுமையின் கொடுமை

[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

தரித்திர மிக்க வனப்பினை யொடுக்கிச்
சரீரத்தை யுலர்தர வாட்டும்;
தரித்திர மளவாச் சோம்பலை யெழுப்புஞ்
சாற்றரு முலோபத்தை மிகுக்கும்
தரித்திரந் தலைவன் றலைவியர்க் கிடையே
தடுப்பருங் கலாம்பல விளைக்கும்
தரித்திர மவமா னம்பொய்பே ராசை
தருமிதிற் கொடியதொன் றிலையே.

(ப-ரை) தரித்திரம் - வறுமையானது, (ஒருவனுடைய) மிக்க-மிகுந்த, வனப்பினை - அழகையெல்லாம், ஒடுக்கி - கெடுத்து, சரீரத்தை - தேகத்தை, உலர்தர-காயும்படி, வாட்டும்-வாடச்செய்யும்; தரித்திரம்—, அளவா - அளவிடக்கூடாத, சோம்பலை - சுறுசுறுப்பின்மையை, எழுப்பும்-உண்டாக்கும்; சாற்றரும் - சொல்லுதற்கரிய, உலோபத்தை - ஈயாமையை, மிகுக்கும் - மிகும்படிச் செய்யும்; தரித்திரம்—, தலைவன் தலைவியர்க்கு - நாயகன் நாயகி ஆகிய இருவர்க்கும், இடையே - இடையில், தடுப்பு அரும் - நீக்குதற்கரிய, பல கலாம் - பலவிதமான பிணக்குக்களை, விளைக்கும் - உண்டாக்குவிக்கும்; தரித்திரம்—, அவமானம் - மானக்கேட்டையும் பொய் - பொய்கூறுதலையும், பேராசை - பேராசைக் குணத்தையும், தரும் - உண்டாக்கும்; (ஆதலால்) இதின் - இதைக்காட்டினும், கொடியது ஒன்று-கொடியதாகிய ஒன்று, இல்லை - (இவ் வுலகத்தில்) இல்லை.

(வி-ரை) ஒருவனுக்கு வறுமை அதிகப்படின் நல்ல உணவு முதலியன கிடைக்கப் பெறுமையினாலே அவன் தேகம் மெலிய

அதனால் அழகு கெடும்; தொழில் முதலியன செய்தற் கேது வில்லாமற் போவதனாலே சோம்பல் மிகும்; கொடுத்தற்கொன்று மில்லாமற் போவதனாலே உலோபத்தன்மை அதிகரிக்கும்; இன்னும் அவனுடைய மனைவி ஆடை யாபரணம் முதலியவற்றை விரும்பியவண்ண மணிந்து சந்தோஷித்தற் கிடமில்லாமற் போவதனாலே அவன் வெறுத்துப் பேச எந்நேரமும் வீட்டில் மனஸ்தாபம் நிகழ்ந்துகொண்டே யிருக்கும்; அன்றியும், அத்தரித்திரமுடையவன் பலரிடத்தும் தன் குறையைச் சொல்வதாலும், ஜீவனத்தின் பொருட்டுச் செய்யத் தகாத காரியங்களைச் செய்வதாலும் மானக்கேடு முண்டாகும்; பின்னும் அவன் பிறரிடத்துப் பொருள் பெறவேண்டிப் பல பொய்களையுங் கூறுவன்; எதையும் அனுபவிக்கப் பெறாமையினாலே எதனிடத்தும் அவன் பேராசை கொள்வான். இவற்றிற் கெல்லாங் காரணம் அவ் வறுமையின் கொடுமையேயாம். முடிவாகக் கூறுமிடத்துப் பொருளற்ற தரித்திரனுக்கு இவ் வுலகத்தில் ஒரு சுகமு மில்லையாம்; "அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க், கிவ்வுலக மில்லா கியாங்கு" என்னும் திருக்குறட் செய்யுளால் இவ் வுண்மை யுணரப்படும்.

சாற்று-ஈறுகெட்ட தொழிற்பெயர். தடுப்பு - தொழிற்பெயர். இதின் என்பதிலுள்ள ஐந்தாம் வேற்றுமை இன்னுருபு பண்பளவுப் பொருளது. (௩௧)

இதுவுமது

[எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

தரித்திரங் களிப்பாங் கடலுக்கோர் வடவை
சாற்றுமெண் ணங்கள்வா ழிடமாம்
தரித்திரம் பற்ப றுக்கமுந் தோன்றத்
தக்கபே ராகர மென்ப

தரித்திர நன்மை சாலொழுங் கென்னுந்
தழைவனந் தனக்கழ லெனலாந்
தரித்திரங் கொடிய வெவற்றினுங் கொடிதத்
தகையதை யொழித்தனன் றாமே.

(ப-ரை) தரித்திரம்-வறுமையானது, (ஒருவனுடைய) களிப்பாம் - சந்தோஷமென்கிற, கடலுக்கு - சமுத்திரத்திற்கு, (அதனை மிகாம லடக்கத்தக்க) ஓர் - ஒப்பற்ற, வடவை ஆம் - வடவாமுகாக்கினியாகும்; சாற்றும் - சொல்லப்பட்ட, எண்ணங்கள்-பலவிதமான துராலோசனைகள், வாழ் இடமாம் - பொருந்தி வசிக்கின்ற ஸ்தானமாம்; (அன்றியும்) தரித்திரம்—, பல பல-அநேகமான, துக்கமும்-துன்பங்களும், தோன்றத்தக்க-உண்டாகத்தக்க, பேர் - பெரிய, ஆகரம் என்ப-இடமென்று கூறுவர் பெரியோர்; தரித்திரம்—, நன்மை சால் - நன்மை மிகுந்த, ஒழுங்கு என்னும் - ஒழுக்க மென்கின்ற, தழை - செழித்த, வனம் தனக்கு - வனத்திற்கு, (அதனை எரித்தழிக்கத்தக்க) அழல் என்னலாம் - காட்டுத்தீ யென்றுஞ் சொல்லலாம்; இன்னும் தரித்திரம்—, கொடிய-தீயனவாகிய, எவற்றினும்-எவைகளினும், கொடிது-மிகத் தீயதாம்; (ஆதலின்) அத்தகையதை-அத்தன்மையையுடைய அத் தரித்திரத்தை, ஒழித்தல்-விடாமுயற்சிகளைச் செய்து நீக்கிவிடுதல், நன்றாம் - நன்மையாம்.

(வி - ரை) ஊழிக்காலத்தில் பிரளய வெள்ளத்தையும் வறளச் செய்கின்ற வடவைத்தீப்போலத் தரித்திரமானது மிகுந்த சந்தோஷத்தை நாசஞ் செய்யக்கூடியதாதலால் அது, 'களிப்பாங் கடலுக்கோர் வடவை' என்று கூறப்பட்டது. இன்னும் தரித்திரம் வந்தவுடனே பொருளில்லாக் கஷ்டத்தால் மனிதனை எண்ணாத எண்ணங்களை யெல்லா மெண்ணச் செய்யுமாதலால் அது பல எண்ணங்கள் வாழுதற் கிருப்பிடமுமாம். அன்றியும், பல துன்பங்களை யெல்லாம் விளைவிப்பதால் அவற்றிற்கு முறைவிடமாம்; இன்னும் அத் தரித்

திரமானது தான் பற்றியவரிடத்துள்ள ஒழுக்கங்களை யெல்லாம் கெடுக்குமாதலின், 'ஒழுங்கென்னும், தழைவளந் தனக்கு அழ லென்னலாம்' என்றுங் கூறப்பட்டது. உலகத்தில் துன்பங்களி லெல்லாம் பெரிய துன்பம் தரித்திரமே யாதலால், அது, 'எவற்றி னுங் கொடிது' என்றும் கூறப்பட்டது.

"பல சில வெனுமிவை தம்முன் றாம்வரின், இயல்பு மிகலு மகர மேக, லகரம் றகர மாகலும் பிறவரின், அகரம் விகற்ப மாகலு முளபிற," என்ற (ந-உயி-பு. உ0) சூத்திர விதியால் 'பல பல' என்னுஞ் சொற்றொடர் 'பற்பல,' என்றாய், விகாரத்தால் ஈற்றகரங் கெட்டு, "குறில்செறி யாலள..." (ந-மெ-பு-உசு) சூத்திர விதிப்படி தகரம் வந்து றகரமாகத் திரிய அவ்வீற்று லகரமும் கெட்டு, 'பற்ப றுன்பம்' என்றாயது. 'வனந்தனக்கு,' என்பதில், தன், அ - சாரியை கள். மேற் காட்டிய சூத்திர விதிப்படியே 'ஒழித்தல்' என்பத னீற்றி லுள்ள லகரம், நகரம் வந்து னகரமாகத் திரியக் கெட்டது. (கஉ)

வறுமையுடையோன் மன்னர் முதலியோரால் மதிக்கப்படா னென்பது

[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

கோதறு கல்வி சாலூர்க் குடியிருந் தறியா னேனும்
ஓதருஞ் செல்வ மிக்கோ னொருவனே சிறந்தோ னவன்
காதலின் வேத முன்னுங் கலைகள்கற் றுணர்ந்தா னேனுந்
தீதமை மிடிய னுயிற் சிறந்திடான் வேத்த வைக்கே.

(ப-ரை) ஓதரும்-அளவிட் டுரைத்தற்கரிய, செல்வ மிக்கோன்-ஐசுவரியத்தால் மிகுந்தவன், கோது அறு - குற்றமற்ற, கல்வி சால் சாஸ்திரப் பயிற்சி நிறைந்த, ஊர் - ஊரில், குடியிருந்து இல்வாழ்க் கையாகவிருந்து, அறியானேனும் - அறியானுயினும், (படிப்பென் பது இன்னதென் றறியானுயினும்) வேத்தவைக்கு - இராஜ சபை யில், ஒருவனே - அச் செல்வமுடையோ னொருவன் மாத்திரமே,

சிறந்தோன் ஆவான் - சிறப்புடையனுவான்; (ஒருவன்) காதலின் - (தனக்கேற்பட்ட) விருப்பத்தாலே, வேதம் மூன்றும் - வேதங்கள் முதலாகும், கலைகள் - அறுபத்துநான்கு கலைஞானங்களேயும், கற்று உணர்ந்தானேனும் - படித்தறிந்தானுயினும், தீது அமை - தீங்கு பொருந்திய, மிடியன் ஆயின் - வறுமை யுடையவனுனல், (அவன்) வேத்தவைக்கு - இராஜ சபையில், சிறந்திடான் - சிறப்படையமாட்டான்.

(வி - ரை) உலகத்தில் ஒரு மனிதன் கல்வியறிவில்லாதவனு யிருந்தாலும் செல்வமிக்கோனுயிருந்தால் அவன் அரசர் முதலிய எல்லோராலும் சிறந்த வித்வான்போலவே கொண்டாடப்படுவான். செல்வச் சிறப்பில்லாதவன் எவ்வளவு சாஸ்திரங்களேக் கற்றிருந்த போதிலும் அவன் எவ்விடத்தும் மதிக்கப்படமாட்டான். அவன் கல்வியும் உயர்வாகக் கொள்ளப்படமாட்டாது. கற்றுணர்ந்த சில வித்வான்களுங்கூடப் பொருளேயே பெரிதாகக் கருதிப் பொரு ளுடையோர் எத்தகைய துர்ச்செய்கையை யுடையவராயிருந்தாலும், கல்வியறிவில்லாதவராயிருந்தாலும் அவர்களிடமிருந்து ஏதேனும் கைப்பற்றலாமென்ற கருத்தால் அவர்களேயே புகழ்ந்தும், அவர்களே இகழும் அறிவுடையோரைத் தாமிகழ்ந்தும், கற்ளுேர் செல்வமற் ருேராயிருப்பின் அவரை மதியாமலு மிருப்பதை அனுபவத்திற் காணலாம். இவ்வித செய்கைகள் கூடாவென்பதையும், கல்வியுடை யோர் வறுமையுடையோராயினும் அவரையே மதிக்கவேண்டுமென் பதையும் உணர்த்துதற்பொருட்டே இச் செய்யுள் ஏற்பட்டதாம். "விரக ரிருவர் புகழ்ந்திடவே வேண்டும், விரணிறைய மோதிரங்கள் வேண்டும்-அரையதனிற், பஞ்சேனும் பட்டேனும் வேண்டு மவர்க் கவிதை, நஞ்சேனும் வேம்பேனு நன்று," என்ற செய்யுளால் ஔவை யும் இக்கருத்தை விளக்கிக் காட்டியிருத்தல் காண்க. இக் கருத்தை நோக்கி நியாயமாக மதிக்கத்தக்கவரை மதித்தலே மனிதர்க்குச் சிறப்புடைத்தாம்.

'ஓதுதல் அரும்' என்பது தல் விகுதி கெட்டு, 'ஓதரும்' என்றாயது. செல்வ மிக்கோன்-மூன்றாம் வேற்றுமைத் தொகை; இதில் ஆனுருபும் அத்துச்சாரியையுந் தொக்கன. ஊர்க்குடி - ஏழாம் வேற்றுமைத்தொகை. 'வேந்தவைக்கு' என்பது 'வேத்தவைக்கு' என வலித்தல் விகாரம் பெற்றது. இது 'அவையில்' என்பது, அவைக்கு' என வந்தது உருபுமயக்கம். இஃதிரண்டிடத்திற்கும் கூட்டப்பட்டது. 'காதலால்' என வரவேண்டிய மூன்றாம் வேற்றுமை, 'காதலின்'என வந்ததும் உருபுமயக்கம்; "யாத னுருபிற் கூறிற் றாயினும், பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்," என்பது விதி, 'வேதங்கள்' என்னும் பன்மைச்சொல் சாதி யொருமைபற்றி 'வேதம்' என வந்தது. வேதங்கள் நான்காவன:—இருக்கு, தைத்திரியம், சாமம், அதர்வணம் என்பனவாம். கலைகள் அறுபத்து நான்காவன:—அக்ஷரவிலக்கணம், இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதிசாஸ்திரம், சோதிடசாஸ்திரம், தருமசாஸ்திரம், யோகசாஸ்திரம், மந்திரசாஸ்திரம், சகுனசாஸ்திரம், சிற்பசாஸ்திரம், வைத்தியசாஸ்திரம், உருவசாஸ்திரம், இதிகாசம், காவியம், அலங்காரம், மதுரபாடனம், நாடகம், நிருத்தம், சத்தப்பிரமம், வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அஸ்திரபரீக்ஷை கனகபரீக்ஷை, இரதபரீக்ஷை, கஜபரீக்ஷை, அசுவபரீக்ஷை, இரத்தினபரீக்ஷை, பூமிபரீக்ஷை, சங்கிராமவிலக்கணம், மல்யுத்தம், ஆகருஷணம், உச்சாடனம், வித்துவேடணம், மதனசாஸ்திரம், மோகனம், வசீகரணம், இரசவாதம், காந்தருவவாதம், பைபீலவாதம், கவுத்துவவாதம், தாதுவாதம், காருடம், நட்டம், முட்டி, ஆகாயப்பிரவேசம், ஆகாயகமனம், பரகாயப்பிரவேசம், அதிரிசயம், இந்திரசாலம், மகேந்திரசாலம், அக்கினிஸ்தம்பனம், ஜலஸ்தம்பனம். வாயுஸ்தம்பனம், திட்டிஸ்தம்பனம், வாக்குஸ்தம்பனம், சுக்கிலஸ்தம்பனம், கன்னஸ்தம்பனம், கட்கஸ்தம்பனம், அவத்தைப் பிரயோகம் என்பனவாம். (௩௩)

இடம்பமுள்ளோனே மன்னர் முதலியோரால் மதிக்கப்படுவோ னென்பது

[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

பொருணனி யுளனென் றியாரும்
புகழுமோர் வார்த்தை வேண்டும்
இருகையுங் கடகம் வேண்டு
மிலங்குகுண் டலங்கள் வேண்டும்
வருவிர லாழி வேண்டு
மார்பிடை மதாணி வேண்டும்
உருவமுத் தாரம் வேண்டு
முயர்ந்தபட் டாடை வேண்டும்.

இதுவுமது

[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

சிவிகைமுன் னூர்தி வேண்டுஞ்
செழும்பொருட் செலவு வேண்டும்
குவிகையே வலரும் வேண்டுங்
கோலமார்ந் திருக்க வேண்டும்
கவிகைதாங் குநரும் வேண்டுங்
கையுறை சிறப்ப வேண்டும்
அவிகையில் விளக்கம் வேண்டு
மரசவை குறுகு வார்க்கே.

(ப - ரை) அரசு - ஒரு மன்னனுடைய, அவை - சபையில், குறுகுவார்க்கு - சேரும் வித்வான்களுக்கு, பொருள் - திரவியம்,

கனி - மிகுதியாக, உளன் - உள்ளவன், என்று - என்று சொல்லி புகழும் - துதிக்கின்ற, ஓர் - ஒரு, வார்த்தை வேண்டும்-சொல் உண்டாயிருத்தல்வேண்டும்; இரு கையும் - இரண்டு கைகளிலும், கடகம் வேண்டும் - (விலையுயர்ந்த தங்கக்) காப்புகள் அணியப்பட்டிருத்தல்வேண்டும்; (காதுகளில்) இலங்கு - பிரகாசிக்கின்ற, குண்டலங்கள் வேண்டும் - பொன்னாலாகிய குண்டலங்களென்னுங் காதணிகளணியப்பட் டிருத்தல்வேண்டும்; வரும் - (கைகளிலே வளர்ந்து) வருகின்ற, விரல் - விரல்களிலே, ஆழி - மோதிரங்கள், வேண்டும் - அணியப்பட்டிருத்தல்வேண்டும்; மார்பிடை-மார்பினிடத்தே, மதாணி - இரத்தினப்பதக்கம், வேண்டும் - அணியப்பட்டிருத்தல் வேண்டும்; உருவம் அழகு பொருந்திய, முத்தாரம்-முத்துமாலையும், வேண்டும் - அணியப்பட்டிருத்தல் வேண்டும்; (அரையில்) உயர்ந்த-மேன்மையாகிய, பட்டு ஆடை-பட்டு வஸ்திரம், வேண்டும்-உடுக்கப்பட்டிருத்தல் வேண்டும்; சிவிகைமுன் - பல்லக்கு முதலாக, ஊர்தி - பல வாகனங்களும், வேண்டும் - இருத்தல்வேண்டும்; செழும் - செழித்த, பொருள் செலவு - திரவியச் செலவும், வேண்டும் - ஏற்பட்டிருத்தல் வேண்டும்; குவி - (வணங்கும்பொருட்டுக்) கூப்பிய, கை - கரங்களை யுடைய, ஏவலரும் - அடிமை யாட்களும், வேண்டும் - உடனிருத்தல் வேண்டும்; கோலம் - (பலவித ஆடையாபரணங்களாலேற்பட்ட) அழகும், ஆர்ந்திருக்க வேண்டும் - பொருந்தி யிருத்தல் வேண்டும்; கவிகை - குடையை, தாங்குநரும் - பிடிப்போரும், வேண்டும் - இருத்தல்வேண்டும்; கையுறை-(அரசனுக்கீயும்) காணிக்கைப் பொருள்களும், சிறப்ப - சிறப்பாக, வேண்டும் - கையி லிருக்க வேண்டும்; அவிகையில் - அமர்தலில்லாத, விளக்கம் வேண்டும் - தீவர்த்தி விளக்குகளும் பக்கத்திற் சூழ்ந்திருக்க வேண்டும்; (இவ்வளவு சிறப்புக்களு மேற்பட்டிருப்பின் அவர் அவ்வரசனால் நன்கு மதிக்கப்படுவார்; இல்லையேல் அவர் எத்தகைய கல்வி யுடையராயினும் மதிக்கப்படார்.)

(வி - ரை) இவ் விரண்டு செய்யுட்களும் குளகம்; பல பாக்கள் கூடிப் பொருள் முடியும் செய்யுட் டொடருக்குக் குளகமென்று பெயர். இச் செய்யுட்களும் முன்செய்யுளைப் போலவே, 'இடம்ப முடையவனே அரச சபையில் மதிக்கப்படுவான்' என்னுங் கருத்தை விளக்கிக் காட்டுவனவாம். இச் செய்யுட்களின் கருத்தாலும் இடம்பங் குறித்து ஒருவரை மதித்தல் கூடாது, உண்மையான கல்வி, நற் குணம், நற்செய்கை முதலியவைகளைக் குறித்தே ஒருவரை மதித் தல்வேண்டும் என்பதே பெறப்படும். 'அரசவை' எனப் பொதுப்படக் கூறி யிருப்பினும் இக் கருத்து இடம்பத்தை விரும்புவோரைக் குறி க்குமே யன்றி மெய் யுணரும் உத்தமர்களாகிய மன்னர்களையும் பிர புக்களையும் குறிக்காதெனக் கொள்க. 'குறுகுவோர்க்கு' என்பதும் பொதுப்படக் கூறியிருப்பினும், இச் செய்யுட்கள் வித்வான்களையே குறித்தனவாதலின், 'சேரும் வித்வான்களுக்கு,' எனப் பொரு ளுரைக்கப்பட்டது.

'இருகையுங் கடகம், வருவிரலாழி' என்பன ஏழாம் வேற்று மைத் தொகைகள். 'குண்டலங்கள்' என்பதற் கேற்பக் 'காதுகளில்' என்பதும், 'பட்டாடை' என்பதற்கேற்ப 'அரையில்' என்பதும் வருவிக்கப்பட்டன. (௩௪-௩௫)

அறஞ்செய்தற் குதவியில்லா வுடம்பு பயனற்ற தென்பது

[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

எய்தற் கரிய யாக்கைதனக்
கெய்திற் றென்னு லதுகொண்டு
செய்தற் கரிய வறங்கள்பல
செய்து துயர்கூர் பிறவியினின்

றுய்தற் குரிமை பெறவொண்ணு
 துழல்வோ னுடம்பு பொற்கலத்திற்
பெய்தற் குரிய பால்கமரிற்
 பெய்த தொக்கு மென்பரால்.

(ப - ரை) எய்தற்கு அரிய - அடைதற்கருமையான, யாக்கை-மனித தேகம், தனக்கு - தனக் குரிமையாக, எய்திற்று என்றால் - வந்தடைந்ததேயானால், அது கொண்டு-அவ் வுடம்பைத் துணையாகக் கொண்டு, செய்தற்கு அரிய-செய்வதற்கருமையான, பல அறங்கள்-பலவிதமான தருமங்களை, செய்து - இயற்றி, துயர் கூர் - துன்ப மிகுந்த, பிறவியினின்று - பிறப்பென்னுந் துன்பத்தினின்றும், (நீங்கி) உய்தற்கு-(முத்தி வீட்டையடைந்து என்று மழியாச்சுகவாழ்வுடன்) பிழைத்தற்கு, உரிமை-உரிய குணத்தை, பெற ஒண்ணாது-அடைய முடியாமல், உழல்வோன்-(வீணே உலகத்திற் றிரிந்து பிறவிக்கேதுவான காரியங்களைச் செய்துகொண்டு) வருந்துவோனுடைய, உடம்பு-அத் தேகமானது, (அவனிடத்தே சேர்ந்திருத்தல் எதற்கொப்பா மெனில்) பொன் கலத்தில் - பொன் பாத்திரத்தில், பெய்தற்கு உரிய - ஊற்றிவைக்கத்தகுந்த, பால் - பாலை, கமரில் - வெடிப்பு நிலத்தில், பெய்தது - சொரிந்ததை, ஒக்கும் என்பர்-நிகர்க்கும் என்று சொல்வர் பெரியோர்.

(வி-ரை) ஒரு மனிதன், மானிட தேகத்தை யடைந்தால் அதனுதவிகொண்டு அறங்களைச் செய்து பிறவி நீங்குதற்கான மார்க்கத்தைத் தேடவேண்டும்; அக் குணமில்லான் அத் தேகத்தைச் சார்ந்திருத்தல், பொற்கலத்தித் சொரிதற்குரிய பாலை வெடிப்பு நிலத்தில் ஊற்றுவதற்கு நிகராம். வெடிப்பு நிலத்தில் ஊற்றிய பால் எவ்வாறு ஒன்றுக்கு முதவாமல் நிமிஷ நேரத்தில் மறையுமோ அவ்வாறே தருமகுண மில்லாதவனிடத்திற் சேரும் தேகம் பயனற்றதாய் விரைவில் மறையும். முத்தி யடைதற்கு எல்லாத் தேகங்களினும்

மானிடதேகமே சிறந்து நிற்பதாலே இங்கு மனித தேகம் விசேஷமுடையதாகக் கூறப்பட்டது. 'பூதலத்தின் மானிடராய்ப் பிறப்பதரிது' என்பதனாலு முணர்க.

யாக்கை-கட்டு; பல வுறுப்புகளைக் கொண்டு கட்டப்பட் டிருத்தலின் உடம்பு, 'யாக்கை' என்னும் பெயர் கொண்டது; யாத்தலாகிய தொழில் உடம்பிற் காயினமையின் இது தொழிலாகுபெயர்; அது கொண்டு - இரண்டாம் வேற்றுமைத்தொகை. 'பிறவியினின் றுய்தற்கு' என்பதில் 'நீங்கி' என்னும் ஒரு சொல் வருவிக்கப்பட்டது. 'என்பர்' என்னும் பயனிலைக்கேற்பப் 'பெரியோர்' என்னும் எழுவாய் வருவித் துரைக்கப்பட்டது. ஆல்-அசை. (நசு)

சிவனடியார்க் குதவாத் திரவியங்கள் பயனற்றன வென்பது

[நேரிசை வெண்பா]

நம்ப னடியவர்க்கு நல்காத் திரவியங்கள்
பம்புக்காம் பேய்க்காம் பரத்தையர்க்காம்—வம்புக்காம்
கொள்ளைக்காங் கள்ளுக்காங் கோவுக்காஞ் சாவுக்காம்
கள்ளர்க்காந் தீக்காகுங் காண்.

(ப-ரை) நம்பன் - சிவனுடைய, அடியவர்க்கு - அடியாராகிய சாதுக்களுக்கு, நல்கா - ஈயாத, திரவியங்கள் - பொருள்கள், பம்புக்கு ஆம் - (பிறர் வந்து அதட்டிப் பேசும்) ஆரவாரத்திற்கு (அதாவது இடம்பத்திற்கு) ஆகும்; பேய்க்கு ஆம்-பைசாசங்களுக்குதவும்; பரத்தையர்க்கு ஆம்-(தந்திரமாகப் பொருள் கவரும்) தாசிகளுக் குதவும்; வம்புக்கு ஆம் - (கொடியோர் வந்து செய்யும்) தீச் செய்கைக்காகும்; கொள்ளைக்கு ஆம் - தீயவர் வந்து அடித்துப் பறிப்பதற்காகும்; கள்ளுக்கு ஆம்-மதுபானஞ் செய்தற் குதவும்; கோவுக்கு ஆம் - (வலிதிற் பொருள் கவரும்) கொடுங்கோல் மன்னருக்குதவும்; சாவுக்கு ஆம் -

செத்தவர்க்குச் செய்யும் ஈமக் கிரியைகளுக்குதவும்; கள்ளர்க்கு ஆம்- (பிறரறியாமல் வந்து பொருள் கவரும்) திருடர்க்குதவும்; தீக்காகும்- (வீட்டில் பற்றியெறிந்து எல்லாவற்றையும் நாசப்படுத்தும்) நெருப்பிற்குதவும்.

(வி-ரை) ஒருவன், சிவனடியார்க் குதவுதல் முதலிய நல்வழிகளிற் றன் பொருளைச் செலவிடாமல் கருமியாய் அவற்றைப் பத்திரப்படுத்தி வைப்பானேயானால் அப்பொருள்கள் அவனிடத்தே நின்று அவனுக்கொரு பிரயோசனத்தையுஞ் செய்யமாட்டா. பின்னை யெவ்வாறுமெனில், பிறர் வந்து அதட்டிப் பேசி இடம்பஞ் செய்வதனால் அவர்களால் தனக்கேதேனும் அனுகூல முண்டாமென நினைத்து அவன் ஏமாந்து அவர்களுக்குக் கொடுப்பதனால் செலவாகிவிடும்; அவனுடைய வீட்டில் பேய் புகுந்திருப்பதாக மந்திரவாதிகள் சொல்லி ஏமாற்றுவதால் அந்தப் பேயைப் போகக் கருதிச் செய்யும் மதியீனச் செய்கைகளாலுந் தொலைந்துபோம்; அவன் விலைமாதரின் மோக வலையிற் சிக்கி அவர்களுக் கன்புடன் கொடுப்பதாலும் நாசமாம்; கொடியோர் பல இடையூறுகளைச் செய்வதற்குப் பயந்து அவர்களுக் கீவதாலுந் தொலையும்; கொள்ளைக்காரர் வந்து அடித்துப் பறித்துக்கொண்டு போவதாலும் நாசமாம்; அவன் மதுபானம் முதலியவற்றைச் செய்வதாலும் தொலையும்; கொடுங்கோன் மன்னர் அடித்து வருத்துதற்குப் பயந்து அவர்களுக்குத் தண்டங் கொடுப்பதாலுந் தொலையும்; அடிக்கடி அவன் வீட்டில் நேரும் சாவுகாரியங்களுக்குச் செலவிடுவதாலுந் தொலையும்; திருடர் பன்முறை கவர்ந்து செல்வதாலும் செல்வாகிவிடும்; அடிக்கடி நேரும் தீக்கோளினாலும் ஒன்று மில்லாமற்போம். சிவனடியார்க் குதவாதவனுக்கு அவசியம் இத் துன்பங்களெல்லாம் வந்து சேர அவனுடைய பொருள்கள் நாசமாய்விடுமாதலின், உலகத்திற் பொருள் படைத்தோர் அறங்களைத் தவறாது செய்யவேண்டு மென்பது இச் செய்யுளின் கருத்து; இச் செய்யுள் மூதாட்டியாராகிய ஔவையாராற் செய்யப்பட்டது.

காண்-இது ஒருவகை அசை யிடைச்சொல். (௩௭)

தள்ளக்கூடாதவை இன்னவை யெனல்

[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

செந்தமி ழடைகாய் நீறு சிவிகைபொன் னார மாடை
சுந்தர மான தோகை துலங்குமிவ் வகைக ளேழும்
வந்தபோ திருகை யேந்தி வாங்கலக் குமியுஞ் சேர்வள்
அந்தநா ளாகா வென்றா லவனைவிட் டகலு வாளே.

(ப - ரை) செந்தமிழ் - செம்மையாகிய தமிழ் நூலும், அடைகாய் - வெற்றிலைப் பாக்கு, நீறு - விபூதியும், சிவிகை - பல்லக்கும், பொன் ஆரம் - பொன்னாலாகிய மாலையும், ஆடை-வஸ்திரமும், சுந்தரமான - அழகான, தோகை - கன்னிகையும், (ஆகிய) துலங்கும் - விளங்குகின்ற, இவ்வகைகள் எழும் - இந்த எழுவகைப் பொருள்களும், வந்தபோது - (பிறர் கொடுக்கத் தன்னிடத்திலே வலிய) வந்து சேர்ந்த காலத்தில், (ஒருவன்) இரு கை ஏந்தி - இரண்டு கைகளினாலும் தாங்கி (மரியாதையுடன்), வாங்க - பெற்றுக்கொள்ள, (அவனிடத்தில் அவை சேர்வதோடு) இலக்குமியும் - திருமகளும், சேர்வள்-அடைந்து வாசஞ் செய்வாள்; அந்த நாள்-(இந்தப் பொருள்கள் வந்தடையும்) அந்தத் தினத்தில், (அவன்) ஆகா என்றால் - இவையெனக் காகாவென்று அவற்றைப் பெறத் தடைசெய்தால், இலக்குமியும்-(தானே வந்து சேரக்கூடிய) திருமகளும், அவனை விட்டு அகலுவாள் - அவனை விட்டு நீங்கிச் செல்வாள்.

(வி - ரை) செந்தமிழ்நூல் முதலியவை தாமே வந்து சேரும்போது அவற்றை விருப்பத்துடனே இரண்டு கைகளையு மேந்திப் பெற்றுக்கொள்ளாதவனிடத்தில் இலக்குமி வாசஞ் செய்யமாட்டாள் என்பது இச் செய்யுளின் கருத்து.

தமிழ் என்னுங் கருவியின் பெயர் அதனா லாகிய நூலுக்காயினமையின் இது கருவியாகுபெயர். தன்னினும் மிகுதியான ஆற

அஃறிணைப் பொருள்களோடு சேர்ந்து வந்தமையின் தோகையென்னும் உயர்திணை, மற்றவற்றின் மிகுதிபற்றி அஃறிணை முடிபை யேற்றது; "திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும், மிகவினு மிழிபினு மொருமுடி பினவே," (ந-பொ-சூ-உஎ) என்பது விதி. அடைகாய் என்பதில் அடை-வெற்றிலை, காய் - பாக்குக்காய்; இவ்விரு சொற்களுஞ் சேர்ந்து ஒரு சொன்னீர்மையனவாய் 'அடைகாய்' என வந்தன. (ந.அ)

இன்னவர் மழை பெய்யெனப் பெய்யு மென்பது

[இன்னிசை வெண்பா]

கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டன
செய்வகை செய்வான் தவசி கொடிதொரீஇ
நல்லவை செய்வா னரசனிம் மூவர்
பெய்யெனப் பெய்யு மழை.

(ப-ரை) கொண்டான்-(தன்னை மணஞ்செய்து மனைவியாகக்) கொண்டவனுடைய, குறிப்பு அறிவாள் - உள்ளக் குறிப்பை யறிந்து நடப்பவளே, பெண்டாட்டி - மணந்த கணவனுக்குத் தகுதியான மனைவியாவள்; கொண்டன - தான் உரிமையாகக் கொண்ட விரதங்களை, செய் வகை-நடத்தவேண்டிய முறைமைப்படி, செய்வான்-நடத்துவோனே, தவசி - சரியான தவத்தையுடையவனுவன்; கொடிது-தீங்கினின்றும், ஒரீஇ - நீங்கி, நல்லவை - நல்ல நீதியான காரியங்களை, செய்வான்-நடத்துவோனே, அரசன்-செங்கோன் முறை வழுவாத மன்னனுவன்; (இவர்களுடைய மகிமை அளவிடற்கரியதாம் ஆதலின்) இம்மூவர் - இந்த மூன்று வகையாரும், பெய் என-பெய் என்று சொல்ல, மழை - மாரியும், பெய்யும் - (இவர்களுடைய வார்த்தையைத் தெய்வ வாக்காகக் கருதித் தடையின்றி உடனே) சொரியும்.

(வி - ரை) கொண்டவன் குறிப்பறிந்து நடக்கும் மனைவியும், விரதங்களை முறைப்படி செய்து முடிக்கும் தவசியும், செங்கோன் முறை பிசகாத அரசனும் தெய்விகமுடையவராதலின், இவர்களுடைய வார்த்தைப்படியே, மேகமும் மழையைச் சொரியும். இம் மூவருள் கொண்டவனை உயர்வாக நினைக்கும் பெண் சொன்னமாத்திரத்தில் மழை பெய்யுமென்பது, "தெய்வந் தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யு மழை," என்னுந் திருக்குறளானு முணரப்படும். இவ்வெண்பாவிலுள்ள ஈற்றடி இங்கு உதாரணங் காட்டிய குறளின் ஈற்றடியேயாம்; "முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும், பொன்னேபோற் போற்றுவ மென்பதற்கும் முன்னோரின், வேறுநூல் செய்துமெனு மேற்கோளில் லென்பதற்குங், கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்," என்ற வழிநூல் சார்புநூல்களின் சிறப்பு விதிபற்றி இக் குறள்வெண்பாவி னீற்றடி இச் செய்யுளின் ஈற்றடியாக எடுத்தாளப்பட்டது.

இச் செய்யுள் தனிச்சொல்லின்றிப் பல விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா. (௩௪)

பொருளை நல்வழியிற் செலவிடுவோர் எமவாதனையினின்று நீங்குவ ரென்பது

[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

கைப்பொருள் பெற்ற ஞான்றே கடவுளா லயத்திற் கீந்து
மெய்ப்படு புராண நூல்கள் விருப்பொடு கேட்டு வந்து
வைப்பென விரப்போர்க் கீந்து வருப்வ ருளரேற் கூற்ற
மொய்ப்புயத் தண்டந் தப்பி முன்னவ னின்பத் தாழ்வார்.

(ப-ரை) கைப்பொருள்-கையி லடையக்கூடிய திரவியத்தை, பெற்ற ஞான்றே-அடைந்தபொழுதே, (அதனை) கடவுள்-தெய்வத்தி

னது, ஆலயத்திற்கு - கோவிலுக்கு (பிரயோசனப்படும்படி), ஈந்து கொடுத்து, மெய்ப்படு - மெய்யாகிய, புராணம் - புராணங்களையும், நூல்கள்-மற்றைய சாஸ்திரங்களையும், விருப்பொடு-பிரியத்துடனே, கேட்டு-(அத் திரவியத்தைச்செலவிட்டு அத னுதவியால்) சிரவணஞ் செய்து, உவந்து - சந்தோஷித்து, வைப்பு என-(நாம் இரப்போர்க் கீவதே பிற்காலத்தி லுதவும்) நிட்சேபப் பொருளாம் என்று கருதி, இரப்போர்க்கு யாசிப்பவருக்கு, ஈந்து-அதனை உதவி, வருபவர்-வசித்து வருங் குணமுடையவர், உளரேல்-(உலகத்தில்) இருப்பார்களானல், (அவர்கள்) கூற்றம் - எமனுடைய, மொய்-பெருமை பொருந்திய, புயம் - புஜத்திலேயுள்ள, தண்டம் - தன்டாயுதத்தா லேற்படும் ஹிம்சையினின்றும், தப்பி-தவறி, மூன்னவன்-கடவுளா லேற்படும், இன்பத்து - பேரின்ப சாகரத்துள்ளே, ஆழ்வர் - மூழ்கி ஆனந்திப்பார்கள்.

(வி - ரை) மனிதர் தாம் பெற்ற செல்வத்தைக் கோவிற்றிருப்பணி செய்வதிலும், புராண நூல்களைச் சிரவணஞ் செய்வதிலும், இரப்போர்க் கீவதிலும் செலவிடுவார்களேயானல், அவர்கள் எமதண்டத்தா லேற்படுந் துன்பத்தினின்று நீங்கிக் கடவுள் கிருபையா லேற்படும் பேரின்பத்தை அடைவார்க ளென்பது இதன் கருத்து.

கடவுள் ஆலயம் - ஆறும் வேற்றுமைத் தொகை; "இயல்பினும் விதியினும் நின்ற வுயிர்முன் கசதப மிகும்..." என்கிற சூத்திர விதி பற்றி, கைப்பொருள் என்பதில் வலி மிக்கது. 'யரழ முன்னர்க் கசதப வல்வழி, இயல்பு மிகலு மாகும் வேற்றுமை, மிகலு மினத் தோ டுறழ்தலும் விதிமேல்,'' (மெ-பு-சூ-உக) என்ற சூத்திர விதியால், 'மெய்ப்படு' என்பதில் யகர மெய்யின் முன் வலி மிக்கது. தண்டத்தப்பி - ஐந்தாம் வேற்றுமைத் தொகை; நீக்கப்பொருளது. ()

பயனற்ற வுடலை விட்டு நீங்குதல் நலமெனல்

[நேரிசை வெண்பா]

பந்தவுடல் வீண்பாடு பட்டவுடல் சீசீதுர்க்
கந்தவுட லொன்றுக்கா காதவுடல்—இந்தவுடல்
வைத்துப்பார்த் தென்ன வலிய வுயிர்மாய்த்துச்
செத்துப்போ னாலுநல்ல தே.

(ப - ரை) பந்த உடல் - (மண் பெண் பொன் என்கிற பாச) பந்தங்கட் கிடமாயுள்ள உடம்பும்; வீண் பாடு பட்ட உடல் - (நிலையற்ற உலக சுகத்தை யடைவதற்காக) வீண் பிரயாசைப்பட்ட உடம்பும்; சீசீ—, துர்க்கந்த உடல் - (மல மூத்திர முதலியவை நிறைந்து அவற்றா லேற்பட்ட) கெட்ட நாற்றத்தையுடைய உடம்பும்; ஒன்றுக்கு - ஒரு நற்காரியத்திற்கேனும், ஆகாத உடல் - பிரயோசனப் படாத உடம்பும்; (ஆகிய) இந்த உடல்-இத்தன்மையான தேகத்தை, வைத்து - (உலகத்திலே உயிரோடு சேர்ந்து வாழும்படி நிலையாக) நிறுத்தி, பார்த்து - அழகு பார்ப்பதனால், என்ன - என்ன பயனுண்டாம்? (ஒரு பிரயோசனமு மில்லை ஆதலால்,) உயிர் - (இத்தகைய தேகத்திலுள்ள) உயிரை, வலிய - வலோற்காரமாக, மாய்த்து - வருத்தி நீக்கி, செத்துப்போனாலும் - (இத்தகைய வுடலை யழித்து) இறந்துபோனாலும், நல்லது - நன்மையேயாம்.

(வி-ரை) மனித தேகத்தை யெடுத்தோர் அதனை நல்வழியில் உபயோகப்படுத்தி அதனுதவி கொண்டு முத்தி மார்க்கத்தைத் தேட வேண்டும்; அவ்வாறின்றி அவ் வுடலைப் பந்தத்திற் கேதுவான வீண் பாடுபடுவதிலும், ஆகாரங்களை நிரப்பித் துர்க்கந்த மதிகரிப்பதிலும், நிர்ப்பிரயோசனமா யிருப்பதினும் உபயோகப்படுத்துவதால் ஒரு நன்மையு மில்லையாம். அதை வைத்திருப்பதைக் காட்டினும் ஒழித்துவிடுவதே நன்மையாம்.

சீ சீ - இகழ்ச்சிக் குறிப்பு. 'பார்க்க' என்னும் செயவெனெச்சம் 'பார்த்து' என்னும் செய்தெனெச்சமாகத் திரிந்து வந்தது. 'ஒன்றுக்கு' என்பதில் இழிவு சிறப்பும்மை தொக்கது. 'என்ன' என்பதன் பின், அதற்கேற்ப, 'பயனுண்டாம்' என்னுஞ் சொற்றொடர் இசையெச்சமாக வருவித் துரைக்கப்பட்டது. ஈற்றேகாரம் தேற்றப்பொருளில் வந்தது. (சக)

கால மறிந்து முன்னரே அறஞ் செய்யவேண்டுமெனல்

[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

பசிமிகுந்த பின்னெல்லை விதைப்பதுபோல்
வீட்டிடைத்தீப் பற்றிக் கொண்டு
நசியும்போ ததையவிக்க வாறுவெட்டல்
போலும்போர் நடக்குங் காலை
விசிகநூல் கற்பமுயல் வதுபோலுங்
கபமிஞ்சி விக்கிச் சிக்கி
இசிவுகொண்டு சாங்காலத் தெப்படிநீ
யறம்புரிவா யிதயப் பேயே.

(ப - ரை) இதயப் பேயே - மனமாகிய பைசாசமே!, பசி - பசி நோயானது, மிகுந்தபின் - (ஒருவனுக்கு) அதிகரித்தபின், (அப் பசியைத் தணித்துக்கொள்ளும் உணவு சமைத்தற்குரிய அரிசியை விரும்பி) நெல்லை - நெல் முளையை, விதைப்பதுபோல்-வயலிற் கொண்டு போய் அவன் விதைப்பதுபோலவும்; வீட்டிடை - வீட்டினிடத்தே, தீப்பற்றிக்கொண்டு - நெருப்புப் பிடித்துக்கொண்டு, நசியும்போது - (அவ் வீடு) நாசமாகும்போது, அதை - அந்த நெருப்பை, அவிக்க - அமர்த்துதற்கு, (ஜலத்தை விரும்பி ஒருவன்) ஆறு-நதியை, வெட்டல்போலும் - தோண்டுதல்போலவும்; போர் - யுத்தமானது, நடக்குங்காலை - நடந்துகொண்டிருக்குஞ் சமயத்தில், விசிக நூல்-அஸ்திர சாஸ்திரத்தை, கற்க - படிக்க, முயல்வதுபோலும் - ஒருவன் முயற்சி

செய்வதைப்போலவும்; (நீ இப்பொழுதே அறஞ்செய்ய நாடாமல் நிலையற்ற உலக வின்பங்களை யனுபவித்துவிட்டு வயதான பின்பு செய்துகொள்ளலாமென்று நினைக்கின்றனை; (இந்த எண்ணம் தப்பானதாகும்); கபம்-கோழையானது, மிஞ்சி-அதிகரித்து, விக்கி-(சாப்பிடும் உணவு முதலியவை) தொண்டையி லடைத்துக்கொள்ள, சிக்கி - (மூச்சானது வெளிப்படாமல்) இடையில் தங்கிக்கொள்ள, (அதனால்) இசிவு கொண்டு - (நரம்புகள்) இழுத்தலைக்கொண்டு, சாங் காலத்து - உடல் வீழ்ந்து நாசமாகும் அக்காலத்திலே, நீ—, அறம் - தருமத்தை, எப்படிப் புரிவாய்-எவ்வாறு செய்து நிறைவேற்றுவாய்? (ஒருபோதும் முடியாது; ஆதலால், இப்பொழுதே, விரைந்து தருமத்தைச் செய்து உனக்குப் பிற்காலத்திலே உதவும் புண்ணியத்தைத் தேடிக்கொள்வாயாக).

(வி - ரை) இச் செய்யுள், மனத்தை நோக்கி விரைந்து அறஞ் செய்யுமாறு தூண்டுதலாகிய கருத்தமைத்துச் செய்யப்பெற்றது. இதனால் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மனத்தை நோக்கித் தகுந்த காலத்திலேயே தருமம் புரியுமாறு தூண்டவேண்டுமென்பது விளங் கும். மனித தேகம் நிலையற்றதாதலின், அஃதிருக்கும்போதே விரைந்து தருமஞ் செய்ய முயலவேண்டும்; அவ்வாறின்றி மரணஞ்சமீபித்த விருத்தாப்பிய காலத்தில் அதனைச் செய்துகொள்ளலாமென்று நினைத்தல், பசி அதிகரித்தபின் உணவுக்கு நெல்லை விதைப்பதையும், தீப் பற்றி யெரியும்போது அதனை யவித்தற்குத் தண்ணீரெடுக்கும் பொருட்டு ஆறு வெட்டுவதையும், சண்டை நெருங்கிய காலத்தில் அஸ்திரவித்தை கற்க முயல்வதையும் நிகர்க்கும். இங்ஙனம் அறத்தைப் பின்னே செய்வோமென்று நினையாமல் முன்னரே செய்ய வேண்டுமென்பதை, "மற்றறிவா நல்வினை யாமிளைய மென்னாது, கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்மின், முற்றி யிருந்த கனியொழியத் தீவளியால் நற்கா யுதிர்தலு முண்டு," என்னும்

நாலடிச் செய்யுளு முணர்த்தும். இவ்வுரையிடையில் பொருட்பொரு ந்த நோக்கிச் சில சொற்றொடர்கள் இசையெச்சமாக வருவிக்கப்பட் டுள்ளன. (சஉ)

வாழ்வு நிலையற்றதாதலால் விரைவில் அறத்தைத் தேடவேண்டுமென்பது

[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

இன்றருணோ தயங்கண்டோ முயர்ககன
முகட்டின்மிசை யிந்தப் பானு
சென்றடைய நாங்காண்ப தையமதைக்
காண்கினுமேற் றிசையி ருக்குங்
குன்றடையு மளவுநா முயிர்வாழ்வ
தரிததன்முன் குறுகுங் கூற்றம்
என்றச்சத் துடன்மனமே மறவாம
லறவழியி லேகு வாயே.

(ப - ரை) மனமே-நெஞ்சமே! (உலக வாழ்வு சதமன்று, பின் செய்வோமென் றெண்ணாது விரைந்து அறத்தைத் தேடவேண்டும்; ஆதலால்,) இன்று - இன்றைக்கு, அருணோதயம்-சூரியோதயத்தை கண்டோம் - பார்த்தோம்; இந்தப் பானு - இந்தச் சூரியன், உயர் - உயர்ந்த, ககனம்-ஆகாயத்தின், முகட்டின் மிசை-உச்சியில், சென்று அடைய - போய்ச்சேர, நாம்—, காண்பது - பார்ப்பது, ஐயம்-சந்தே கம்; அதை - அந்தச் சூரியனை, காண்கினும் - (அப்படியே ஆகாய முகட்டில் வரப்) பார்த்தாலும், மேல் திசை-மேற்குத் திக்கில், இருக் கும் - இருக்கின்ற, குன்று - அஸ்தமனகிரியில், அடையும் அளவும்- (அந்தச் சூரியன்) போய்ச் சேரும்வரையிலும், உயிர் வாழ்வது - நாம் உயிருடனே நிலைபெற்று வாழ்வது, அரிது - அருமையாகும்; அதன் முன்-(அவ்வாறு அந்தச் சூரியன் அஸ்தமனகிரியை) அடைவதற்கு

மூர்த்தியே, கூற்றம் - எமன், குறுகும் - (நம்மைக் கொண்டு செல்ல) வருவான், என்று - என்று நினைத்து, அச்சத்துடன்-(சாவு சமீபத்தி லுள்ளது என்கிற) பயத்துடனே, மறவாமல் - மறந்துவிடாமல், அறவழியில் - தரும மார்க்கத்தில், ஏகுவாய் - செல்வாயாக.

(வி-ரை) இச்செய்யுளும், யாக்கை நிலையாதாகையால் மரணங் குறுகுவதற்குள் விரைந்து அறத்தைத் தேடவேண்டுமென்று மனத்தை நோக்கிக் கூறுவதாக இயற்றப்பட்டது. இதனால், ஒவ்வொருவரும், 'சூரியன் உதயமாகி அஸ்தமிப்பதற்குள் மரணம் வருகிறது நிச்சயமாதலால் இப்பொழுதே அறவழியிற் புகவேண்டும்' என்று தம் மனத்திற்குக் கூறி அதனைத் தருமமார்க்கத்திற் றிருப்பி வீண் காலம் போக்காது விரைந்து அறத்தைத் தேடவேண்டு மென்பது பெறப்படும். "இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது, பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி, ஒருவுமின் றீயவை யொல்லும் வகையான், மருவுமின் மாண்டா ரறம்," என்னும் நாலடிச் செய்யுளும் இதனை விளக்குதல் காண்க. திசை யிருக்கும் - ஏழாம் வேற்றுமைத்தொகை. (சஈ)

இன்னவர்க்குப் பெண்ணைக் கொடுத்தல் தகாதென்பது

[எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

முத்தியில் விருப்ப முடையவன் மிடியன்
　　மூர்க்கன்சேண் டேயத்தி லுள்ளோன்
புத்தியில் வயிரம் பொருந்திய சூரன்
　　புதல்விதன் வயதின்மும் மடங்கு
தத்திய வயது ளோரளினர் தமக்குத்
　　தாணியி லொருவரு முள்ள
நத்திரன் மகளைத் தரத்தகா தென்றுக்
　　கணிதநூல் நவின்றிடு மன்றே.

(ப - ரை) முத்தியில் - மோக்ஷத்தில், விருப்பம் உடையவன் - பிரிய முள்ளவன்; மிடியன் - தரித்திரத்தையுடையவன்; மூர்க்கன் - ஆங்காரமுள்ளவன்; சேண் தேயத்தில் உள்ளோன் - தூரதேசத்தி லுள்ளவன்; புத்தியில் - அறிவில், வயிரம் - (கொண்டதை விடாத தாகிய சலஞ்சாதித்த லென்னும்) வைராக்கியத்தை, பொருந்திய - அடைந்த, சூரன் - (அஞ்சாத் தன்மையுள்ள) வீரன்; புதல்விதன் - (மணஞ்செய்து கொடுக்கும்) புத்திரியினுடைய, வயதின்-வயதைப் பார்க்கிலும், மும்மடங்கு - மூன்று பங்கு, தத்திய - கடந்ததிகரித்த, வயது உள்ளோன் - வயதையுடையவன், (ஆகிய) இன்னார் தமக்கு - இத்தன்மையை யுடையவர்களுக்கு, தரணியில் - இப் பூலோகத்தில், ஒருவன் - எவரும், உள்ளம் நத்தி - மனத்தில் விருப்பங் கொண்டு, நல் மகளை-நல்ல குமாரத்தியை, தரத் தகாது-(மணஞ்செய்துகொடுத் தல்) கூடாது, என்று - என்று, கணித நூல் - ஜோதிடசாஸ்திரம், நவின்றிடும் - சொல்லும்; (ஆதலால், இவர்களுக்கு எவரும் பெண் ணைக் கொடுத்தல் கூடாதாம்.)

(வி-ரை) மோக்ஷ விருப்புடையவன் உலகவின்பத்தை வெறுக் கக் கூடியவனாதலின் அவன், பெண்ணைப் பக்ஷமாகக் கொண்டாட மாட்டான். தரித்திரனிடத்திற் சேரும் பெண் ஒரு சுகத்தையு மடையமாட்டாள். மூர்க்கன், அற்பக் குற்றத்திற்கும் கோபங்கொ ண்டு பெண்ணை வருத்துவானாதலால் அவனிடத்திற் சேரும் பெண் எப்பொழுதும் துன்பத்தையே அடைந்துகொண்டிருப்பாள். தூர தேசத்தி லுள்ளவனுக்குப் பெண்ணைக் கொடுத்தால் ஆபத்து முதலி யன நேர்ந்த காலங்களில் விரைவில் சந்தித்தற் கேதுவில்லாமற் போவதால் கவலைக் கிடமுண்டாகும். கொண்டதை விடாமல் சலஞ் சாதிக்கும் வைராக்கிய முடையவனுக்குப் பெண்ணைக் கொடுப்பின் அவன் ஒவ்வொரு சமயங்களில் நேர்ந்த அற்பக் குற்றங்களையும் விடாமல் மனத்தில் வைத்துக்கொண்டு அவளை அடிக்கடி வருத்தித்

தானிட்டதே சட்டமாகப் பிடிவாதஞ் செய்வானாதலின், அப் பெண் மிகுந்த துன்பத்திற்குள்ளாக ஏதுவாகும். வயதில் முதிர்ந்தவனுக்குப் பெண்ணைக் கொடுத்தால் அவள் தன் பருவகாலத்தில் அடைய வேண்டிய இல்லறவின்பத்தை மனத்திருப்தியோடு அடைய ஏது வில்லாமற்போம்.

புதல்விதன் வயது - ஆறும்வேற்றுமைத் தொகை; இதில் தன் சாரியை. ஒருவர் என்பது சொல்லாற், பன்மையேயாயினும் பொரு ளால் ஒருமையாம். "ஒருவ ரென்ப துயரிரு பாற்றாய்ப், பன்மை வினைகொளும் பாங்கிற் றென்ப," (ந-பெ-௩௨) என்னுஞ் சூத்திரத் தா லுணர்க. தரத்தகாது-எதிர்மறைக் குறிப்பு வினைமுற்று. (௪௪)

இன்ன தன்மையுடையர்க்குப் பெண்
கொடுக்கலா மென்பது
[எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

புரைதபு குணனுஞ் சீலமும் வனப்பும்
பூரண வாயுளுந் துப்புங்
கரையில்விற் பனமும் பாலனம் புரியுங்
கருத்தருங் குறைவிலா தாக
விரவுசெல் வமுமா மெண்வகை யுடைய
வாடவர் விருப்புறு வண்ணம்
பரவினின் றவர்க்கு மகட்கொடை யுதவல்
பருணிதர் கடமைய தாமால்.

(ப-ரை) புரை தபு - குற்றம் நீங்கிய, குணனும் - நற்குணமும்; சீலமும் - நல்லொழுக்கமும்; வனப்பும் - அழகும்; பூரணம்-நிறைந்த, ஆயுளும் - வயதும்; துப்பும்-தேகவலிமையும்; கரையில்-எல்லையற்ற, விற்பனமும் - கல்வியறிவும்; பாலனம் புரியும் - (சகல வுயிர்களையுந்

தன்னுயிர்போல நினைத்துப்) பாதுகாத்தல் செய்யத்தகுந்த, கருத்தும் - எண்ணமும்; குறைவிலாதாக - குற்றமற்றதாக, (அதாவது, நல்வழியில் வந்ததாக), விரவு - வந்து சேர்கின்ற, அரும் - கிடைத்தற்கரிய, செல்வமும்-ஐசுவரியமும், ஆம்-ஆகிய, எண் வகை-எட்டு வகைகளையும், உடைய - உரிமையாகப் பொருந்திய, ஆடவர் - புருஷர், விருப்புறு வண்ணம் - விருப்பங் கொண்டபடியே, பரவி - அவரைத் துதித்து, நின்று - அவருக் கிணக்கமான வழியில்நின்று, அவர்க்கு - அவ்வாடவர்க்கு, மகள் கொடை - கன்னிகாதானத்தை, உதவல்-கொடுத்தல் (அதாவது, பெண்ணைக் கட்டிக்கொடுத்தல்), பருணிதர் - அறிவுடையோரது, கடமையது ஆம் - முறைமையாம்.

(வி - ரை) பெண்ணை விரும்பும் ஆடவனுக்குக் குற்றமற்ற குண மிருந்தால் அவன் அப்பெண்ணுக் கிதமாக நடந்துகொள்வான்; நல்லொழுக்க மிருந்தால் அவளை ஒழுங்கில் நடத்துவான்; வனப்பும் நிறைந்த ஆயுளு முண்டாயிருப்பின் அப் பெண் திருப்தியுடன் சுமங்கலியாய் வாழ்தற் கேதுவாம்; தேகவலிமை யேற்பட்டிருப்பின் குடும்ப காரியங்களை வல்லமையுடன் அவன் நடத்தி அப்பெண்ணிற்குச் சந்தோஷத்தை யுண்டாக்குவான்; கல்வியறிவிருந்தால் மிக்க கீர்த்தியை யடைந்து அவளுக்கும் புகழை யுண்டாக்குவான்; எல்லா வுயிர்களையுங் காக்குங் கருத்திருந்தால் அவளை அன்புடன் கொண்டாடுவான்; செல்வ மிருந்தால் அப்பெண் இவ்வுலகவின்பத்தை யடைதற் கேதுவாம். ஆதலின் இவற்றை யுடையவனுக்கே பெண்ணைக் கொடுத்தல் சிறந்ததாம்.

தபு - பெயரெச்சம். கருத்து-இதில் எண்ணும்மை தொக்கது. மகரவிறுதி யஃறிணைப் பெயரின், னகரமோ டுறழா நடப்பன, வுளவே,'' (ந-எ-சுஎ) என்னும் சூத்திர விதிபற்றி, குணம் என்பதன் ஈற்று மகரம் னகரமாகத் திரிந்தது; இது மொழியிறுதிப்போலியெனப்படும்; இங்கே மகரத்துக்கு னகரம் போலி. கொடை-தொழிற்

பெயர்; இதில் கொடு - பகுதி, ஐ - தொழிற்பெயர் விகுதி, உகரக் கேடு சந்தி. கடமையது - இதில் அது - சாரியை. ஆல் - ஈற்றசை.

பெண் கொடுக்குங் காலத்தில் பிதா முதலியவர்க் கேற்படும் விருப்பங்கள் இன்னவை யென்பது

[நேரிசை வெண்பா]

பெண்ணுதவுங் காலைப் பிதாவிரும்பும் வித்தையே
எண்ணில் தனம்விரும்பு மீன்றதாய்—நண்ணிடையிற்
கூரியநற் சுற்றங் குலம்விரும்புங் காந்தனது
பேரழகு தான்விரும்பும் பெண்.

(ப - ரை) பெண் - பெண்ணை, உதவுங்காலை - (ஒருவனுக்கு மணஞ்செய்து) கொடுக்க நேர்ந்த காலத்தில், பிதா-(அப் பெண்ணுக்குத்) தகப்பன், வித்தையே - (மணமகனிடத்தில் உண்டாயிருக்கும்) கல்வியையே, விரும்பும் - விரும்புவான் (அதாவது: கல்வியுடையவனுக்கே பெண்ணைக் கொடுக்க விரும்புவான்); (ஈன்ற-அப் பெண்ணைப் பெற்ற, தாய்-அன்னையானவள், (அந்த மாப்பிள்ளையினிடத்திலுள்ள) எண்ணில் - அளவில்லாத, தனம் - பொருளை, விரும்பும்-விரும்புவாள் (அதாவது: மிகுந்த பொருளுள்ளவனுக்கே தன் மகளைக் கொடுக்க இசைவாள்); இடையில்- அவர்களுக் கிடையிலே, நண் - பொருந்திய, கூரிய - மிகுதியான, நல் - நல்ல, சுற்றம் - உறவினர், குலம்-(அப் புருஷனுக் கேற்பட்டிருக்கும்) நல்ல மரபை, விரும்பும் - விரும்புவார்கள் (அதாவது: நற்குலமுடையவனுக்கே அப் பெண்ணைக் கொடுக்க விரும்புவார்கள்); பெண் - மணமகளோ, காந்தனது - (தன்னை மணந்துகொள்ளும்) நாயகனுடைய, பேரழகு- உயர்ந்த அழகை, விரும்பும்-விரும்புவாள்(அதாவது: அழகிய கணவனுக்கே வாழ்க்கைப்பட விரும்புவாள். ஆதலால், எல்லார்க்கும் சம்

மதமாக எல்லாக் குணங்களும் பொருந்தியிருப்பவனுக்குப் பெண்ணைக் கொடுத்தல் வேண்டும்.

(வி - ரை) ஆடவர் ஞானமுடையவரா யிருத்தலையே விரும்புவது இயற்கையாதலின் பெண்ணின் பிதா 'மருமகன் கல்வி யுடையவனா யிருக்கவேண்டும்' என்று விரும்புவான். பெண்கள் பெரும்பான்மையும் உலகத்தில் சுகத்துடன் வாழ விரும்பும் இயற்கையை யுடையவராதலின், தாயானவள், 'மருமகன் செல்வமுடையனா யிருத்தல் வேண்டும்' என்று விரும்புவாள். சுற்றத்தார், குலவொழுக்கத்தையே முக்கியமாகக் கருதும் இயல்பினராதலின் அவர்கள் மாப்பிள்ளையின் நற்குலத்தைக் கவனிப்பார்கள். பருவமுள்ள பெண்கள் மனத்திற் கினிமையான இன்பத்தையே பெரும்பாலும் விரும்பும் இயல்புடையவராதலின் மணமகள் தன் கணவன் அழகுடையவனா யிருத்தல் வேண்டுமென்று விரும்புவாள்; "கைந்நிறைந்த பொருளினும் கண்ணிறைந்த கணவனே மேல்," என்னும் பழமொழி இதனை விளக்கும். ஒவ்வொருவர் ஒவ்வொன்றைக் கருதினும் எல்லார்க்கும் சம்மதமாக மணமகனுக்கு எல்லாச் சிறப்பும் பொருந்தியிருத்தலே தகுதியாம். பெண் கொடுத்தல் பெருங்காரிய மாதலின் ஒவ்வொருவருடைய அபிப்பிராயத்தையுந் தழுவி எல்லா விஷயங்களையும் ஆராய்ந்து பெண்ணைக் கொடுக்கவேண்டுமென்பது இச் செய்யுட் கருத்து.

வித்தையே - இதில் ஏகாரந் தேற்றப்பொருளது. கூரிய - இது பெயரெச்சம்; இதில், கூர் - மிகுதிப்பொருளைக் காட்டும் உரிச்சொல்; இது பகுதி; அ - பெயரெச்ச விகுதி; இ - சாரியை; யகரவுடம்படுமெய் தோன்றியது சந்தி. சுற்றம் - உறவு; இது குணவாகுபெயராய் அதனை யுடையார்க் காயிற்று. செய்யுமென்முற்று பல்லோர் படர்க்கையிற் சாராதாயினும் சுற்றமென்னும் எழுவாய் அஃறிணைபோ னிருத்தலின் அதற் கியையச் சார்ந்து விரும்பும் என வந்தது. பேர்-பெருமை யென்னும் பண்புத் திரிபு. (௪௬)

ஈசனுக் காட்படல் எல்லாவற்றினு மரிதேன்பது

[கலித்துறை]

மக்க ளாக்கையிற் பிறத்தலே யரிதுமற் றதிலுந்
தூக்க கூன்குரு டூமையைத் துறத்தலு மரிது
நற்கு லத்திடை வருதலு மரிதுஞா னத்தான்
முக்க ணீசனுக் காட்படல் முற்றிலு மரிதே.

(ப-ரை) (ஒருவர் எல்லாப் பிறப்புக்களிலும்) மக்கள்-மானிடருடைய, ஆக்கையில் - உடம்பில், பிறத்தலே-பிறப்பதுவே, அரிது-அருமையாம்; அதிலும் - அங்ஙனம் பிறப்பதிலும், தூக்கம் - விசனம் நிறைந்த, கூன் - கூனுயிருக்குந் தன்மையையும், குருடு - கட்புலனின்றி யிருக்குந் தன்மையையும், ஊமையை - வாய்பேசாதிருக்குந் தன்மையையும், துறத்தலும் - நீங்கி நல்ல உறுப்புக்களோடு பிறத்தலும், அரிது - அருமையாம்; அதிலும்—, நற்குலத்திடை - நல்ல குலத்தில், வருதலும் - தோன்றி வருவதும், அரிது - அருமையாம்; அதிலும்—, ஞானத்தால் - அறிவினாலே, முக்கண் - மூன்று கண்களையுடைய, ஈசனுக்கு - சிவபெருமானுக்கு, ஆட்படல் - அடிமையாதல், முற்றிலும் - முழுவதும், அரிதே - அருமையாம்.

(வி - ரை) மானிடதேக மெடுத்த ஒருவனுக்கு எல்லாச் சிறப்புக்களிலும், சிவபெருமானுக் காட்படுஞ் சிறப்பே மேலானதாம் என்பது இச்செய்யுட் கருத்து. ஈசனுக்கு மூன்று கண்கள்: சந்திரன், சூரியன், அக்கினி யென்பனவாம். மற்று என்னும் இடைச்சொல் அசைநிலையில் வந்தது. அரிது-பண்படியாகப் பிறந்த ஒன்றன்படர்க்கைக் குறிப்பு வினைமுற்று; இதில் அருமை-பகுதி, து-ஒன்றன்படர்க்கை விகுதி, மை கெட்டதும் நடுநின்ற ரு ரி ஆனதும் சந்தி. அதிலும் என்னும் உயர்வு சிறப்பும்மை வாக்கியம் மற்றைய இரண்டிடங்களினுங் கூட்டப்பட்டது. (சஎ)

காமங் கொடிதென்பது

[கலி விருத்தம்]

காமத்தா லிந்திரன் கலக்க மெய்தினன்
காமத்தா லிராவணன் கருத்த ழிந்தனன்
காமத்தாற் கீசகன் கவலை யுற்றனன்
காமத்தா லிறந்தவர் கணக்கி லார்களே.

(ப-ரை) காமத்தால் - அகலிகை யென்னும் பெண்ணாசையி னாலே, இந்திரன் - தேவர்களுக்கதிபன், (கௌதமர் கொடுத்த சாபத்தைப் பெற்று) கலக்கம் - மனக் கலக்கத்தை, எய்தினன் - அடைந்தான்; காமத்தால் - சீதையின் ஆசையாலே, இராவணன் - இலங்கைக் கதிபன், கருத்து அழிந்தனன் - தான் கொண்ட எண்ணம் நிறைவேறாமற் கெட்டொழிந்தான்; காமத்தால் - துரோபதையின் ஆசையினாலே, கீசகன் - விராடன் மைத்துனனாகிய கீசகனென்னு மாசன், (அது நிறைவேறாமையினால்) கவலை உற்றனன்-கவலையுற்று வீமனா லிறந்தான்; (இன்னும்) காமத்தால் - பெண்ணாசையினாலே, இறந்தவர்-உயிர் விட்டவர்கள், கணக்கு இல்லார்கள்-எண்ணற்றவ ராவார்கள்; (ஆதலின், பிறர் மனை விரும்புதலாகிய கெட்ட எண்ணத்தை ஒவ்வொருவரும் ஒழித்தல்வேண்டும்).

(வி-ரை) இந்திரன் கௌதமருடைய மனைவியாகிய அகலிகையை விரும்பியபடியால் அக் கௌதமரா லிடப்பட்ட சாபத்தைப் பெற்று உடம்பெல்லாம் யோனிகளாக அந்த அவமானத்தால் வருந்தினன். இராவணன் சீதையை விரும்பியெடுத்துச் சென்றமையால் தன்னுடைய செல்வங்களையெல்லா மிழந்து, தான் கொண்ட எண்ணமும் நிறைவேறாமல் இராமரால் கொல்லப்பட்டான். கீசகன் துரோபதையை விரும்பி அவளுடைய ஏமாற்றத்தி லகப்பட்டு வீமனாற் கொல்லப்பட்டான். ஆதலால், பிறர் மனையாளை விரும்புவோர்க்குச்

சாவு சமீபிக்கு மென்பது நிச்சயம். "விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற், றீமை புரிந்தொழுகுவார்" என்னுந் திருக்குறள் இதனை வலியுறுத்தும்.

எய்தினான், அழிந்தனன், உற்றனன் என்பவை இறந்தகால ஆண்பாற் படர்க்கை வினைமுற்றுக்கள். இறந்தவர் - தெரிநிலை வினையாலணையும் பெயர். கணக்கிலார் - குறிப்பு வினையாலணையும் பெயர்; இதனீற்றில் வந்த கள்-விகுதிமேல் விகுதி. (சஅ)

இதுவுமது

[கலித்துறை]

தீமை யுள்ளன யாவையுந் தந்திடுஞ் சிறப்புந்
தோமில் செல்வமுங் கெடுக்குநல் லுணர்வினைத் தொலைக்கும்
ஏம நன்னெறி தடுத்திரு ளுய்த்திடு மிதனால்
காம மன்றியே யொருபகை யுண்டுகொல் கருதில்.

(ப - ரை) காமம் - பிறர் மனை நயத்தலாகிய பெண்ணாசை யானது, தீமை உள்ளன யாவையும்-கெடுதியுள்ள காரியங்களெல்லா வற்றையும், தந்திடும் - கொடுக்கும்; சிறப்பும் - அழகையும், தோம் இல் - குற்றமற்ற, செல்வமும் - ஐசுவரியத்தையும், கெடுக்கும் - அழித்துவிடும்; நல் உணர்வினை-நல்லறிவையும், தொலைக்கும்-நாசப் படுத்தும்; ஏமம் - இன்பம் நிறைந்த, நல் நெறி-நல்ல முத்திவழியை, தடுத்து - அடைத்து, இருள் - நரகத்தில், உய்த்திடும் - சேர்த்து விடும்; இதனால்-(இப்படிச் செய்கின்ற இதனுடைய) இச் செய்கையி னாலே, கருதில் - ஆராயுமிடத்து, (மனிதர்க்கு இதுவே கொடிய பகையாகும்; ஆதலால்) காமம் அன்றி-இந்தக் காமத்தையல்லாமல், ஒரு பகை-வேறொரு பகை, உண்டுகொல் - உண்டோ? (இல்லை).

(வி - ரை) மோக முள்ளவனுக்குப் பிணி முதலியன நேர்ந்து அழகு கெடுவதோடு, பிறர் மனையாளை விரும்பிச் செல்லுமிடத்து

அடி, உதை முதலிய துன்பங்களெல்லா முண்டாகும்; அது சம்பந்தமாகப் பலவித செலவுகளும் நேருமாகையினாலே செல்வமுங் கெடும்; அதனால் கெட்டோ ருறவு அதிகப்படுமாதலால் அறிவுங் கெடும்; பாவம் அதிகரிப்பதால் முத்தியை அடைவதற்கு மார்க்க மில்லாமற் போம்; நரகமே நிச்சயமாகக் கிடைக்கும். ஆதலால், மனிதருக்கு மிக்க கெடுதிகளை விளைவிக்கத்தக்கது காமமேயன்றி வேறொன் றின்றும். காமத்தால் மேற்கூறிய தீங்குகளெல்லா முண்டாகு மென்பதை "பகைபாவ மச்சம் பழியென நான்கு, மிகவாவா மில்லிறப்பான் கண்," என்னும் வள்ளுவர் சொல்லும் தெள்ளிதில் விளக்கும்.

தந்திடும் - இதில் இடு - துணைவினை. சிறப்பும் என்பதிலுள்ள உம்மை இறந்தது தழுவியது. இல் - இன்மை யென்னும் பண்புச்சொற் றிரிபு. உணர்வு - தொழிற்பெயர். நன்னெறி - பண்புத்தொகை இருள் - குணவாகுபெயராய் அதனையுடைய நரகத்தை யுணர்த்திற்று. காமம் என்னுஞ் சொல் இரண்டிடத்திற்குங் கூட்டப்பட்டது. 'உண்டுகொல்' என்பதில் கொல் என்னு மிடைச்சொல் வினாப்பொருளைத் தந்தது. (சுகூ)

இதுவுமது

[நேரிசை வெண்பா]

அம்பு மழனு மவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும்—வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலாற் காமம்
அவற்றினு மஞ்சப் படும்.

(ப - ரை) அம்பும் - பாணமும், அவிர் - பரந்த, கதிர் - கிரணங்களையுடைய, ஞாயிறும் - சூரியனும், வெம்பி - மிகுந்த வெப்பமாகி, சுடினும் - சுட்டாலும், புறம் - உடம்பின் மேற்பக்கத்திலே, சுடும் -

வெதுப்பும்; காமம் - பெண்ணுசையானது, வெம்பி - அதிக வெப்பமாகி, மனத்தை-(உள்ளே யிருக்கிற) இதயத்தை, கவற்றி-வருத்தப் படுத்தி, சுடுதலால்-சுடுவதனுலே, அவற்றினும்-அந்த அம்பு சூரியன் ஆகியவற்றைக் காட்டினும், அஞ்சப்படும்-பயப்படத்தக்கதாம்.

(வி-ரை) பாணமும், சூரியனும் எவ்வளவு வெப்பமுடையவையாயினும் மேற்புறத்திலேயே சுடும்; காமமோ உட்புகுந்து மனத்தைக் கலக்கிச் சுடும்; ஆதலால், காமமானது வெப்பமுடைய எல்லாவற்றினும் அஞ்சத்தக்கதாம். இஃது இங்ஙனம் அஞ்சக்கூடியதாயிருத்தலினுலே மனிதர் ஒவ்வொருவரும் இதனை நீக்க முயற்சி செய்யவேண்டும்.

சுடினும் - இதிலுள்ள உம்மைகள் இழிவுசிறப்புப்பொருளது. அம்பு, அழல் என்பவற்றிலுள்ள உம்மைகள் எண்ணும்மைகள். அவிர் கதிர்-வினைத்தொகை. வெம்பி - தன்வினையெச்சம். கவற்றி-பிறவினை யெச்சம். அவற்றின்-ஐந்தாம் வேற்றுமை விரி; இது பண்பளவுப் பொருளில் வந்தது; இதிலுள்ள உம்மை உயர்வுசிறப்புப் பொருளது. அஞ்சப்படும், செயப்பாட்டு வினை. இது, நாலடியார்ச் செய்யுள் (௫௦)

இதுவுமது

[கொச்சகக் கலிப்பா]

அஞ்சனவை வேற்கண் ணரிவையர்தம் பேராசை
நெஞ்சு புகின்ஒருவர் நீங்கு நிலைமைத்தோ
எஞ்சல்புரி யாதுயிரை யெந்நாளு மீர்ந்திடுமால்
நஞ்சமினி தம்மவோர் நாளு நலியாதே.

(ப - ரை) அஞ்சனம்-மையை யணிந்த, வை-கூர்மை தங்கிய, வேல் - வேல்போன்ற, கண் - நேத்திரங்களையுடைய, அரிவையர் தம் - பெண்களுடைய, பேராசை - பெரிய விருப்பமாகிய காம

மானது, ஒருவர் - ஒரு மனிதருடைய, நெஞ்சு - மனத்தில், புகின் - புகுந்துவிட்டால், (அது) நீங்கும் நிலைமைத்தோ - அவனை விட்டு நீங்கும்படியான தன்மையை யுடையதோ? (ஒருபோதும் நீங்காது; பின்னை யென்செய்யுமெனில்) உயிரை - அவர்களுடைய உயிர்க்கு, எஞ்சல் புரியாது - கெடுதலைச் செய்யாது (அதாவது, உயிரைக் கொல்லாமல் வைத்துக்கொண்டு) எந்நாளும் - எந்தக் காலத்திலும், ஈர்ந்திடும் - அவர்களுடலைப் பிளந்து துன்பப்படுத்தும்; (ஆதலின், இவ்வாறு கொல்லாமற் கொடுமையைச் செய்யும் இதனைக்காட்டினும், உட்கொண்டவுடனே பின் துன்பப்படுதற் கேதுவில்லாமல் விரைவிற் கொன்றுவிடும்) நஞ்சம் - விஷமானது, இனிது - மிகவும் இனியதாம்; (இஃது அதனைப்போலக் கொல்லாமல் வைத்துக்கொண்டு) ஒரு நாளும் - ஒருதினமும், நலியாது - வருத்தமாட்டாது; (ஆதலால், பிறர் மனை விரும்புதலாகிய காமத்தை எவரும் ஒழித்துவிடல் வேண்டும்.

(வி - ரை) உயிருட னிருந்து நெடுங்காலம் வருந்துவதைக் காட்டினும் உடனே இறந்துவிடுவது நன்மை யாதலால், இங்கே உயிரைக் கொல்லாமல் வைத்துத் துன்புறுத்தும் காமத்தைக் காட்டினும் உட்கொண்ட மாத்திரத்திற் கொல்லும் நஞ்சு நன்மையுடையதாகக் கூறப்பட்டது; நஞ்சினுங் கொடியதென்னவே காமமானது அளவற்ற தீங்கை யுடையதென்பதும், ஒவ்வொருவரும் விட்டகலத் தக்கதென்பதும் பெறப்படும்.

வேற்கண் - உவமத்தொகை. 'எஞ்சல்' என்னுஞ் சொல் எச்சமாக வாமல் தொழிற்பெயராக வந்தமையால், 'உயிரை' என்பதை உருபுமயக்கமாகக் கொண்டு 'உயிருக்கு' என்று பொருளுரைக்கப்பட்டது. 'ஈர்ந்திடும்' என்னும் பயனிலைக்கேற்ப 'அவர்களுடலை' என்னுஞ் செயப்படுபொருள் வருவித் துரைக்கப்பட்டது. 'நீங்கும் நிலைமைத்தோ' என்பதில் ஓகாரம் எதிர்மறைப் பொருளது. (௯௪)

இதுவுமது

[நேரிசை வெண்பா]

ஊரு ளெழுந்த வுருகெழுசெந் தீக்கு
நீருட் குளித்து முயலாகும்—நீருள்
குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி
ஒளிப்பினுங் காமஞ் சுடும்.

(ப-ரை) ஊருள் - ஒரூரிலே, எழுந்த - (எல்லோரும் சாகும் படி சுற்றி வளைந்துகொண்டு பற்றி) ஓங்கிய, உரு கெழு - உருவம் பிரகாசிக்கின்ற, செந்தீக்கு - சிவந்த நெருப்புக்கு, (ஒருவன்) நீருள் குளித்தும்-தண்ணீருக்குள் மூழ்கி யிருந்தாயினும், உய்யல் ஆகும் - தப்பிப் பிழைக்கலாம்; (காமமாகிய நெருப்புக்கோ அங்ஙனந் தப்ப முடியாது) காமம் - பெண் விருப்பானது, நீருள் குளிப்பினும்-மேற் கூறியபடி தண்ணீருக்குள் மூழ்கி யிருந்தாலும், குன்று ஏறி - மலையின்மீதேறி, ஒளிப்பினும் - மறைந்திருந்தாலும், சுடும் - உடலை வெதுப்பி வாட்டும்.

(வி - ரை) ஒரு ஊரிலுள்ள மனிதர்க ளெல்லோரும் சாகும் படி அவ்வூரைச் சுற்றி வளைந்து பெருநெருப்புப் பற்றி யெழுந்த சமயத்திலும் மனிதர் தண்ணீர்க்குள்ளே மூழ்கியிருந்தால் அந் நெருப்பின் வெப்பத்தி லகப்படாமல் தப்பிப் பிழைக்கலாம். காமாக்கினியானது ஒருவனிடத்தில் உண்டாய்விடும் பக்ஷத்தில் அதற்கவன் தப்ப முடியாது; நீருக்குள் மூழ்கினாலும், மலையிலேறி யொளித்தாலும் அவனை அது விடாமற் றொடர்ந்து வாட்டி வருத்தும்; இதனால் நெருப்பினும் காமங் கொடிதென்ப துணரப்படும். ஆதலால், சுக வாழ்வையும், நற்கதியையும் அடைய விருப்பமுள்ளோர் பிறர் மனை யைத்தலாகிய காமத்தை யொழித்தல் வேண்டும்.

'செந்தீக்கு' என்பதிலுள்ள நான்காம் வேற்றுமைக் குவ்வுரு பகைதொடர் பொருளில் வந்தது. 'குளித்தும்' என்பதிலுள் உம்மை விகற்பப்பட்ட சிறப்புப் பொருளில் வந்தது. "அசைநி பொருணிலை யிசைநிறைக் கொருசொல், இரண்டு மூன் றுநா செல்லைமுறை யடுக்கும்," (ந. பொ. சச) என்னுஞ் சூத்திர வி பற்றி அச்சப் பொருணிலையால், 'காமஞ் சுடும்' என்னுஞ் சொ றொடர் இரண்டிடத்து அடுக்கிவந்த தாதலின் ஒரு தொடர்க்கும டும் பொருள் கூறப்பட்டது. இச் செய்யுள் நாலடியாரி லுள்ளது. (

கோபங் கொடி தென்பது

[கலி விருத்தம்]

வெகுளியே யுயிர்க்கெலாம் விளைக்குந் தீவினை
வெகுளியே குணந்தவம் விரத மாய்க்குமால்
வெகுளியே யறிவினைச் சிதைக்கும் வெம்மைசால்
வெகுளியிற் கொடும்பகை வேறொன் றில்லையால்.

(ப-ரை) வெகுளியே-கோபமே, உயிர்க்கு எல்லாம் - உயிர்க செல்லாம், தீவினை - கொடுஞ் செய்கையை, விளைக்கும் - உண்டா கும்; வெகுளியே—, குணம் - நற்குணத்தையும், தவம்-தவத்தையும் விரதம் - விரதானுஷ்டானத்தையும், மாய்க்கும் - கெடுக்கும்; வெகு ளியே—, அறிவினை - புத்தியை, சிதைக்கும் - நாசப்படுத்தும் வெம்மை சால் - வெப்ப மிகுந்த, வெகுளியின் - கோபத்தைக்காட் னும், (மனிதர்க்கு) கொடும் பகை-கொடிய விரோதம், வேறொன்று மற்றொன்று, இல்லை - இன்றாம்; (ஆதலின், ஒவ்வொருவரும் இ கோபத்தை விலக்கவேண்டியது அவசியமாம்).

(வி - ரை) கோபமானது உயிரைப் போக்குதற்கும் ஏதுவ மாகையால் அஃது உயிர்கட்கெல்லாந் தீவினை விளைக்கக் கூடி தாம். ஒருவன் குணம், தவம், விரதம், அறிவு ஆகியவைகளை யுடைய

வனு யிருந்தாலும் அவனிடத்துக் கோப முண்டாய்விடும் பக்ஷத்தில் அவை யெல்லாங் கெட்டுப்போம்; இவ்வாறு இது மிக்க விரோதத்தைச் செய்யக்கூடியதா யிருத்தலினாலே இதனை ஒவ்வொருவரும் கைவிடவேண்டும்; அங்ஙனம் கைவிட்டார்க்கே குணம், தவம் முதலியன வெல்லாங் கைகூடும். கோபத்தால் கெடுதி யடைந்தவர்கள் பல ரென்பதை இதன் கீழ் வரும், 'கோபத்தாற் கௌசிகன்,' என்னுஞ் செய்யுள் விளக்கும்.

வேறு, இல்லை என்பன குறிப்பு வினைமுற்றுக்கள்; இவை ஐம்பால் மூவிடங்கட்குப் பொதுவாய் வரும்; "வேறில்லை யுண்டைம்பால் மூவிடத்தன," (ந-வி-உ0) என்னும் சூத்திரத்தா லுய்த்துணர்க. (௫௩)

இதுவுமது

[எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

மூங்கிலிற் பிறந்த முழங்குதீ மூங்கின்
　　முதலற முருக்குமா போலத்
தாங்கருஞ் சினத்தீ தன்னுளே பிறந்து
　　தன்னுறு கிளையெலாஞ் சாய்க்கும்
ஆங்கதன் வெம்மை யறிந்தவர் கமையா
　　லதனையுள் ளடக்கவு மடங்கா
தோங்கிய கோபத் தீயினை யொக்கு
　　முட்பகை யுலகில்வே றுண்டோ.

(ப-ரை.) மூங்கிலில் - மூங்கில்களினிடத்தே, பிறந்த-(அவை யொன்றோடொன் றுராய்தலினால்) உண்டாகிய, முழங்கு - சப்திக்கின்ற, தீ - நெருப்பானது, மூங்கில் - அந்த மூங்கில்களினுடைய, முதல் அற-அவற்றிற் காதியாகிய வேரும் கிளையும் அற்றுப் போகும்

படி, (அவற்றை) முருக்குமாபோல-கொன்றழிப்பதுபோல, (ஒரு மனிதனிடத்தே உண்டாகும்) தாங்கரும் - சகித்தற்கரிய, சினத்தீ கோபாக்னியானது, தன்னுள்ளே-தனக்குள்ளே, பிறந்து-தோன்றி (தன்னை யழிப்பதுமன்றி) தன் - தன்னுடைய, உறு - மிகுதியான கிளை எல்லாம் - சுற்றத்தவரை யெல்லாம், சாங்கும் - மாய்த்து கீழே வீழ்த்தும்; ஆங்கு - (அப்படி அஃதுண்டான) அவ்விடத்தே அதன் - அக்கோபத்தினது, வெம்மை - வெப்பத்தை, அறிந்தவர் அறிந்த பெரியோர், கமையால்-பொறுமையால், அதனை-அக் கோப த்தை, உள் அடக்கவும்-உள்ளே அடங்கும்படி அடக்குதற்கும், அடங் காது - தணியமாட்டாது; (அது மிகவும் அதிகரித்து அதற்கிடங் கொடுத்தவனையும் அவன் கிளைகளையும் மேற் கூறியபடி அழித்தே தணியும் ஆதலால்) ஓங்கிய - அங்ஙனம் ஓங்கி யெழுந்த, கோபத் தீயினை - கோபாக்கினியை, ஒக்கும் - நிகர்க்கும், உட்பகை - உள் விரோதம், உலகில் - இவ் வுலகத்தில், வேறு - வேறாக, உண்டோ- இருக்கின்றதோ? (இல்லை. ஆதலால், எவரும் அக் கோபத்திற் கிடங் கொடுத்தல் தகாது).

(வி-ரை) மலைகளில் அடர்ந்திருக்கின்ற மூங்கிற் பண்ணையி னிடத்தே மூங்கில்கள் ஒன்றோடொன் றுராய்வதனாலே நெருப் புண்டாவது இயற்கை; அங்ஙனம் பிறந்த நெருப்பானது, பற்றி யெரிந்து, உராய்ந்த மூங்கில்களை யழிப்பதன்றிப் பக்கத்தி லிருந்த அவற்றின் கிளை மூங்கில்களையும் அழித்துவிடும்; அதுபோல, ஒரு மனிதனிடத்தே உண்டான கோபமானது பெரியோர் தடுத்தாலு மடங்காமல் அவனை யழிப்பதன்றி, அவனுடைய சுற்றத்தையும் ஒழித்துவிடும்; இதற்கு உதாரணமாகத் துரியோதனன், தான் கொ ண்ட கோபத்தினாலே வீஷ்மர், துரோணர், கிருபர், விதுரன் முதலிய பெரியோர் சொல்லையுங் கேளாமல் தான் அழிந்ததோடு, தன் சுற்றத்தாரையும் அழித்தமை காண்க. இங்ஙனம் கோபமானது

பிகவும் கொடுமை செய்யக் கூடியதா யிருத்தலினாலே அதனை ஒவ்வொருவரும் விட்டகலவேண்டும்.

மூங்கில்கள் பலவாயினும் சாதியொருமைபற்றி இங்கு ஒருமையாகக் கூறப்பட்டன; இரண்டு கண்ணுஞ் சிவந்தது என்பதுபோல. நாங்கரும் - இதில் நிலைமொழி யீற்றகரந் தொக்கது. முருக்குமா என்பது ஈறு குறைந்து வந்தது; இது, ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே," (ந. உயி. பு-கூ) என்னும் சூத்திர விதிப்படி வந்த செய்யுள் விகாரமாம். (ளச)

இதுவுமது

[கலி விருத்தம்]

கோபத்தாற் கௌசிகன் றவத்தைக் கொட்டினான்
கோபத்தா னகுட னுங் கோல மாற்றினான்
கோபத்தா லிந்திரன் குலிசம் போக்கினான்
கோபத்தா லிறந்தவர் கோடி கோடியே.

(ப - ரை) கௌசிகன்-விசுவாமித்திரன் கோபத்தால் - (தான் வசிஷ்டர்மீது கொண்ட) கோபத்தினாலே, தவத்தை - (தான் நெடுநாளாக மிகுந்த பிரயாசையுடன் தேடிய) தவசை, கொட்டினான் - சிதறினான் (அதாவது இழந்தான்); நகுடன்-(சந்திரகுலத்தரசனாகிய) நகுஷனென்பவனும், கோபத்தால்-(தான் அகங்காரத்தாற் கொண்ட) கோபத்தினாலே, கோலம் - தன்னுடைய வடிவத்தை, மாற்றினான்-வேறுபடுத்திப் பாம்பின் வடிவத்தை யடைந்தான்; இந்திரன்-தேவர்க்கிபன், கோபத்தால் - தானொருகாலத்திற் கொண்ட வெகுளியினாலே, குலிசம் - தன்னுடைய வச்சிராயுதத்தை, போக்கினான் - கைவிட்டு அவமானத்தை யடைந்தான்; (இன்னும்) கோபத்தால்-இந்தக் கொடிய சினத்தினாலே, இறந்தவர்-உயிர்விட்டவர்கள், கோடி கோடி-

கோடானுகோடி பேர்களாவர், (ஆதலின், தீமையின்றி வாழ விருப்ப முடையோர் கோபத்தை யொழித்தல்வேண்டும்).

(வி-ரை) விசுவாமித்திரன் தனக்கேற்பட்ட கோப மிகுதியி ஞலே வசிஷ்டரோடு சபதஞ்செய்து தவத்தையெல்லா மிழந்தனன்; நகுஷனென்னு மரசன் நூறு அசுவமேத யாகங்களைச் செய்து இந்திரன் பதத்தை யடைந்தும் முனிவர்களிடம் தன்னுடைய கோபத்தைக் காட்டியபடியால் அகஸ்தியருடைய சாபத்தைப் பெற்று அப்பதத்தை இழந்து பாம்பாயினுன்; இந்திரன் ஒருகாலத்தில் உக்கிர பாண்டியரோடு கோபங்கொண்டு சண்டைசெய்து தன்னுடைய வச்சிராயுதத்தைப் போக்கினுன்; இன்னுங் கோபத்தால் எண்ணிறந்த பேர் உயிர் துறந்தனர்; இவ் விஷயங்களை யெல்லாம் நோக்கும்போது கோபமே வாழ்வு கெடுதலுக்குக் காரணமாம்; ஆதலால், உலகத்தில் துன்பமற்ற வாழ்வை யடையவிரும்புவோர் கோபத்தைக் கைவிடல் வேண்டும். கௌசிகன் தவத்தை யிழந்தது, அரிச்சந்திரபுராணம் மீட்சி காண்டத்தா னுணரப்படும்.

[நகுஷன் நற்பத மிழந்து பாம்பானதை]

"முகுட மும்பெருஞ் சேனையுந் தரணியு முற்றும்
சகுட நீறெனச் சதமகம் புரியருந் தவத்தோன்
நகுட னுமவே னராதிப னுகருக் கரசாய்
மகுட மேந்திய குரிசிலா யுவின்றிரு மைந்தன்."

"புரந்த ரன்பதம் பெற்றபின் புலோமசை முயக்கிற்
கிரந்து மற்றவ ளேவலின் யானமுற் றேறி
வரந்த ருங்குறு முனிமுனி வாய்மையான் மருண்டு
நிரந்த ரம்பெரும் புயங்கமா னவனுமந் நிருபன்."

என்னும் வில்லிபுத்தூராழ்வார் பாரதம் குருகுலச் சருக்கச் செய்யுட்களானும்,

"மனிதரின் மகவா ஞகி வருபவன் சிவிகை தாங்கும்
புனிதமா தவரை யெண்ணுன் புன்கணேய் விளேவும் பாரான்
கனிதரு காமந் துய்க்குங் காதலால் விரையச் செல்வான்
நனிதயி ராணி பாற்கொண் டேகுமின் சர்ப்ப வென்றான்."

"சர்ப்பமா கெனமுற் கொம்பு தாங்கிமுன் னடக்குந் தென்றல்
வெற்பனு முனிவன் சாபம் விளேத்தனன் விளேத்த லோடும்
பொற்பமா சுணமே யாகிப் போயினு னறிவி லாத
வற்பரா னவர்க்குச் செல்வ மல்லது பகையே றுண்டோ."

என்னும் திருவிளேயாடல், இந்திரன் பழிதீர்த்தபடலச் செய்யுட்களானும் உய்த்துணர்க.

[இந்திரன் குலிசம் போக்கிய கதை]

"தானவர் பகைவன் மோக சரந்தொடுத் தெறிந்தா ஞக
மீனவ னதனே ஞான் வாளியால் விளித்து மாய்ந்து
போனபின் மற்போ ராற்றப் புக்கனர் புக்கார் தம்மில்
வானவன் மண்ணி ஞன்மேல் வச்சிரம் வீசி யார்த்தான்."

"காய்சின மடங்க லன்னுன் கைவளே சுழற்றி வல்லே
வீசினன் குலிசந் தன்னே வீழ்த்தது வீழ்த்தான் சென்னித்
தேசினன் மகுடந் தள்ளிச் சிதைத்தது சிதைத்த லோடுங்
கூசின னஞ்சிப் போனுன் குன்றிற கரிந்த வீரன்."

என்னுந் திருவிளேயாடல், இந்திரன் முடிமேல் வளேயெறிந்தபடலச் செய்யுட்களா னுணரப்படும். இன்னும், கோபத்தால் எண்ணிறந்தவர்க ளழிந்ததை இதிகாசபுராண கதைகளா லுய்த்துணர்க.

கோபம் வெறியுள்ளதாதலால் அதனுல் நிகழும் செய்கை யெல்லாம் வெறியுள்ளார் செய்கைபோலும் என்பது தோன்ற, 'வெளி

கன் தவத்தை யிழந்தான்' என்றது, 'தவத்தைக் கொட்டினன்' என்று இச் செய்யுளை யியற்றினோர் கூறினர். இதனால் கோபத்தின் இழிவு நன்கு புலப்படும். நகுடன் - நகுஷனென்னும் வடமொழித் திரிபு. நகுடனும் என்பதிலுள்ள உம்மை உயர்வுசிறப்புப் பொருளது. கோடி கோடி - கோடிக்கணக்கான கோடி; இஃது எண்ணதிகத் தன்மையைக் காட்டும் ஒருவகை எண்ணளவுப் பெயர்; இஃது ஆகு பெயராய் இக்கணக்குள்ள மனிதரை யுணர்த்திற்று. (௯௫)

விருந்தினரை உபசரிக்கும் முறைமை

[எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

விருந்தின னாக வொருவன்வந் தெதிரின்
வியத்தனன் மொழியினி துரைத்தல்
திருந்துற நோக்கல் வருகென வுரைத்த
லெழுதல்முன் மகிழ்வன செப்பல்
பொருந்துமற் றவன்ற னருகுற விருத்தல்
போமெனிற் பின்செல்வ தாதல்
பரிந்துநன் முகமன் வழங்கலிவ் வொன்பா
னொழுக்கமும் வழிபடும் பண்பே.

(ப - ரை) ஒருவன் - ஒரு மனிதன், (ஒருவன் வீட்டிற்கு) விருந்தினனாக-விருந்தாளியாக, வந்து எதிரின் - வந்தெதிர்ப்படின், (அவ் வீட்டுக்காரன்) வியத்தல் - அவ் விருந்தினனுடைய வரவைப் பற்றி) அதிசயித்தலும்; நல் மொழி - நல்ல பிரிய வசனங்களை, இனிது - இனிதாக, உரைத்தல் - கூறுதலும்; திருந்துற - திருத்தமாக, நோக்கல் - (அவனைப் பிரியத்தோடு) பார்த்தலும்; வருக என - வருவீராக என்று, உரைத்தல் - சொல்லுதலும்; எழுதல் - (அவனைக் கண்ட மாத்திரத்தில்) இருக்கைவிட் டெழுந்து மரியாதை செய்த

லும்; முன் - அவனுக்கெதிரே, மகிழ்வன - அவன் மகிழக்கூடிய காரியங்களை, செப்பல் - சொல்லுதலும்; பொருந்தும் - நேயமாகப் பொருந்துகின்ற, அவன்றன் - அவனுடைய, அருகுற - சமீபத்தில் தன்னுடைய இருக்கையானது பொருந்த, இருத்தல்-உட்காருதலும்; போம் எனின்-அவன் விருந்துண்டு முடிந்தபின் போவானேயாகில், பின் செல்வதாதல் - பின் சென்று வழிவிடுதலும்; பரிந்து-(அப்படி வழிவிடும்போது) விரும்பி, நல் - நல்ல, முகமன்-உபசார வார்த்தைகளை, வழங்கல் - சொல்லுதலும், (ஆகிய) இ ஒன்பான் - இந்த ஒன்பது வகை, ஒழுக்கமும்-நடக்கைகளும், (உடைத்தாயிருத்தல்) வழிபடும்-(அவ் விருந்தினனைப்) பூசிக்கும், பண்பு-முறைமையாம்; (ஆதலின், விருந்தினரை உபசரிக்கும் இல்லறத்தார் ஒவ்வொருவரும் இவ்வொன்பது வகை ஒழுக்கங்களையும் கைக்கொள்ளவேண்டும்.)

(வி-ரை) ஓர் இல்லறத்தானிடத்தே விருந்தினனாகச் செல்பவனுக்கு அவன் இவ்வொன்பதுவகை ஒழுக்கங்களுடனே விருந்தளித்து உபசாரஞ் செய்யானாயின் அவ் வில்லறம் பயனற்றதாம். ஆகலின், இல்வாழ்வோன் இவ் வொன்பது முறைமைகளையும் அனுசரித்து விருந்தினனை உபசரித்தல்வேண்டும்; அவனுடைய இச் செய்கைக்கு அவன் மனைவியும் இணங்கியிருத்தல்வேண்டும்;

"இருந்து முகந்திருத்தி யீரோடு பேன்வாங்கி
விருந்து வந்ததென்று விளம்ப - வருந்திமிக
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தாற்
சாடினா ளோடோடத் தான்."

என்ற ஔவையாரால் கூறப்பட்ட ஒரு மூதேவி போன்ற மனைவி அவனுக் கமைந்திருப்பின் அவன் மேற் கூறியபடி விருந்தினனை உபசரிப்பினும் அது சிறப்புறாது. சில இல்லங்களில் உள்ளவர் விருந்தினரைக் கண்டால் மறைவர்; சிலர் முகமலர்ச்சி யின்றி மனை

வருத்தத்துடன் அவருக்கு அன்னமிடுவர்; சிலர் விருந்ினர்க்கு அன்ன மிடினும் தம்மவர்க் குயர்வாகவும், வந்தவர்க்குத் தாழ்வாகவும் பார பக்ஷமாகவும் இடுவர்; சிலர் தற்பெருமையால் விருந்தினர் மனம் வருந்தும்படி பலவித தாழ்ந்த செய்கைகளோடு அவர்க்கு அன்ன மிடு வர்; சிலர் வந்த விருந்தினர் இருவருள் ஒருவரை மரியாதையாக வும், ஒருவரைத் தாழ்மையாகவும் நடத்துவர்; சிலர் இடம்பர்களைக் கொண்டாடி விவேகிகளைத் தாழ்மைப்படுத்துவர்; இவர்க ளெல்லோ ரும் மிருக வகுப்பிற் சார்வாரேயன்றி மனித வகுப்பிற் சாரமாட்டார். இவர்களுக்குக் கிடைப்பது நரகமேயன்றி வேறொன் றின்றாம்; முகமலர்ச்சியோடு மேற்கூறிய ஒன்பது வகை ஒழுக்கங்களையும் அனுசரித்து விருந்தினரை உபசரிக்க வேண்டுமென்பதை,

"அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து
நல்விருந் தோம்புவா னில்"

என்னுந் திருக்குறட் செய்யுளா னுணர்க, இங்ஙனம் விருந்தினர், பெரியோர் முதலியவர்களை உபசரித்தற்கு ஒன்பது வகை ஒழுக்கங் கள் வேண்டுமென்பதை,

"உத்தமர்க் கொன்பது புண்ணியத்தா லீவ,
துத்தம தான மெனல்."

என்னுந் திருக்குறளும்,

"அறவியாற் காறு மூன்று மமைந்தநா லமிர்த மேந்த,"

"ஒன்பது வகையி னேதிற் றுத்தமர்க் காகு மார்ந்த,"

என்னும் சீவகசிந்தாமணிச் செய்யுட்களி னடிகளும் நன்கு விளக் கும்.

இங்கே ஒன்பது வகை ஒழுக்கங்களைக் கைக்கொள்ள வேண்டு மென்பதற் குதாரணமாகக் குறளையும், சீவகசிந்தாமணிச் செய்யுட் களி னடிகளையும் எடுத்து உதாரணமாகக் காட்டியிருப்பினும், இங் குக் கூறிய ஒழுக்கங்களுக்கும் சீவகசிந்தாமணி முதலியவற்றிற் கூறப்பட்டிருக்கும் ஒழுக்கங்களுக்கும் பேத முண்டு.

"எதிர்கொள லிடநனி காட்டல் கால்கழீஇ
யதிர்பட வருச்சனை யடியின் வீழ்தல்
மதுரநன் மொழியொடு மனமெய் தூயரா
யுதிர்கநம் வினையென வுண்டி யேந்தினர்."

எனச் சீவகசிந்தாமணி 2828 ஆம் செய்யு ளுரையில் உதாரணமாக வருஞ் செய்யுளால், எதிர்கொள்ளல், அமரும் இடங்காட்டல் (அதா வது ஆசனமளித்தல்), கால் கழுவுதல், அருச்சனை புரிதல், அடியில் வீழ்ந்து வணங்கல், உபசார வார்த்தை கூறல், மனந் தூயராதல், மெய் தூயராதல், அமுதமேந்தல் ஆகிய ஒன்பதும் ஒழுக்கங்களாகக் காணப்படுகின்றன. இவை ஜைனமதக் கொள்கைப்படி ஏற்பட்டன வாம்; இவற்றை ஜைனர்கள் உத்தமராகிய பெரியோர்க் குரியவை யெனவும், நவ புண்ணியக் கிரம மெனவுங் கூறுவர். வேறு சில நூல்களில்: எதிர்கொள்ளல், பணிதல், ஆசனத்திருத்துதல், தாள் கழுவல், அருச்சித்தல், தூபங் கொடுத்தல், தீபங் காட்டல், புகழ் தல், அமுதமேந்தல் என்கிற ஒன்பதும் புண்ணிய வொழுக்கங்க ளெனவும், இவை துறந்தோர்க்குச் செய்தற் குரியன வெனவும் கூறப்பட் டிருக்கின்றன. இவை சைவசமயம் முதலிய சமயங்க ளின் கொள்கைப்படி ஏற்பட்டவைகளென விளங்குகின்றன. இவ் விருவகைகளுள்ளும் சிறிது விகற்பங் காணப்படினும் எல்லாம் நற் செய்கைகளே யாதலால் இவ்விரண்டு வகைகளும் பெரியோரிடத் தே செய்தற் குரியனவா மென்றே கொள்க. இவை பெரியோர்க்கா மெனவே இந்த விவேகசிந்தாமணிச் செய்யுளிற் கூறப்பட்டவை

சமத்துவமான விருந்தினரிடத்தே செய்யத்தக்கனவா மென்பது தானே ஏற்பட்டது. ஆதலின், உதாரணச் செய்யுட்களில் காட்டப் பட்ட வொழுக்கங்களைப் பெரியோரிடத்தும், இவ் விவேகசிந்தா மணிச் செய்யுளிற் கூறப்பட்ட வொழுக்கங்களைச் சமத்துவமான விருந்தினரிடத்தும் நடத்திப் புண்ணியத்தைத் தேடுதல் முறைமை யாம். விருந்தினரை உபசரிப்பதினும் பெரியோரை உபசரித்தல் மிகவும் விசேஷமுடைய தாகையால் இவ் விஷயங்களும் இங்கே வருவித்து விரித் தெழுதப்பட்டன. (டுசு)

இன்ன இன்ன விடத்தில் இன்ன இன்ன பக்கம்
தலை வைத்துப் படுக்கவேண்டு மேன்பது
[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

இணையிறன திலிலொருவன் கீழ்த்திசையிற்
றலைவைக்க வினிய மாமன்
மணிதிகழ்பொன் னெடுமாடத் துறைந்திடிற்றென்
றிசையதனில் வைக்க வேண்டும்
அணிபெறுவேற் றாருறையிற் குடதிசையிற்
சாரவைக்க வடுத்தேதப் போதும்
உணர்வின்றி யுத்தரத்தே தலைவைத்துத்
துயில்புரித லொண்ணு தாமால்.

(ப - ரை) ஒருவன்-ஒரு மனிதன், இணையில்-ஒப்பற்ற, தனது இல்லில் - தன்னுடைய வீட்டில், கீழ் திசையில் - கிழக்குத் திக்கில், தலை வைக்க - தலை வைத்துப் படுக்கவேண்டும்; இனிய-இனிதாகிய, மாமன் - மாமனுடைய, மணி திகழ்-இரத்தினங்கள் பதிக்கப்பெற்று விளங்காநின்ற, பொன் - பொன்னாலாகிய, நெடு-நீண்ட, மாடத்து - மாளிகையில், உறைந்திடின்-தங்கினால், தென் திசையதனில்-தெற்

குத் திக்கில், வைக்கவேண்டும்-தலைவைத்துப் படுக்கவேண்டும்; அணி பெறு - அழகைப் பெறுகின்ற, வேற்றூர்-புறநகரிலே, உறையின் - தங்கினால், குடதிசையில்-மேற்குத் திக்கில், சார - பொருந்தும்படி, வைக்க-தலை வைத்துப் படுக்கவேண்டும்; எப்போதும் - எக்காலத்தி லும் (எவ்விடத்திலும்), உணர்வு இன்றி - புத்தி யில்லாமல், உத்தரத் தே-வடக்குத் திக்கில், அடுத்து - நெருங்கி, தலை வைத்து-சிரத்தைச் சேர்த்து, துயில் புரிதல் - தூங்குதல், ஒண்ணுதாம்-கூடாத செய்கை யாம்.

(வி-ரை) ஒரு மனிதன், தன்னுடைய வீட்டில் கிழக்குத்திக்கி லும், மாமன் வீட்டில் தெற்குத் திசையிலும், வேற்றூரில் மேற்குத் திசையிலும் தலை வைத்துப் படுக்கவேண்டும்; வடக்குத் திசையில் எப் போதும் எவ்விடத்தும் தலைவைத்துப் படுக்கலாகாது. கிழக்குத் திசை யில் சிரம் வைத்துப் படுப்பதால் ஐசுவரிய முண்டாகும்; தெற்குத் திசையில் சிரம் வைத்துப் படுப்பதால் ஆயுள் விருத்தி யுண்டாகும்; மேற்குத் திசையில் தலை வைத்துப் படுப்பதால் பிரபலம் விருத்தி யாகும்; அறிவில்லாமல் வடக்குத் திசையிற் றலைவைத்துப் படுத்தால் வியாதியும் மரணமு முண்டாகும். சில நூல்கள், "தானிருக்கு மிடத் தில் தெற்கிலும், மாமியார் வீட்டில் கிழக்கிலும், யாத்திரையில் மேற்கிலும் சிரம் வைத்துப் படுத்தல் உத்தமம்" எனக் கூறுகின்றன. இவற்றில் எவ்வித பேதமிருப்பினும் கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய மூன்று திசைகளிலும் தலை வைத்துப் படுத்தல் உத்தமமும், வடக்குத் திக்கில் தலை வைத்துப் படுத்தல் கெடுதியு மாதலால் வடக்கன்றி மற்ற திசைகளில் தலை வைத்துப் படுத்தல் சுகத்திற் கேதுவாம். இவ் விதிகள் சோதிட நூல்களிற் கூறப்பட்டவை.

வைக்க - வியங்கோள் வினைமுற்று. ஒண்ணுதது என்பது ஒண்ணுது' எனத் தொகுத்தலாகி வந்தது. (௬௭)

கடவுள் பக்தி யில்லாத நெஞ்சு அதனை யுடையார்க்குத் துணையில்லை யென்பது

[எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

அன்பிலா நெஞ்ச மரும்பிணி யெனவு
மளவிலாப் பகைநமக் கெனவுந்
துன்பமார் சோக மோகமே முதலாந்
துயரெலாம் விளைநில மெனவும்
இன்பவீ டெய்தி டற்கிடை யூறு
மிருளுமென் றியம்புவர் பெரியோர்
துன்பிலா விறைவர்க் கன்பிலா நெஞ்சே
துணையிலை துணையிலை யெனக்கே.

(ப-ரை) பெரியோர்-(உலகத்தில் உண்மை மார்க்கங்களை யறிந்த பெரியோர்கள், அன்பு இல்லா-(பகவானிடத்தே) அன்பில்லாத நெஞ்சம் - மனமானது, அரும் - தீர்தற்கரிதாகிய, பிணி எனவும் - நோயென்றும்; நமக்கு—, அளவு இல்லா-கணக்கில்லாத, பகை எனவும்-பகையானதென்றும்; துன்பம் ஆர் - உபத்திரவம் பொருந்திய, சோகம் - சோம்பல், மோகம் - பெண்ணாசை, முதலாம்-முதலாகிய துயர் எல்லாம் - கிலேசங்க ளெல்லாம், விளை - உண்டாகக்கூடிய, நிலம் எனவும் - வயல் என்றும்; இன்பம்-பேரின்பம் நிறைந்த, வீடு - மோக்ஷவீட்டை, எய்திடற்கு-அடைதற்கு, (வழியில்) இடையூறும் - தடையாகும், இருளும் என்று - இருட்டுமாமென்றும், இயம்புவர் - கூறுவார்கள்; (ஆதலால்) துன்பில்லா-துயர மில்லாத, இறைவர்க்கு-கடவுளர்க்கு, அன்பு இல்லா.- அன்பில்லாத, நெஞ்சே-என்னுடைய மனமே! (நீ) எனக்கு—, துணை இல்லை துணை இல்லை - சகாயமாக மாட்டாய்! சகாயமாகமாட்டாய்!!(நீ எனக்குத் துணையுள்ளதா யிருக்க வேண்டுமானால் விரைவில் பகவானிடத்து பக்தியைச் செலுத்துவா யாக).

(வி-ரை) பகவானிடத்தே அன்பைச் செலுத்தாத நெஞ்சம் பயனற்றதாமென்பது இச்செய்யுட் கருத்து. இச் செய்யுளை யியற்றி ஞேர் தம் நெஞ்சை நோக்கிக் கூறியதாக இதனை இயற்றியதானது இதனைப் படிக்கும் ஒவ்வொருவரும் இங்ஙனமே கூறித் தம் நெஞ் சைக் கடவுளர் பக்கந் திருப்பவேண்டு மென்பது குறித்தேயாம். ஆத லின், இதனை வாசிக்கும் ஒவ்வொருவரும் தங்கள் மனத்தை நோக்கி இங்ஙனங் கூறி அதனை இறைவன்பாற் றிருப்புக. (௫அ)

அன்புடனிடும் அன்னமே சிறந்த தென்பது

[எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

கெட்டசாறு தவிடுகஞ்சி கிருமியுண்ட மாவறைக்
　　கீரைவேர் தெளிந்தமோர் முறிந்தபாகு கிண்டுமா
இட்டசோறு கொழியலுப் பிடாதபுற்கை யாயினும்
　　எங்குமன்ப தாகநுங்க வின்பமா யிருக்குமே
பட்டபாகு பசுவினெய் பருப்புமுக் கனிக்குழாம்
　　பாளிதங்க டாளிதங்கள் பண்ணிகார வகையுடன்
அட்டபாற் குழம்புகன்ன லமுதமோடு முதவினும்
　　அன்பினோ டளித்திடாத வசனமென்ன வசனமே.

(ப-ரை) (ஒருவர் அன்புடனே யிடுபவை) கெட்ட சாறு-பதங் கெட் டுசிப்போன குழம்பு; தவிடு -' அரிசி முதலியவற்றி லிருந்த தவிடு; கஞ்சி-நொய்யரிசிக் கஞ்சி; கிருமி உண்ட - புழுவுண்டு கெட் டுப்போன, மா - கேழ்வரகு முதலிய தானியங்களின் மா; அறைக் கீரை வேர்-வேகவைத்துச் சமைத்த அறைக்கீரையின் வேர்க்கட் டை; தெளிந்த மோர்-நீர் அதிகமாகக் கலந்து தெளிந்துபோன மோர்; முறிந்த பாகு - உப்பு முதலியன வீழ்ந்து முறிந்து கெட்டுப்போன பால்; கிண்டும் மா - கிண்டுகின்ற மா (அதாவது களிக் கிண்டும் பொருட்டு அடுப்பிலிட்டு வெந்தும் வேகாமலு மிருக்கின்ற மா);

கொழியல் இட்ட- தவிடு நீங்காத அரிசி யிட்டுச் சமைத்த, சோறு - அன்னம்; உப்பு இடாத-உப்புப் போடாத, புற்கை-கூழ், ஆயினும்- (முதலியவைகளே) ஆனாலும், (அவற்றை யேற்றுக்கொள்வோர்) எங்கும் - எவ்விடத்தும், அன்பதாக - (அவற்றை யிடுவோர் மேற் கூறியபடி செலுத்தும்) அன்பானது உண்டாக, (அதாவது, அவர் கள் அன்புடனே யிட) நுங்க - அவற்றை யுட்கொள்ள, இன்பமா யிருக்கும் - (அவை மனத்திற்கு மிகவும்) இனிமையாயிருக்கும்; (அன்பில்லாதவர்) பட்ட - காய்ச்சுதலினு லுண்டாகிய, பாகு-வெல் லம் முதலியவற்றின் குழம்பு, பசுவின் நெய் - பசுநெய், பருப்பு - வேகவைத்து மசித்த பருப்பு, முக்கனி - மா பலா வாழை ஆகிய மூவகைக் கனிகளின், குழாம் - கூட்டங்கள், பாளிதங்கள் - குழம்பு கள், தாளிதங்கள் - தாளித்த கறிகள், பண்ணிகார வகையுடன்-அப்ப வருக்கங்கள் ஆகியவற்றுடனும், அட்ட - காய்ச்சிய, பால் குழம்பு - திரட்டுப்பால், கன்னல் - சருக்கரை, அமுதமோடு - சோறு ஆகிய வைகளுடனும், உதவினும் - ஒருவர்க் குணவளிப்பினும், அன்பி ஞேடு - மேற்கூறியபடி அன்புடனே, அளித்திடாத - உதவாத, அசனம் - இந்தப் போசனம், என்ன அசனம் - என்ன போசனம்?, (திருப்தியான போசன மாகாது; இதனை யுண்பவர்க்கும் இனிமை யுண்டாகாது).

(வி - ரை) ஒருவர் மற்ருெருவர்க்கு அன்புடனே தவிடு கஞ்சி முதலியவற்றை அளிப்பினும் அவற்றை அவர் உட்கொள்வ தால் மிகவும் இனிமை யுண்டாகும். அன்பில்லார் ஒருவர்க்கு நெய் பாலுடன் உணவளிப்பினும் அவர் அவ்வுணவை உண்பதால் திருப்தி யுண்டாகமாட்டாது. அன்பில்லாரிடம் உணவுண்ணல் திருப்தியாக மாட்டா தென்பதை,

"உண்ணீ ருண்ணீரென் றுபசரியார் தம்மனையி
லுண்ணுமை கோடி பெறும்."

ன்னும் ஔவையார் திருவாக்கா லுணர்க. அன்பில்லா ரிட்டவுணவு
ாழ்ந்ததாயினும் இனிமையும் உயர்வு முடையதா மென்பதை,

"வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்
முரமுரென வேபுளித்த மோரும் - திறமுடனே
புல்வேளூர்ப் பூதன் புகழ்ந்து பரிந்திட்டசோ
றெல்லா வுலகும் பெறும்."

ன ஔவையார், அன்புட னுணவளித்த வேளூர்ப்பூதனைப் புகழ்ந்து
ாடிய செய்யுளா லுணர்க.

'இட்டசோறு கொழியல்' என்பது, 'கொழியல் இட்டசோறு'
ன மாற்றிப் பொரு ளுரைக்கப்பட்டது. கொழியல் - தவிடு நீக்கப்
டாத அரிசி. தாளிதம்-தாளித்தல்; இது தொழிற்பெயர்; இது ஆகு
பயராய்த் தாளித்தலையுடைய கறிவகைகளுக்காயிற்று. 'என்ன
;சனம்' என்பதில், 'என்ன' என்னும் வினாவிடைச்சொல் எதிர்
றைப்பொருளில் வந்தது. (ருக)

தொழின்முயற்சி ஒவ்வொருவர்க்கும் அவசியமா மென்பது

[எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

மானிட னொருவன் றனக்கருஞ் செல்வம்
வாய்க்கவென் றனுதின முயற்சி
தானுஞற் றுவனேற் கடவுளு மதனைத்
தந்தளிக் குவனதா லன்றே
ஆனபே ரறிஞர் திருவினை முயற்சி
யாக்குமம் முயற்சியல் லாமை
ஈனமா ரின்மை புகுத்திடு மாலென்
றியாருநன் குணர்தா நவில்வார்.

(ப - ரை) மானிடன் ஒருவன் - மனிதனுகப் பிறந்த வொரு
ன், தனக்கு—, அரும் - கிடைத்தற் கருமையான, செல்வம் -

ஐசுவரியம், வாய்க்க என்று - பொருந்தவேண்டுமென்று நினைத்து அனுதினம் - தினந்தோறும், தான்—, முயற்சி-முயற்சியை, உஞ்றுவனேல் - செய்வானேயானல், கடவுளும் - விரும்பியவற்றைக் கொடுக்கும் கர்த்தனுகிய பகவானும், அதனை - அவன் விரும்பிய அந்த ஐசுவரியத்தை, தந்து - கொடுத்து, அளிக்குவன் - காப்பாற்றுவான்; அதாலன்றே — (அப்படி ஒருவன் செய்யும் முயற்சிக்குக் கடவுள் ஐசுவரியத்தைக் கொடுத்துக் காப்பாற்றுவார் என்ற) அந்த அபிப்பிராயத்தாலல்லவா, ஆண-உலகத்திலுண்டாகிய, பேர் அறிஞர் பெரிய அறிவாளிகள், முயற்சி-தொழின் முயற்சியானது, திருவினை-செல்வத்தை, ஆக்கும்-(அம்முயற்சி யுள்ளவனுக்கு) உண்டாக்கும்; அம் முயற்சி அல்லாமை-அந்த முயற்சியல்லாதிருத்தல், ஈனம் ஆர்-இழிவு பொருந்திய, இன்மை-வறுமையில், புகுத்திடும்-முயற்சியில்லானைப் புகுவிக்கும், என்று - என விளக்கி, யாரும் - எவரும் நன்கு உணர்தர-நன்ருக உணர்ந்துகொள்ளும்படி, நவில்வார் - எப்பொழுதும் வற்புறுத்திக் கூறுவார்கள், (ஆதலால், உலகத்தில் மானிடராகப் பிறந்த ஒவ்வொருவரும் தொழின் முயற்சியை அவசியந் தேடல்வேண்டும்).

(வி-ரை) உலகத்தில் மானிடதேக மெடுத்த ஒவ்வொருவரும் தேகமெடுத்ததற்குரிய பயனுக நன்முயற்சிகளைச் செய்யவேண்டும். அங்ஙனஞ் செய்யின் அம்முயற்சியுடையோருக்குக் கடவுள் செல்வத்தைக் கொடுத்தருளுவான்; அங்ஙனம் முயற்சி யில்லாதவர்க்கு வறுமையே அதிகரிக்கும். இது நிச்சய மாதலால் இவ் விஷயத்தை அறிஞர் அடிக்கடி கூறுவர்;

"முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்,"

என்னுந் திருக்குறளால் இதனை யுணர்க.

அளிக்குவன் - உயர்திணை ஆண்பாற் படர்க்கை யொருமை யுடன்பாட்டு வினைமுற்று. அளி-பகுதி, அன்-விகுதி, கு-சாரியை, ககரத் தோற்றமும், வகர வுடம்படுமெய்த் தோற்றமும் சந்தி. 'திரு வினை முயற்சி ஆக்கும்' என்பது, 'முயற்சி திருவினை யாக்கும்' என மாற்றிப் பொருளுரைக்கப்பட்டது. இத் தொடர் இங்கு உதார ணங் காட்டிய திருக்குறளடியி லுள்ளது. (கூ0)

இதுவுமது

[எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

கடவுளீ குவனென் றெண்ணிநித் தியமுங்
　　கருதுறு முயற்சிசெய் யானேல்
அடலுறு செல்வ மடைகுவ னேகொ
　　லருங்கலத் திட்டபா லடிசில்
மிடலுறு கரத்தா லெடுத்துண தெங்ஙன்
　　வீங்கும்வெம் பசிப்பிணி யொழிப்பன்
உடல்பவந் தனக்கோ ராகர மாமென்
　　றுடனனி வாட்டுமெய்த் தவத்தோய்.

(ப - ரை) உடல் - தேகமானது, பவந்தனக்கு - பிறப்பிற்கு, ஓர் ஆகரமாம்-ஒப்பற்ற உறைவிடமாம், என்று-என்று கருதி, உடல்-அத் தேகத்தை, (பிறவிக் கிடமில்லாமற் போகும்படி) நனி - மிகுதி யாக, வாட்டும் - விரதம் முதலியவற்றால் வாட்டுகின்ற, மெய்-உண் மையாகிய, தவத்தோய்- தவத்தினையுடையாய்!, (முன் செய்யுளிற் கூறப்பட்ட மனிதன்) கடவுள்-பகவான், (எல்லாவற்றிற்குங் காரண கர்த்தனா யிருப்பதனாலே) ஈகுவன் என்று-(முயற்சி செய்யாதிருந்தா லும்) பொருளைக் கொடுப்பான் என்று, எண்ணி - மூடமதியால் நினைத்து, நித்தியமும்-தினந்தோறும், கருதுறு-கருதுகின்ற, முய ற்சி - தாளாண்மையை, செய்யானேல் - செய்யாதிருப்பானாகில், (அவன்) உடல் உறு-வெற்றி பொருந்திய, செல்வம்-ஐசுவரியத்தைத்,

அடைகுவனேகொல்-அடைவானே?, அரும்-அருமையாகிய, கலத்து இட்ட-பாத்திரத்திலிட்ட, பால் அடிசில்-பாற்சோற்றை, மிடல் உறு-வலிமை பொருந்திய, கரத்தால்-கையினுலே, எடுத்து உண்ணுது - ஒருவன் எடுத்துண்ணுமல், எங்ஙன்-எப்படி, வீங்கும்-அதிகரிக்கின்ற, வெம்-வெம்மையாகிய, பசிப்பணி - பசி நோயை, ஒழிப்பன்-நீக்குவான்?, (ஒருபோதும் நீக்கமாட்டான்; இதுபோல், கடவுள் கொடுப்பானென்று முயற்சி யில்லாதிருப்பவனும் ஐசுவரியத்தை யடையமாட்டான்; ஆதலால், எவரும் முயற்சி யில்லாதிருத்தல் கூடாதாம்.)

(வி - ரை) பொற்கலத்திட்ட பாற்சோற்றை ஒருவன் கரத்தினுல் எடுத்துண்டால் மாத்திரம் அவனுடைய பசி தணியும்; அங்ஙன முண்ணுமல் கடவுள் ஊட்டுவனென்று பேசாதிருப்பின் அப்பசிநோய் தணியாது; அதுபோலக் கடவுள் அவனவன் செய்யும் நல்வினையின் பயனுகச் செல்வத்தைக் கொடுக்கக் கூடியவனு யிருப்பினும் அதற்குரிய முயற்சியைச் செய்தால் மாத்திரந்தான் அம்முயற்சியின் வாயிலாக அதனைக் கொடுப்பன். அங்ஙனம் முயற்சி செய்யாவிடின் செல்வம் தானே வந்து ஒருவனிடத்திற் சேரமாட்டாது. தேகமெடுத்தது நற்கிரியைகளைச் செய்து புண்ணியத்தைத் தேடி இகத்திலும் பரத்திலும் சுகத்தை யடைதற்கேயாம்; ஆதலால், நற்காரியங்களில் முயற்சி செய்யவேண்டும். அங்ஙன மின்றி எல்லாம் விதிப்படி நடக்குமென்று காலைக் கட்டிக்கொண் டிருப்பவர் சோம்பேறிகளாய் ஒரு சுகத்தையு மடையாமல் முடிவில் துர்க்கதிக் காளாவர். எல்லாம் விதிப்படி நடக்குமென்று யாவற்றையும் விதியின் தலையிலேற்றிப் பேசாமலிருப்பது தகுதியானுல் உலகத்தி லுள்ளவர்க ளெல்லோரும் என் அப்படியிராமல் காரியங்களில் பிரவிர்த்தித்துக்கொண் டிருக்கின்றூர்கள் என்னும் ஒரு விஷயத்தை ஆராய்ந்து பார்ப்பவர்கள் அங்ஙனம் முயற்சியின்றி யிரார். சில சோம்பேறிகள் இதற்கு, "உலகத்தில்

எல்லோரும் ஞானமுடையவர்க ளல்லர்; ஞானிகள் மாத்திரம் எல்லாம் தெய்வச் செயலென்று பேசாம லிருப்பர்; அஞ்ஞானிகள் காரியங்களை நடத்திக்கொண்டு திரிந்தலைவர்," என்று சமாதானங் கூறுவர்; இஃது அறிவுடையோர் வெறுக்கத்தக்க சமாதானமாம். ஞானிகளும் உயர் பதவியை அடைதற்குத் தவம் முதலியவற்றைச் செய்து அதனை அடைந்தபின் எல்லாவற்றையும் விடுவர் என்று நூல்கள் கூறுகின்றனவே யன்றி அவர்கள் சும்மாவிருந்தே நற்பதவியை அடைவார்கள் என்று கூறவில்லை. சிலர் 'விதியே பெரிது' என்றும், 'எல்லாம் அதன்படியே நடக்கும்' என்றும், 'நம் செயல் ஒன்றுமில்லை' என்றும், 'எல்லாம் தெய்வச் செயல்' என்றும் கூறித் தொழின் முயற்சியின்றிச் சோம்பேறிகளாய் இருந்தபடியே சில பாமரரை யேமாற்றி வயிறு வளர்த்தும், பெண்களுக்கும் பேதைகளுக்கும் தங்கள் அறியாமையாகிய ஞானத்தை உபதேசஞ் செய்து அவர்களையும் தங்கள் மாய வலைக்குள் சிக்கவைத்து இரகசியமாக அடாச் செய்கைகளை நடத்தித் திரிவர். இவர்களுக்கு,

'இந்தச் சீவனல் வருமறு பகையெலா மிவன்செய லல்லாமல்
அந்தத் தேவனல் வருமென்ற மூடர்க ளதோகதி யடைவார்கள்
இந்தச் சீவனல் வருமறு பகையெலா மிவன்செய லல்லாமல்
அந்தத் தேவன லன்றெனும் விவேகியே யமலவீ டடைவானே."

என்னும் கைவல்லியச் செய்யுளின்படி நரகமே கிடைக்கும். சிலர், 'மதியே பெரிது' என்றும், 'எல்லாம் மதியினலேயே நடக்கும்' என்றும், 'தெய்வச்செய லொன்று மில்லை' என்றும் தெய்வத்தைப் பழித்து நாஸ்திகராய்த் திரிவர். மனிதர்களுடைய செய்கைகளுக்குத் தக்கபடி நன்மை தீமைகளை வகுத்து அவரவர்களுக்கு ஏற்படுத்துதற்குக் கடவுள் தலைவரா யிருப்பதால் இவர்கள் கூறுவதும் தப்பாகும்; இவர்களும் தெய்வ விரோதிகளாய்த் துர்க்கதிக்கே ஆளாவர். இவ்விருவகையாரும் உண்மை மார்க்கத்தை யுணர்த்தும் சாஸ்திரங்களை நன்

குணராமையினுலேயே இங்ஙனம் வீண் தர்க்கமிட்டு நற்கதியை இழக்கின்றனர். இவர்,

"சிறந்த நன்மையுந் தீமையு மீசனுர்
செய்விக்குஞ் செயலன்றே
பிறந்த சீவர்க ளென்செய்வா ரவர்கண்மேற்
பிழைசொலும் வகையேதோ
துறந்த தேசிக மூர்த்தியே யென்றிடிற்
சுருதிநூற் பொருண்மார்க்கம்
மறந்த மூடர்கள் வசனிக்கும் பிராந்திகாண்
மைந்தனே யதுகேளாய்."

"திகழ்ந்த வீசனுர் சிருட்டியுஞ் சீவனுர் சிருட்டியும் வெவ்வேறே
சகந்த னிற்பொது வீசனுர் சிருட்டிகள் சராசரப் பொருளெல்லாம்
அகந்தை யாமபி மானங்கள் கோபங்க ளாசைக ளிவை யெல்லாம்
நிகழ்ந்த சீவனுர் சிருட்டிக ளாகுங்கா ணிமலனுர் செயலன்றே."

என்னும் கைவல்லியச் செய்யுட்களின் கருத்தை உய்த் துணர்வார்களாயின் அங்ஙனம் வீண் தர்க்கமிடார். மதியாவது: மனிதனுடைய செய்கைக் கனுகூலமாக அவனிடத்தே தோன்றியிருப்பது. விதியாவது: மனிதன் தன்னுடைய மதியைக்கொண்டு செய்யும் நன்மை தீமைகளுக்குத் தக்கவாறு அவன் அனுபவிக்கும்படி கடவுளால் ஏற்படுத்தப்படும் பயன்கள். ஒருவன் நற்காரியங்களையே செய்துகொண்டு போவானுகில் மேன்மேலும் நற் பயன்களையே அனுபவித்து முடிவில் ஞான முண்டாக மோக்ஷத்தை யடைவான்; கெட்ட காரியங்களையே செய்துகொண்டு போவானுகில் மேன்மேலும் தீமைகளையே அனுபவித்து முடிவில் துர்க்கதியையே அடைவான். ஒருவனுக்குப் பழவினையால் அளவற்ற நன்மைகளோ தீமைகளோ வரினும் அவன் அவற்றை அனுபவித்துக்கொண்டு நற்காரியங்களிற்

பிரவேசித்து ஞானத்தைத் தேட முயலவேண்டும். அங்ஙனம் தேடின பழவினைகள் அனுபவித்துத் தீர்வதுடன் சஞ்சித கர்மங்கள் எவ்வளவு சேர்ந்திருப்பினும் அவை நாசமாக முத்தியை அடைவதற்கேதுவாகும். இங்ஙனம் நன்முயற்சியால் பழவினைகள் தீர வீடுண்டாமென்பதை,

"ஆன பாவிக ளடைவன் நரகங்க ளவசிய மானாலும்
தான மந்திர விரதவோ மங்களாற் றவிருமென் பதுபொய்யோ
ஈன மாம்பல சன்மசஞ் சிதவினை யெத்தனை யானாலும்
ஞான மாங்கனல் சுடுமென் றமறைமொழி நம்பினால் வீடுண்டே."

என்னுங் கைவல்லியச் செய்யுள் நன்கு விளக்கும். இவ்வுண்மைகளையெல்லாம் ஆராய்ந்துணராதவர்களே 'மதியினால் விதியை வென்றுவிடலாம்' என்றும், 'விதியை மதியினால் வெல்ல முடியாது' என்றும், கண்மூடித்தனமாக வாய்க்கு வந்தவற்றை உளறிக்கொண்டு திரிவர். மதியைக் கொண்டு விதியினோடெதிர்த்துச் சண்டை போடவேண்டுமென்பது சாஸ்திரங்களின் துணிபன்று; மதியைக்கொண்டு நற்காரியங்களைச் செய்யின் இறைவன் பழவினைகளால் நேர்ந்த பாவங்களை யகற்றியருள்வா னென்பதுதான் நூற்களின் றுணிபு. இவ் விஷயம் விரிப்பின் பெருகுமாதலின் இம்மட்டோடு நிறுத்தும்; விசேஷமாக அறிய விரும்புவோர் கீதை, கைவல்லியம் முதலிய நூல்களை நுட்பமாக ஆராய்ந்துணர்க. சாஸ்திரங்களை நன்றாக ஆராயின் மானிடராகப் பிறந்தோர் தங்கள் தங்களுக்குரிய நற்கருமங்களைச் செய்தே தீரவேண்டுமென்பது புலப்படும். ஆதலால், ஒவ்வொருவரும் துர்க்கருமங்களை நீக்கிச் சோம்பலின்றி நற்கருமங்களைச் செய்து இறைவ னருளையும் இகபர சுகங்களையும் அடைவாராக. இன்னும்,

"தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருந்தக் கூலி தரும்."

"மடியுளான் மாமுகடி யென்ப மடியிலான்
றாளுளா டாமரையி னாள்."

என்னுந் திருக்குறட் செய்யுட்களும், "ஊக்கமது கைவிடேல்," என்னும் ஔவையார் கூற்றும் மனிதனுக்கு முயற்சி அவசியம் வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுதலையுங் காண்க.

இச் செய்யுளானது ஆடூஉ முன்னிலையாகக் கூறப்பட்டது. இதனை வாசிக்கும் ஒவ்வொருவரும் தங்கள் தங்களை நோக்கி இதனைக் கூறியதாகக் கருதி நன்முயற்சிகளைத் தேடுக. (கூக)

மங்கையர்மீது செலுத்தும் ஆசையைச் சிவன்பாற் செலுத்தினல் மோக்ஷ மடையலா மென்பது

[நேரிசை வெண்பா]

மங்கையர்க ளங்கமிசை வைத்திருக்கு மாசையினைப்
பங்குசெய்து நூற்றிலொரு பங்கெடுத்துக்—கங்கைமதி
வேணியரன் பாதார விந்தத்தில் வைத்தாக்கால்
காணலாங் காணக் கதி.

(ப-ரை) (உலகத்திலுள்ள ஆடவர்கள்) மங்கையர்கள் - பெண்களினுடைய, அங்கமிசை - அவயங்களின்மீது, வைத்திருக்கும் - கொண்டிருக்கும், ஆசையினை - பிரியத்தை, பங்கு செய்து - பாகப்படுத்தி, (அந்தப் பாகத்தில்) நூற்றில் - நூறு பங்கில், ஒரு பங்கு - ஒரு பாகத்தை, எடுத்து - கைக்கொண்டு, கங்கை - கங்கையையும், மதி - சந்திரனையும், (தரித்த) வேணி - சடையையுடைய, அரன் - சிவபெருமானுடைய, பாதார விந்தத்தில் - பாததாமரைகளில், வைத்தால் - சேர்த்தால், காணு கதி - எவரும் எளிதிற் காண முடியாத மோக்ஷ கதியை, காணலாம் - கண்டு அதனிடத்தே சேரலாம்; (ஆதலால், ஒவ்வொருவரும் சிவபெருமானிடத்தில் மன மொருமித்த பக்தியைச் செலுத்துக).

(வி - ரை) மனிதர்கள், மாதர்களிடத்துச் செலுத்தும் ஆசையில் நூற்றி லொரு பாகத்தையேனும் சிவன்பாற் செலுத்தினல் முத்தியை யடைவது திண்ணம். மானிடர் மற்றைய பொருள்களிடத்துச் செலுத்தும் ஆசையைக் காட்டினும் ஸ்திரீகளிடத்திற் செலுத்தும் ஆசையானது ஐம்புலன்களும் அந்தக்கரணங்களும் ஒருமித்துச் செலுத்தக்கூடிய தாதலின் அதிகரித்ததாம். அதுபற்றியே இங்கு அதில் நூற்றி லொருபங்கும் சிவன்பாற் செலுத்துதற்குச் சிறந்ததாகக் கூறப்பட்டது. ஐம்புலன்களும் மங்கையரிடத்தே ஒருமித்துச் சென்று இன்ப மனுவிக்கு மென்பதை,

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைப்புலனு
மொண்டொடி கண்ணே யுள."

என்னுந் திருக்குறட் செய்யுளா னுணர்க.

பங்கு-எண்ணலளவை யாகுபெயர். பாதாரவிந்தம் - தீர்க்கசந்தி யெனும் வடமொழிப் புணர்ச்சி. (௬௨)

செல்வமுடையார்க்கு நிட்சேபநிதி இன்ன தென்பது

[நேரிசை வெண்பா]

செல்வத்தைப் பெற்றார் சினங்கடிந்து செவ்வியராய்ப்
பல்கிளையும் வாடாமற் பாத்துண்டு—நல்லன
தான மறவாத தன்மையரே லஃதென்பர்
வானகத்து வைப்பதோர் வைப்பு.

(ப - ரை) (செல்வமுடையவர் இங்கே புதைத்து வைக்கும் பொருள் நிச்சயமாகப் பிற்காலத்தி லுதவும் நிட்சேப நிதி யாகமாட்டாது; பின்னை யெது அழியாத நிட்சேப நிதியாகுமெனில்) செல்வத்தைப் பெற்றோர் - அந்தச் செல்வத்தை யடைந்தோர், சினம் கடிந்து - கோபத்தை நீக்கி, செவ்வியராய்-நற்குணமுடையவராய், பல் கிளையும் - தம்முடைய பல சுற்றத்தாரும், வாடாமல் - வறுமையால்

வாட்டமடையாமல், பாத்து-(தம்முடைய பொருள்களை அவர்களுக்கும்) பங்கிட்டுக் கொடுத்து, உண்டு-தாமும் அவற்றை அனுபவித்து, நல்லன - நன்மை யுடையனவாகிய, தானம் - தானங்களையும், மறவாத - மறந்து கைவிடாத, தன்மையரேல் - தன்மையை யுடையவர்களா யிருப்பார்களாயின், அஃது - அப்படி யிருக்கும் செய்கையே, (பிற்காலத்தி லுதவும்படி) வானகத்து - தேவருலகத்திலே, வைப்பது ஓர் - தேடி வைப்பதாகிய ஒரு, வைப்பு என்பர்-நிட்சேப நிதியென்று கூறுவர் பெரியோர்.

(வி-ரை) செல்வ முடையவர்கள் இகத்திற் செய்யும் தானதருமங்கள், சுற்றந் தழுவல், சினங் கடிதல் முதலிய நற்செய்கைகளெல்லாம் ஒரு நிட்சேப நிதிபோல நிலைபெற்றுப் பின்னர்ச் சுவர்க்கத்தில் அவர்க்கு நன்மை பயக்குமாதலால் அவை வானுலகத்தில் தேடி வைக்கும் நிட்சேப நிதியெனக் கூறப்பட்டன. இங்குத் தேடிப் புதைக்கும் பொருள், அங்ஙனம் புதைத்தார்க்கே உதவுதல் நிச்சயமின்மையால் அது நிட்சேபப் பொருளாகாது.

என்பர் என்னும் பயனிலைக் கேற்பப் பெரியோர் என்னும் தோன்றா எழுவாய் வருவித் துரைக்கப்பட்டது. வைப்பு - தொழிலாகுபெயர். வைத்தல் என்னும் தொழில் அதனையுடைய பொருளுக்காயிற்று. (கூ௩)

குணங் கெட்ட பெண்கள் புருஷனைக் கொல்லும் ஆயுதமாவ ரென்பது

[நேரிசை வெண்பா]

எறியென் றெதிர்நிற்பாள் கூற்றஞ் சிறுகாலை
அட்டில் புகாதா ளரும்பிணி — அட்டதனை
உண்டி யுதவாதா ளில்வாழ்பே யிம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை.

(ப - ரை) எறி என்று-(கணவன் ஏதேனுமொரு காரணத்தை முன்னிட்டுக் கோபித்துக்கொள்ளுங் காலத்தில் தானும் அஞ்சாமல் கோபங்கொண்டு) அடி பார்க்கலாம் என்று எதிர்த்துப் பேசி, எதிர் நிற்பாள் - கணவனுக்கு முன்னே நீலித்தன்மைகொண்டு நிற்பவள், கூற்றம் - அக் கணவனைச் கொல்லும் எமனாவள்; சிறு காலை - சிறிய விடியற்கால நேரத்திலேயே, (அதாவது சிறிது விடிந்ததும் விடியாமலு மிருக்கும் நேரத்திலேயே எழுந்து தேகசுத்தி முதலியவற்றைச் செய்துகொண்டு) அட்டில்-சமையல் வீட்டிலே, புகாதாள்-உணவு சமைக்கும்பொருட்டுப் போகாதவள், (கணவனுக்கு) அரும் பிணி - தீருதற்கரிய நோயாவள்; அட்டதனை - அங்ஙனம் புகுந்து சமைத்தவற்றை, உண்டி - உணவாக, உதவாதாள் - (கணவன் புசித்தற்குரிய காலமறிந்து அவனுக்கு) இட்டுபசரியாதவள், இல்வாழ் பேய் - அந்தக் கணவன் வீட்டில் வாழுகின்ற பேயாவள்; (பின்னும்) இம்மூவர் - இத்தகைய குணங்களையுடைய இந்த மூவரும், கொண்டானை-மணஞ் செய்துகொண்ட கணவனை, கொல்லும்-மடிக்கின்ற, படை - ஆயுதமுமாவர், (ஆதலின், இத்தகையரை மனைவியாக ஆடவர் கொள்ளுதல் தீங்காம்).

(வி-ரை) மனைவி எதிர்த்துப் பேசுவாளாயின் மேலும் மேலும் கணவனுக்குக் கோப மதிகரித்து அவனுடைய உயிர்க்கு அபாயம் நேரஏதுவாமாகையால் அவளே அவனுக்கு எமனும். உரிய காலத்தில் மனைவி சமையல் செய்பத் தொடங்காவிடின், கணவன், பசியோடு காத்திருப்பதால் அவனுக்குப் பல பிணிகளு முண்டா மாதலால் அவளே பிணியாவள். சமைத்த உணவைக் குணத்தோடு உதவாத மனைவியால் கணவனுக்கு மிக்க மன வியாகுல முண்டா மாதலால் அவளே வீட்டிலிருந்து துன்பப்படும் பேயாவாள். இம் மூவராலும் கணவன் பலவித துன்பங்களை யடைந்து மரணமாக ஏதுவாமாகையால் இம் மூவரும் அவனைக் கொல்லும் ஆயுதமு மாவர். ஆத

லால், அறிவுடையோர் இத்தகைய மனைவியரைக் கொள்ளாமல் நல்ல மனைவியரைக் கொள்ளவேண்டும். கெட்ட மனைவியரைக் கொள்ளுதல் கூடாதென்பதை,

"தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்."

என்னும் ஔவையார் வாக்காலும்,

"மனையாட்டி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்."

"புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
ஏறுபோற் பீடு நடை."

என்னுந் திருக்குறட் செய்யுட்களானு முணர்க.

நிற்பாள், புகாதாள், உதவாதாள் ஆகிய இவை வினையாலணையும் பெயர்கள். கூற்றம், பிணி, பேய், படை என்பன உவமையாகு பெயர்கள். 'அடு இல்' 'அட்டில்' என ஒற்றிரட்டி வந்தது. (இவ் வெண்பா நாலடியார்ச் செய்யுள்.) (கூச)

தங்களால் வரும் தாழ்வை அறியாதவர் இன்னவ ரேன்பது

[கலி விருத்தம்]

மங்கையர் விருந்தினர் வயித்திய ரிரப்போர்
பங்குபிணி யாளரொடு பாலகர் விருத்தர்
அங்கமறை வேதியரு மந்தகரு மன்னர்
தங்கள்குறை யால்வருமோர் தாழ்வுமறி யாரே.

(ப-ரை) (உலகத்தில்) மங்கையர்-மங்கைப் பருவத்தை யடைந்த பெண்களும், விருந்தினர் - விருந்தினர்களும், வயித்தியர் - சிகிச்சகரும், இரப்போர்-யாசகரும், பங்கு-முடவனும், பிணியாளரொடு-வியாதிக்காரர்களும், பாலகர்-அறியாச் சிறுவர்களும், விருத்தர்-வயது சென்ற விருத்தாப்பியர்களும், அங்கம்-ஆறங்கங்களை யுடைய, மறை

வேதங்களை ஓதி யுணர்ந்த, வேதியரும்-பிராமணர்களும், அந்தகரும்-குருடரும், மன்னர் - அரசரும், தங்கள் குறையால் - தங்களுடைய குற்றத்தால், வரும் - வருகின்ற, (தாழ்வுகளில்) ஓர் தாழ்வும் - ஒரிழிவையும், அறியார் - ஆராய்ந்து தெரிந்துகொள்ளமாட்டார்கள்.

(வி-ரை) மங்கைப் பருவத்தை யடைந்த பெண்கள் மாமியார் முதலியோர் வெறுக்கும்படி சில குற்றங்களைச் செய்பினும், அப் பருவத்தின் மதர்ப்பினாலும் பேதைமையாலும் அவற்றைக் குற்ற முடையவை யென்று கருதமாட்டார்கள்; அவைகளெல்லாம் சரியா னவைகளென்றே அவர்கள் கருதுதல் இயற்கை. விருந்தினர், தங்களை உபசரிப்போனுடைய சொந்தத்தைப் பாராட்டித் தாங்கள் சுகமான உணவுகளை உண்டு களிப்பதையே பெரிதாக நினைப்பார்களே யன்றித் தங்களால் அவனுக் கேற்படுங் கஷ்டத்தையும், நஷ்டத்தையும், தாங்கள் செய்யுங் குற்றத்தையுங் கவனிக்கமாட்டார்கள். வயித்தியர் தாங்கள் சிகிச்சை செய்யுமிடத்தில் தங்களுடைய சிகிச்சைக் குறைவால் பல மரணங்கள் நேரினும், கஷ்டங்க ளுண்டாயினும் அவற்றைத் தங்களா லுண்டானவை யென்று கருதி வயித்தியத்தை விட்டுவிட மாட்டார்கள்; அவற்றிற்குத் தக்க வேறு காரணங்களைச் சொல்லி மேலும் சிகிச்சை செய்யத் தொடங்குவர். யாசகர் எப்படியும் தாங்கள் பொருள் பெறுவ தொன்றையே கருதுவார்க ளன்றித் தங்களால் பிறருக் கேற்படும் கஷ்ட நஷ்டங்களைக் கவனிக்கமாட்டார். மூடவன், தான் ஒன்றுஞ் செய்ய முடியாதவனா யிருப்பதால் பிறரால் சகாயம் பெற்றுக்கொள்வதையே பிரதானமாகக் கொள்வானேயன்றித் தன்னால் அவர்க்கேற்படும் துன்பங்களைச் சிறிதும் கவனிக்கமாட்டான். பிணியாளர் தாங்கள் ஏதையும் புசிக்கவேண்டுமென்னும் விருப்பத்தையும் பிறரால் சகாயம் பெற்றுக்கொள்வதையுங் கருதுவார்களே யன்றிக் கண்டதைப் புசிப்பதால் தங்களுக்கு வருந் தீங்கையும், தங்களால் பிறருக் குண்டாகுங் கஷ்டங்களையும்

கவனிக்கமாட்டார். பாலகர் தங்களுடைய அறியாப் பருவத்தின் இயற்கையாலே தாங்கள் செய்யுங் குற்றத்தால் வரும் இழிவை யறிய மாட்டார்கள். விருத்தர் தாங்கள் அசக்தர்களா யிருப்பதனுலேயும் அப் பருவத்தில் தங்களுக்குக் கொஞ்சம் அறியாமை ஏற்படுவத னுலேயும் தங்களால் பிறருக் கேற்படும் கஷ்டம் முதலியவற்றைக் கருதாமல் தாங்கள் மற்றையரால் சகாயம் பெற்றுக்கொள்வதையே கருதுவார்கள்; சில சமயம் செய்யத்தகாத காரியத்தையுஞ் செய்து விடுவார்கள். வேதியர் பிறர் கஷ்டத்தைக் கவனியாமல் தாங்கள் தக்ஷணை பெற்றுக்கொள்வதையே முக்கியமாகக் கருதுவார்கள். குருடர் எதற்கும் பிறர் சகாயத்தை விரும்பக்கூடியவர்க ளாதலால், தங்க ளால் பிறருக்கு நேரும் கஷ்டத்தையும் அதனுல் தங்களுக்கு நேரும் அவமானத்தையுங் கருதமாட்டார்கள். மன்னர்கள் எல்லாரினும் மேற்பட்டவ ரென்னும் செருக்கையுடையவராதலின் தமக்கு வரும் இழிவைக் கருதாமல் எதையும் துணிந்து செய்துவிடுவார்கள். இவர் கள் இப்படி யிருப்பது இயற்கையாயினும் சிலர் தங்களுக்கு வரும் இழிவைக் கருதி அவ் விழிவுக் கிடங்கொடாமல் நடந்துகொள்வது முண்டு. இங்குக் கூறியது இவ்வகையாருள் இழிவைக் கருதாதவர் களைப் பற்றியேயாம்.

வேதத்தின் ஆறங்கங்களாவன:—மந்திரம், வியாகரணம், நிக ண்டு, சந்தோபிசிதம், நிருத்தம், சோதிடம் என்பனவாம். (கூ௫)

இன்ன இன்ன காரியங்களைச் செய்பவர்களிடம் இலக்குமி வாசஞ்செய்யா ளென்பது

[கலி விருத்தம்]

காலை மாலை யுறங்குவர் காரிகை
கோல மேனி குலைந்தபின் கூடுவர்
சாலி ராத்தயிர் சாதமொ டுண்பவர்
மாலை நேரினு மாது பிரிவளே.

(ப - ரை) காலை - விடியற்கால நேரத்திலும், மாலை - சூரியாஸ்தமன காலத்திலும், உறங்குவர் - நித்திரை செய்பவர்களும்; காரிகை-பெண்ணினது, கோலம் மேனி - கலியாணக் கோலத்தின் அழகு, குலைந்த பின்-அழிந்தபின் (அதாவது, அவள் அமங்கலியாண பின்) கூடுவர் - அவளைச் சேர்பவரும்; சால் - மிகுந்த, இரா-இராத்திரி காலத்தில், தயிர் - தயிரை, சாதமொடு - சோற்றுடனே சேர்த்து, உண்பவர் - புசிப்பவரும்; மாலை நேரினும் - மகா விஷ்ணுவை நிகர்த்துச் சிறப்பு வாய்ந்தவர்களா யிருப்பினும், மாது - இலக்குமி, பிரிவள் - அவர்களை விட்டு நீங்குவள்.

(வி-ரை) காலை மாலை யுறக்கம் முதலியவை வைத்திய சாஸ்திர முறைப்படி சுகத்திற்குக் கேடாமாகையால், இலக்குமியோடு கூடிச் சுகமாக வாழ விரும்புவோர் இவற்றை யொழித்தல்வேண்டும். விஷ்ணுவை நிகர்த்தவர்களிடம் இலக்குமி பக்ஷமுடையவளா யிருக்க வேண்டியது முறைமையாயினும் அவர்கள் இச் செய்கைகளைக் கைக்கொள்வார்களாயின் உடனே அவர்களை விட்டு நீங்குவாள்.

மாது என்பது பெண்பாற் பொதுப்பெயராயினும் இலக்குமி பெண்களுள் தலைமை பெற்றிருத்தல்பற்றி அஃதிங்கு இலக்குமியை உணர்த்திற்று; பூவென்பது சிறப்பு நோக்கித் தாமரைமலரை யுணர்த்துதல்போல. (சுக)

இன்ன இன்ன செய்கைகளை யுடைவர்களிடம் மூதேவி வாசஞ் செய்வா ளென்பது

[கலி விருத்தம்]

இஞ்சி நெல்லி யிலைக்கறி பாகற்காய்
கஞ்சி வெண்டயிர் கங்கு லருந்திடில்
பொஞ்சு பூமகள் போயுடன் மூத்தவள்
கொஞ்சிக் கொஞ்சிக் குலாவி நடிப்பனே.

(ப - ரை) (உலகத்தி லுள்ளவர்கள்) இஞ்சி - இஞ்சியையும், நெல்லி - நெல்லிக்காயையும், இலைக்கறி - கீரைக்கறிகளையும், பாகற்காய்-பாகற்காயையும், கஞ்சி - கஞ்சியையும், வெண் தயிர் - வெண்மையான தயிரையும், கங்குல் - இராக்காலத்தில், அருந்திடில் - உட்கொண்டால், (அவர்களிடம்) பொஞ்சு - செழிப்பாக வாழ்கின்ற, பூமகள் - இலக்குமி, போய் - போக, உடன் - உடனே, மூத்தவள் - அவளுக்கு மூத்தவளாகிய மூதேவி, கொஞ்சிக் கொஞ்சி - நெருங்கிச் செல்வமாகப் பேசிப்பேசி, குலாவி - சிநேகமாகி, நடிப்பள் - கூத்தாடுவாள்.

(வி-ரை) இஞ்சி முதலியவற்றை இராக்காலத்தி லருந்துதல் வைத்திய வொழுங்கின்படி கூடாதாதலால் அவற்றை அக்காலத்தில் அருந்துவோரிடம் இலக்குமி நீங்கி மூதேவி வாசஞ் செய்வள்.

இஞ்சி, நெல்லி என்பன முதலாகுபெயர்கள். பொஞ்சுதல்-செழித்தல். போகவென்னும் செயவெனெச்சம் போய் எனச் செய்தெனெச்சமாகத் திரிந்துவந்தது. கொஞ்சுதல் - செல்வமாகப் பேசுதல். (கள)

பொருளுடையார் நிந்தை கூறினும் அஃது உயர்மொழி யாகுமென்பதும், வறிஞர் அறமொழி கூறினும் அஃது தாழ்ந்த மொழியாகு மென்பதும்.

நிறைபொரு ளுடையவர் நிந்தை சொல்லினும்
முறையுறு வழக்கென மொழிந்து போற்றுவர்
வறுமையிற் குடையவர் வழங்கும் வாய்மொழி
அறமொழி யாகினு மதனை யெள்குவர்.

(ப-ரை) நிறை - அதிகரித்த, பொருள் உடையவர் - திரவியமுள்ளவர்கள், நிந்தை-இகழ்ச்சி மொழிகள், சொல்லினும் - கூறினும், (அதனை உலகத்தி லுள்ளவர்கள்)முறை உறு-ஒழுங்கு பொருந்

றிய, வழக்கு என-பழக்கச் சொல் என்று, மொழிந்து-கூறி, போற்று
வர் - அவர்களைத் துதிப்பார்கள்; வறுமை மிக்குடையவர்-தரித்திரம்
மிகுதியாக உள்ளவர், வழங்கும்-சொல்லுகின்ற, வாய் மொழி-வாய்ச்
சொல்லானது, அறமொழியாகினும்-தருமம் பொருந்திய வார்த்தை
யானாலும், அதனை - அச்சொல்லை, என்குவர் - இகழ்வார்கள்.

(வி - ரை) பொருளுள்ளவர்கள் நிந்தை மொழி கூறினும்,
தகாச் செய்கைகளைச் செய்யினும் அவற்றை உலகத்திலுள்ளவர்கள்
உயர்வுள்ளவைகளாகக் கொண்டு அவரைத் துதித்தலும், வறுமை
யுள்ளோர் நியாய மொழிகளைக் கூறினும் ஒழுங்கான காரியங்களைச்
செய்யினும், அவற்றை இகழ்ச்சியுடையனவாகக் கருதி அவர்களை
இகழ்தலும் உலகத்தியற்கை. பெரியவரெனப் பெயரெடுத்த சிலருங்
கூடப் பொருளைப் பெரிதாக நினைத்து அப்பொருளுடையவர்களிடம்
தாங்கள் எதையேனும் பெற்றுக்கொள்ளுதற்பொருட்டு அவர்கள்
செய்யும் தகாச் செய்கைகளைக் கொண்டாடியும், அவர்களை யிகழும்
அறிவுடையோரைத் தாமிகழ்ந்தும் திரிவதை அனுவத்திற் காண
லாம். இஃது உலகத்தியற்கையாயினும் இச்செய்கை அறிவுடை
யார் வெறுக்கத்தக்கதாம். இது கூடாதென்பதை அறிவுறுத்தற்
பொருட்டே இச்செய்யுள் ஏற்பட்டது. (கூஅ)

இன்ன இன்ன தொழில்கள், செய்வோர் மனத்தை எப்பொழுதும் துன்பப்படுத்திக்கொண்டிருக்கு மென்பது

[கட்டளைக் கலித்துறை]

கட்டா ணிடத்தினிற் றங்கப் பணிகள் சமைப்பதுவும்
மட்டாடு வாரைத் திருத்திநன் மார்க்கத்தில் வைப்பதுவும்
பட்டாங்கு காகிதப் புத்தக மச்சிற் பதிப்பதுவும்
தொட்டார் மனத்தைப் பலவாறு நாளுந் துயர்செய்யுமே.

(ப - ரை) தட்டான் இடத்தினில் - பொன் வேலை செய்யுங் கம்மாளனிடத்தில், (பொன் முதலியவற்றைக் கொடுத்துத்) தங்கப் பணிகள் - பொன்னாபரணங்களை, சமைப்பதுவும் - செய்வதும், வட்டு ஆடுவாரை - சூதாடுவார்களை, திருத்தி-(அத் தொழிலினின்று நீக்கிச்)செவ்வைப்படுத்தி, நல் மார்க்கத்தில்-நல்ல வழியில், வைப்பதுவும் - நிறுத்திவைத்தலும்; பட்டாங்கு - சித்திரச்சேலையையும்; காகிதப் புத்தகம் - கடுதாசிப் புத்தகத்தையும், அச்சில் - முத்திரை எழுத்தில், பதிப்பதுவும் - பதித்தலும், (ஆகிய இத் தொழில்கள்) தொட்டார் - (இவற்றைச் செய்யத்) தொடங்கினவர்களுடைய, மனத்தை- உள்ளத்தை, நாளும்-தினந்தோறும், பல ஆறு - பலவிதமாக, துயர் செய்யும் - துன்பப்படுத்தும்.

(வி - ரை) தட்டானிடத்தில் நகை செய்யும்பொருட்டு ஒருவர் பொன்னைக் கொடுத்தால் அவன் அதனிற் பெரும் பாகத்தைக் கவர்வதுமன்றி நகையையும் விரைவிற் செய்து கொடாமல் பல நாளும் அவர்க்கு அலைச்சலை யுண்டாக்குவா னாதலின் அவனிடம் நகை செய்யத் தொடங்குவோர்க்கு மிகுந்த துன்பமே யுண்டாம். தட்டாரிடம் பொன்கொடுத்து நகைசெய்து வாங்குவது கஷ்ட மென்பதையும், அவர்கள் மிகுந்த மோசஞ் செய்து பொன் கொடுத்தோரைத் துன்பப்படுத்துவார்க ளென்பதையும்,

“ஒட்டாக வொட்டியுங் காற்பொன்னின் மாப்பொன் னுபாயமதாத்
தெட்டா திரான்பணி செய்யா திரான்செம்பொன் மேருவினைக்
கட்டாகக் கட்டிக் கடுகள வாகிறை காட்டவல்ல
தட்டானுக் கஞ்சியல் லோவணிந் தான்சிவன் சர்ப்பத்தையே.”

என்னும் படிக்காசுப்புலவர் செய்யுளா னுணர்க. சூதாடுவோர் என்ன சொன்னாலும் கேளாமல் அத் தொழிலிலேயே மிகுந்த விருப்பத்தோடு பிரவேசிப்பார்களாகையால் அவர்களைத் திரு

த்தி நல்வழிக்குக் கொண்டுவருவதும் கஷ்டமாம். சித்திரச்சேலை, காகிதப் புத்தக முதலியவற்றை அச்சிடுந் தொழிற்காரர் பலரிடத்தும் பல வேலைகளை வாங்கிக்கொண்டு ஒருவருக்கும் வேலையை விரைவில் முடித்துக்கொடாமல் ஒவ்வொருவரையும் அலையச்செய்வார்களாகையால் அவர்களிடத்தில் அச்சுவேலை கொடுத்து வாங்குவதும் கஷ்டமாம்; "அச்சுவேலையோ நச்சுவேலை," என்னும் பழமொழி இதனை நன்கு விளக்கும்.

வட்டு-சூதாடு கருவி; இது மரத்தாற் குமிழாகச் செய்யப்பட்டு வருணந் தடவப்பெற்றிருப்பது; இஃது ஆகுபெயராய் இதனால் நிகழுந் தொழிலை யுணர்த்திற்று. (சுகூ)

ஞானமாகிய பொருளைவிட்டு நிலையற்ற பொருளைத் தேட உழைத்து வருந்துவது வீணென்பது

[கலி விருத்தம்]

வெள்ளத்தே போகாது வெந்தணலில் வேகாது
கொள்ளத்தான் போகாது கொடுத்தாலும் குறையாது
கள்ளருக்கு மெட்டாது காவலுக்கு ளமையாது
உள்ளத்தே பொருளிருக்க வூரிலுழைத் துழல்வானேன்.

(ப - ரை) (உலகத்தில் நிலையற்ற பொருளைத் தேடி யலையும் மானிடர்களே!) வெள்ளத்தே - ஜலப்பிரவாகத்திலே, போகாது - (அதனால் அடித்துக்கொண்டு) போகப்படாததும்; வெம் - வெம்மையாகிய, தணலில் - நெருப்பில், வேகாது - எரிந்து போகாததும்; கொள்ள - (பிறர்) எடுக்க (அதனாலே) தான் போகாது - தான் குறைந்துபோகாததும்; கொடுத்தாலும் - (பிறருக்கு எவ்வள வெடுத்துக்) கொடுத்தபோதிலும், குறையாது - குறைந்துபோகாததும்; கள்ளருக்கும்-திருடருக்கும், எட்டாது-(கைப்பற்றுவதற்கு) எட்டாததும்; காவலுக்குள் - ஒருவர் தமக்கே சொந்தமாகக் கருதிச் செய்

யும் தங்கள்) காவலுக்குள்ளே, அமையாது - அடங்காததும் (ஆகிய) பொருள் - ஞானமென்னும் பொருளானது, உள்ளத்தே - (உங்களுடைய) அகத்திலே, இருக்க - நிலைபெற்றிருக்க, (அதன் இயல்பை யறிந்து அதனை விருத்திசெய்து அதனால் எப்பொழுதும் நிலைபெற்றதாகிய பேரின்பமென்னும் மோக்ஷவீட்டை யடையாமல் மேற் கூறியபடி நிலையற்ற சிற்றின்பத்திற் கேதுவாகிய திரவியத்தைத் தேடி) ஊரில் - நகரத்திலே, உழைத்து - பிரயாசைப்பட்டு உழல்வான் என் - வருந்துவது எதற்காக?, (இதனால் ஒரு பிரயோசனத்தையும் அடையமாட்டீர்கள்; ஆதலால், விரைந்து உங்களிடத்திலேயுள்ள அழியாப் பொருளாகிய ஞானத்தை விருத்தி செய்து கொண்டு அதனால் நன்மையை அடைவீராக.)

(வி - ரை) இச் செய்யுளானது நிலைத்த பொருளாகிய ஞானத்தை விட்டு நிலையற்ற திரவியத்தைத் தேடி வருந்தும் மானிடனை நோக்கி ஞானத்தைத் தேடுமாறு கூறுவதாக அமைக்கப்பட்டது. ஆதலின், அத்தகையினர் ஒவ்வொருவரும் இச் செய்யுட் கருத்தை நோக்கி, நிலையற்ற பொருளைத் தேடி வருந்துவதை விடுத்து நிலைத்த ஞானப்பொருத் தேடி அதனால் முத்திவீட்டை யடைதற்கு மார்க்கம் தேடவேண்டும். பொருட் பொருத்தம் நோக்கி, 'மானிடர்களே!' என்னும் விளி வருவித்துரைக்கப்பட்டது. போகாது, வேகாது முதலியவற்றில் தகரந் தொக்கது. இவற்றுள் எண்ணும்மைகளும் தொக்கன.

உழல்வான் - இதிலுள்ள வான் என்னும் வினையெச்ச விகுதி இங்குத் தொழிற்பெயர் விகுதியாக வந்தது. இங்ஙனம் வருதல் "உரையிற் கோடல்," என்னும் உத்தியாற் கொள்ளப்பட்டது. "செய்து செய்பு........."(ந-வி-உஅ) என்னுஞ் சூத்திர வுரையைப் பார்க்க. (எ0)

எல்லாரிடத்தும் விசனம் ஒரு தன்மைத்தே யென்பது

[கட்டளைக் கலித்துறை]

பாலுக்குச் சர்க்கரை யில்லையென் பார்க்கும் பருக்கையற்ற
கூழுக்குப் போடவுப் பில்லையென் பார்க்குமுட் குத்தித்தைத்த
காலுக்குத் தோற்செருப் பில்லையென் பார்க்குங் கனகதண்டி
மேலுக்குப் பஞ்சணை யில்லையென் பார்க்கும் விசனமொன்றே.

(ப - ரை) (உலகத்தில்) பாலுக்கு - பருகுகின்ற பாலுக்கு (உரியதாகிய), சர்க்கரை இல்லை என்பார்க்கும் - சருக்கரை யில்லை யென்று கவலைப்படுவார்க்கும்; பருக்கை அற்ற - சோற்றுப்பருக்கை ஒன்றேனுங் கலவாத, கூழுக்கு-புற்கைக்கு, போட-இடுதற்கு (உரிய) உப்பு இல்லை என்பார்க்கும் - இலவணம் இல்லையென்று கவலைப்படு வார்க்கும்; முள் - முள்ளானது, குத்தித் தைத்த - பாய்ந்து உள்ளே பொருந்தி வருத்திய, காலுக்கு-பாதத்திற்கு (உரிய), தோல் செருப்பு-தோலாலாகிய பாதரக்ஷை, இல்லை என்பார்க்கும்-இல்லையென்று கவலையுறுவார்க்கும்; கனகம் - பொன்மயமாகிய, தண்டி - பருமை யான, மேலுக்கு-உடம்பிற்கு (படுக்கையில் அழுத்தாமலிருப்பதற் குரிய) பஞ்சணை - பஞ்சுமெத்தை, இல்லை என்பார்க்கும் - இல்லை யென்று கவலைப்படுவார்க்கும், (ஏற்படும்) விசனம் - மனவருத்த மானது, ஒன்றே-ஒருதன்மையுடையதேயாம்; (இடத்திற்குத் தகுந்த படி விசனத்தில் உயர்வு தாழ்வில்லை; ஆதலின் விசனமுறுவோர் எல்லோரையும் சமமாகக் கருதி அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்).

(வி - ரை) மனிதர் ஒவ்வொருவரிடத்திலும் விசனத்திற்குக் காரணம் வெவ்வேறாயினும் விசனத்தில்மாத்திரம் வித்தியாசமில்லை. அஃது எவ்விடத்தும் ஒரேதன்மை யுடையதாம். ஆதலின், விசன முறுவோர்க் குதவிசெய்வோர், உயர்ந்தவரென்றும் தாழ்ந்தவரென்றும் பேதமாகக் கருதாமல் எல்லோரிடத்தும் இரக்கமுற்றுச் சமத்துவமான உதவியைச் செய்யவேண்டும்.

பாலுக்குச் சர்க்கரை, கூழுக்குப்பு, காலுக்குத் தோற்செருப்பு, மேலுக்குப் பஞ்சணை யென்பன நான்காம் வேற்றுமை விரிகள். இவற்றிலுள்ள குவ்வுருபு தகுதியுடைப் பொருளில் வந்தது. (எக)

பொய்யுரைத்தல் இன்னவிடத்தில் தகும், இன்னவிடத்தில் தகாதென்பது

[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

பொய்யருக்குப் பொய்யுரைத்தால் வெற்றியா
மவருக்குப் பொய்யா காத
மெய்யருக்குப் பொய்யுரைத்தாற் றேய்பிறைபோற்
றவங்குறையு மிடியுண்டாகும்
துய்யதாய் தந்தையர்க்குப் பொய்யுரைத்தால்
வறுமைபிணி தொலையா வென்றும்
உய்யவரு டேசிகற்குப் பொய்யுரைத்தா
னரகமது வுண்மை தானே.

(ப-ரை) (உலகத்தில் ஒருவர்) பொய்யருக்கு-(எப்பொழுதும்) பொய்யே கூறு மியற்கை யுள்ளாரிடத்தில், பொய் உரைத்தால் - தாமும் பொய்யையே கூறினால், அவருக்கு - அப்படிச் சொல்லுமவர்க்கு, வெற்றி ஆம்-தம் காரியங்களில் ஜெய முண்டாகும்; பொய் ஆகாத - அபத்தம் கூடாத, மெய்யருக்கு - உண்மையாளரிடத்தில், பொய் உரைத்தால் - அபத்தங் கூறினால், (அங்ஙன முரைப்பவர்

(ருடைய) தவம்-தவமானது, தேய் பிறைபோல்-அபரபக்ஷத்து சந்திரன்போல, குறையும்-வரவரச் சுருங்கிப்போகும்; (அன்றியும், அவ ரிடத்தில்) மிடி-வறுமையும், உண்டாகும்-ஏற்படும்; தூய்ய-பரிசுத்தமாகிய, தாய் தந்தையர்க்கு - பிதாமாதாக்களிடத்தில், பொய் உரைத்தால் - அபத்தம் கூறினல், (அப்படிக் கூறுவோரைவிட்டு) வறுமை-தரித்திரமும், பிணி-நோயும், என்றும் - எப்பொழுதும், தொலையா - நீங்கிப் போகமாட்டா (அவர்களிடத்தே குடிகொண்டிருக்கும்); உய்ய-(முத்தி வீட்டை யடைந்து) பிழைக்கும்பொருட்டு, அருள் - சன்மார்க்கத்தை உபதேசித்தருளுகின்ற, தேசிகற்கு - ஞானசிரியனிடத்தில், பொய் உரைத்தால்-பொய்ம்மொழி கூறின், (அங்ஙனங் கூறுவார்க்கு) நரகமது - நரகமானது, (கிடைப்பது) உண்மை - சத்தியமாம்.

(வி-ரை) 'உலகவாழ்வு சதமன்று; ஆதலின் நாம் பாவ கருமங்களை விட்டு நீங்கு அறத்தைத் தேடவேண்டும்' என்று சிறிதும் கருதாமல், ஜனங்களை யேமாற்றும்பொருட்டு உபாத்தியாய ரென்றும், பண்டித ரென்றும், பெரியவ ரென்றும் பல போலிப் பெயர்களைத் தரித்துக்கொண்டு, எப்பொழுதும் எவரிடத்தும் பொய்வார்த்தைகளையே கூறி, எல்லோரையும் ஏமாற்றிப் பொருள் முதலியன சம்பாதித்துத் திரியும் பாபாத்மாக்களிடத்தில் புத்திமான்கள், அவர்கள் கூறும் பொய்க்கிரட்டிப்பான பொய்யையே கூறவேண்டும்; அங்ஙனங் கூறினுற்றான் அவர்களுடைய மாய வலையினின்றும் நீங்கிக் காரியசித்தி படைதற் கேதுவுண்டாம்; இவ்வாறின்றி மெய் கூறத் தொடங்கினுல் அந்தப் பொய்யருடைய காரியமே மேலாகி அவர்களுக்கே ஜெயமுண்டாகும். இங்ஙனம் இத்தகையரிடம் பொய் கூறவேண்டியது அவசியமாயினும், மெய்யர், தாய்தந்தையர், தேசிகர் முதலியவர்களிடத்தில் எட்டுணையும் பொய் கூறலாகாது. அங்ஙனம் கூறின் கேடுண்டாம்.

உருபுமயக்கத்தால் பொய்யரிடம், மெய்யரிடம், தாய்தந்தைய ரிடம், தேசிகனிடம் என வரவேண்டிய வாக்கியங்கள் பொய்யரு க்கு, மெய்யருக்கு, தாய்தந்தையர்க்கு, தேசிகற்கு என வந்தன. நரகமது இதில் அது என்பது எழுவாய் வேற்றுமைச் சொல்லுருபு.

"உயிர்வரி னுக்குறண் மெய்விட் டோடும்
யவ்வரி னிய்யா முற்றுமற் றொரோவழி."

என்னும் சூத்திரத்தில், 'முற்றுமற் றொரோவழி,' என்றமையால், அது என்னும் முற்றியலுகரம் உயிர் வரக் கெடாமல் நின்று, 'அது வுண்மை' என வகர வுடம்படுமெய் பெற்றது. (எஉ)

தரித்திரத்தின் கொடுமையும், அஃதின்னதால் நீங்கு மென்பதும்

[கலி விருத்தம்]

தரித்திர வெம்பிணி தான்வந் துற்றிடில்
கருத்தழிந் துண்பதற் குயிர்க லங்குவார்
மருந்துள தோவெனின் மாநி லத்திலை
பொருந்தவொண் செல்வமென் மருந்திற் போகுமே.

(ப - ரை) தரித்திரம்-வறுமை யென்கின்ற, வெம்-கொடுமை யாகிய, பிணி - நோயானது, (உலகத்தில் ஒருவர்க்கு) வந்து உற்றி டில் - வந்து பொருந்துமேயானால், (அவர் அதனால்) கருத்து அழி ந்து-தொழின்முயற்சியிற்செல்லும் எண்ணமெல்லாங்கெட, உண்ப தற்கு - சாப்பிடுவதற்கு, (உணவகப்படாமற்போக அதன்பொருட்டு) உயிர் கலங்குவார்-ஆவி கலக்கமுற்று வருந்துவார்; (இப்படி அவரை வருத்தும் தரித்திரமாகிய பிணிதீர)மருத்து-மருந்தானது, உளதோ எனின் - உண்டோ என்று விசாரிக்குமிடத்து, மா-சிறந்த, நிலத்து- பூமியில், இல்லை-வேறு மருந்தின்றாம்; (பின்னை எதனாலது தீருமெ

னின்), பொருத்தம் - (துன்பத்தை நீக்குதற்குத்) தகுதியாகிய, ஒண் - அழகிய, செல்வம் என் - ஐசுவரிய மென்கின்ற, மருந்தின்- ஔடதத்தினலே, போகும் - (அவரை விட்டு நீங்கிச்) செல்லும்.

(வி-ரை) ஒருவருக்குத் தரித்திரமானது வந்து சேரும் பக்ஷத்தில் அவர்களிடத்திற் சோம்பல் முதலியன மேலிட்டு எவ்விஷயத்தினும் செல்லும் ஊக்க மில்லாமற்போகு மாகையால் அவர்களுடைய தைரியமான எண்ணங்க ளெல்லா மழியும்; அங்ஙனம் அவை அழியவே கையி லொன்று மகப்படாமற்போம்; அதனல் உண்ணு முணவிற்குங் கஷ்டமாம்; அதனல் அவர் ஆவி கலங்கி வருந்துதற் கேதுவாம்; இவ் வருத்தம், அவர்களிடத்திற் செல்வஞ் சேர்ந்தாற் றீருமேயன்றி வேறொன்றானுந் தீராது. ஆதலின், ஒவ்வொருவரும் சோம்பலின்றி நன்முயற்சிகளைச் செய்து பொருளைத் தேடித் தரித்திரத்தையொழித்தல் வேண்டும். 'கலங்குவார்' என்னும் பயனிலைக் கேற்ப, 'அவர்' என்னும் தோன்றா எழுவாய் வருவித் துரைக்கப்பட்டது. வெம்மை, ஒண்மை என்னும் பண்புச்சொற்கள் மை விகுதி கெட்டு வெம், ஒண் என நின்றன. மருந்து, மருத்தென வலித்தல் விகாரம் பெற்றது. உயிர் கலங்குவார்-இதில் சினைவினை முதலொடு முடிந்தது.

பொருளால் இன்பத்தை யனுபவியாமலும், பிச்சைமுதலியன இடாமலு மிருப்பவனிடத்தில் சேர்ந்திருக்கும் பொருள் பயனற்றதென்பது

[கலி விருத்தம்]

பொலிவளந் தங்கிய புவியிற் றானுண்டும்
பலபிறர்க் கிட்டுமே பயன்றுவ் வான்பொருள்
வலியிலாப் பேடிகை வாள்கொ லாணென
அலியினை மேவிய வரம்பை யேகொலோ.

(ப - ரை) பொலி - சிறந்த, வளம் - நிலவண்மைகள், தங்கிய- பொருந்திய, புவியில்-இவ் வுலகத்திலே, (தன்னிடத்தே பூர்வ புண்ணியவசத்தாற் பொருள் கிடைத்திருந்தும் அதன் மூலம்) தான் உண்டும் - தான் நல்ல உணவு முதலியவைகளை உண்டு இன்பத்தை யனுபவித்தும், பிறர்க்கு - பசித்து வந்த அன்னியராகிய யாசகர்க்கு, பலி இட்டும் - பிச்சை கொடுத்தும், பயன் - அப் பொருளின் பிரயோசனத்தை, துவ்வான் - அனுபவியாதவனுடைய, பொருள் - அச் செல்வமானது, (ஆயுதங்களைப் பிரயோகித்துப் பகைவரை வெல்லும்) வலி இல்லா - ஆற்ற லில்லாத, பேடி-பேடியினுடைய, கை-கரத்திலுள்ள, வாள்கொல்-பயனற்ற வாளாயுதமோ?' (அல்லது) பெண்களுக் கின்பத்தை நல்கும் தத்துவ மில்லாத) அலியினை - அலியை, மேவிய-(அவனை நற்புருஷனென்றும், அவனிடம் இன்பத்தை யடையலாமென்றும் நினைத்து) அடைந்து ஒரு சுகமும் பெறாதிருந்த, அரம்பையேகொல் - ஓர் அரம்பாஸ்திரீயோ? (வேறு பயனற்ற பொருள்களில் எதுவோ? இதற் கிணையான பயனற்ற பொருளைத் தெரிந்து கூறுதல் நம்மா லியலாது).

(வி-ரை) பொருளால் தான் நற்சுகங்களை யனுபவியாமலும், பிச்சை முதலிய தான தருமங்களைச் செய்யாமலு மிருப்பவனிடத்தில் சேர்ந்திருக்கும் பொருளானது பேடி கைவாள் அலியைச் சேர்ந்த அரம்பையின் அனுபவம் முதலியன போலப் பயனற்றதாம். இதற்குவமை இன்னதெனத் துணிந்து கூறாமல்பேடி கை வாளோ? அலியைச் சேர்ந்த அரம்பையோ? வேறெதுவோ? என ஐயப்படக் கூறினமையின் பயனற்ற பொருள்களில் இதற் குவமையாகத் தாழ்ந்த பொருள் இன்னதெனத் தெரிந்து கூற முடியாதென்பதும், இஃது எல்லாவற்றினும் தாழ்ந்த தென்பதும் துணியப்படும். பேடி, அலி யென்பன ஆணிலக்கணமும் பெண்ணிலக்கணமும் கலந்த வடிவமுள்ளவர்களைக் குறிக்கும் பெயர்களாம். இவ்வகை யிலக்கண முள்ள

வர்கள் மனிதர் வகுப்பினராகிய உயர்திணையிற் சார்ந்திருப்பினும் பொதுப்படக் கூறும்போது ஆண் பெண்ணுகிய இரு வகுப்பினுள் இன்ன வகுப்பெனத் துணிந்து கூப்பறடாமையால் அஃறிணையிற் சேர்த்துப் பேடுகள் அலிகள் என்று கூறப்படுவர். சிறப்பு நோக்கிக் கூறும்போது பெண் தன்மை குறைந்து ஆண் தன்மை மிகுந்திருப்ப வர்கள் உயர்திணை ஆண்பாலாகவும், ஆண் தன்மை குறைந்து பெண் தன்மை மிகுந்திருப்பவர்கள் உயர்திணைப் பெண்பாலாகவும் கூறப் படுவர். இங்ஙனங் கூறுவதில் பெண் தன்மை குறைந்து ஆண் தன் மை மிகுந்தவர்களை அலியென்றும், ஆண் தன்மை குறைந்து பெண் தன்மை மிகுந்தவர்களைப் பேடியென்றுங் கூறுதல் மரபு.

"பெண்மைவிட் டாணவா வுவபே டாண்பால்
ஆண்மைவிட் டல்ல தவாவுவ பெண்பால்
இருமையு மஃறிணை யன்னவு மாகும்."

(௩-பொரு-சூ-எ) என்னும் சூத்திரவுரையைப் பார்க்க. இதன்மூலம் இங்குக் கூறிய பேடிக்கும், அலிக்கு முள்ள வேறுபா டுணர்க. (எச)

இன்ன இன்ன விடத்திற்கு இன்னது இன்னது வனப்பா மென்பது

[நேரிசை வெண்பா]

படைதனக்கு யானை வனப்பாகும் பெண்ணின்
இடைதனக்கு நுண்மை வனப்பாம்—நடைதனக்குக்
கோடா மொழிவனப்புக் கோற்கதுவே சேவகர்க்கு
வாடாத வன்கண் வனப்பு.

(ப-ரை) படைதனக்கு - அரசர்களுடைய சேனைக்கு, யானை - யானைப்படைகள் அதிகமாகச் சேர்ந்திருத்தலே, வனப்பு ஆகும்-அழ காகும்; பெண்ணின் - ஸ்திரீயினுடைய, இடைதனக்கு-இடுப்புக்கு, நுண்மை - சிறுமையுடைத்தாயிருத்தலே, வனப்பாம்-அழகாம்; நடை

தனக்கு - மனிதருடைய நல்லொழுக்கத்திற்கு, கோடா - நடுவுநிலைமையினின்றுஞ் சாயாத, மொழி - வார்த்தைகளை யுடைத்தாயிருத்தலே, வனப்பு - அழகாம்; கோனுக்கு - மன்னவனுக்கும், அதுவே - அந்நன்மொழிகளை யுடைத்தாயிருத்தலே, வனப்பு - அழகாம்; சேவகர்க்கு-அரசரிடத்திற் சேவகத்தொழில் புரியும் வீரருக்கு, வாடாத - கெடாத, வன்கண்மை-வீரமுடைத்தா யிருத்தலே, வனப்பு-அழகாம்.

(வி - ரை) எத்தகைய படையும் யானைப்படை யில்லாவிடில் சிறப்படையமாட்டாது; பெண்ணின் இடையானது நூலைப்போன்று நுண்மையுடையதா யில்லாமல் பருத்திருந்தால் அவளுக்குச் சிறிதும் அழகேற்படமாட்டாது; நல்லொழுக்கத்திற்கும் மன்னர்க்கும் பாரபக்ஷ மில்லாத வார்த்தை அமைந்திராவிடின் சிறப்புண்டாக மாட்டாது; சேவகனுக்கு வீர மில்லாவிடின் அவனுடைய சேவகத் தொழில் பயனற்றதாம். ஆதலின், சேனைக்கு யானைப்படையும், பெண்ணிடைக்கு நுண்மையும், ஒழுக்கத்திற்கும் மன்னனுக்கும் பாரபக்ஷ மில்லாத வார்த்தையும், சேவகனுக்கு வீரமும் அவசியம் அமைந்திருத்தல்வேண்டும்.

கோனுக்கு என்பது உகரச் சாரியையும் ககரவொற்றுங் கெட்டு ணகரம் றகரமாய்க் கோற்கு என வந்தது. அதுவே என்பதற்குப் பின், மற்றையவற்றிற்போல வனப்பாம் என்னும் ஒருமொழி வருவித் துரைக்கப்பட்டது. வன்கண்மை என்பது மை விகுதி கெட்டு, 'வன்கண்' என நின்றது. (எரு)

இதுவுமது

கண்வனப்புக் கண்ணோட்டங் கால்வனப்புச் செல்லாமை
எண்வனப் பித்துணையா மென்றுரைத்தல்—பண்வனப்புக்
கேட்டார் நன்றென்றல் கிளர்வேந்தன் றன்னாடு
வாட்டானன் றென்றல் வனப்பு.

(ப - ரை) கண் - கண்ணிற்கு, வனப்பு - அழகானது, கண்ணோட்டம் - சகல ஜீவன்களிடத்தும் பக்ஷமுடைத்தாயிருத்தலாம் (அதாவது: கருணை நோக்கத்தோடு பொருந்தியிருத்தலாம்); கால் - பாதத்திற்கு, வனப்பு - அழகானது, செல்லாமை - யாசகத்தின்பொருட்டுப் பிறர் வாயிலினிடத்தே போகாதிருத்தலாம்; எண் - ஒருவர் கற்றுக்கொண்ட கணிதசாஸ்திரத்திற்கு, வனப்பு-அழகானது, (எவ்வகைக் கணக்குக்களேயும் கணக்கிட்டுத் தவருமல்) இத்துணையாம் என்று-இவ்வளவினவாமென்று, உரைத்தல்-தெளிவாகச் சொல்லுதலாம்; பண் - ஒருவர் பாடும் இசைப் பாட்டிற்கு, வனப்பு - அழகானது, கேட்டார் - அதனைக் கேட்டவர்கள், நன்று என்றல் - நன்ருயிருக்கின்றது என்று வியந்து கூறுதலாம்; கிளர் - (வெற்றி, புகழ் முதலியவற்ருல்) விளங்குகின்ற, வேந்தன் - அரசனுக்கு, வனப்பு- அழகாவது, தன் நாடு - இவன் தன்னுடைய நாட்டிலுள்ள குடிகளை, வாட்டான் - வருத்தமாட்டான், நன்று - (இவன் அவர்களுக்குச் செய்வதெல்லாம்) நன்மையே, என்றல்-என்று பலர் கூறிப் புகழ்தலேயாம்.

(வி - ரை) கருணை நோக்கத்தோடிருத்தலே கண் படைத்ததற்கழகாகும்; யாசகத்திற்குச் செல்லாதிருத்தலே கால்படைத்ததற் கழகாகும்; எந்தக் கணக்கையும் சரியாகக் கணக்கிட்டுச் சொல்லுந் திறமே கணித சாஸ்திரப் பயிற்சிக்கழகாகும்; கேட்டோர் மகிழ்ந்து புகழப் பாடுதலே இசைநூற்பயிற்சிக் கழகாகும்; குடிகளை வருத்தாமல் பலரும் 'இவ்வரசன் குடிகள்மீது மிக்க அன்புடையன்' என்று சொல்லும்படி அரசாளுதலே வேந்தனுக் கழகாம்.

கண்வனப்பு, கால்வனப்பு, எண்வனப்பு, பண்வனப்பு, வேர்தன்வனப்பு என்பன நான்காம் வேற்றுமைத் தொகைகள்; இவற்றில் தொக்கின்ற குவ்வுருபுகள் தகுதியுடைப் பொருளன. செல்லாமை எனப் பொதுப்படக் கூறியிருப்பினும் யாசகத்திற்குச் செல்லுதலே

எல்லாத் தொழிலினுந் தாழ்ந்ததாதலின், அதற்குச் செல்லாதிருத்த லே இங்குப் பாதத்திற் கழகெனக் குறிப்பிட்டுக் கூறப்பட்டது.

நாடு-இடவாகுபெயராய் அதிலுள்ள குடிகளை யுணர்த்திற்று.()

இன்ன இன்ன தன்மையுடையவர் அமிர்தத்திற் கோப்பாவ ரேன்பது

[நேரிசை வெண்பா]

கற்புடைய பெண்ணமிர்தங் கற்றடங்கி னனமிர்தம்
நற்புடைய நாடமிர்தம் நாட்டுக்கு—நற்புடைய
மேகமே சேர்கொடி வேந்தமிர்து சேவகனும்
ஆகவே செய்யி னமிர்து.

(ப-ரை) கற்பு உடைய-பதிவிரதாதன்மத்தையுடைய, பெண்-ஸ்திரீயானவள், அமிர்தம்-(கொண்ட கணவனுக்கு) அமுதம்போல இனிமை செய்பவளாவள்; கற்று - நல்ல சாஸ்திரங்களைப் பயின்று, அடங்கினன் - (அவற்றின் வழியிலே நடந்து) மனமடங்கினவன், அமிர்தம் - (உலகத்திலுள்ள அறிவுடையார்க்கு அமுதம்போல நலஞ் செய்பவனவன்; நற்பு உடைய - நன்மையையுடைய, நாடு - நாடா னது, அமிர்தம் - (அதில் வாழ்வோர்க்கு) அமுதம்போல இனிமை யைச் செய்வதாகும்; நாட்டுக்கு - அந் நாட்டினுக்கு, நற்பு உடைய - (தன்னுயிர்போல மன்னுயிரைக் காக்கும்) நன்மையையுடைய, மே கமே சேர் - மேகமண்டலம் வரை உயர்ந்து அதனிடத்திலேயே சேருகின்ற, கொடி - வெற்றிக்கொடி பொருந்திய, வேந்து - அர சன், அமிர்து - அமுதத்தைப்போல இனிமை செய்பவனுவான்; சேவகனும் - (அவ்வரசனிடத்தில் அமர்ந்திருக்கின்ற) பணிவிடைக் காரனுகிய வீரனும், ஆகவே - அவ்வரசன் வெற்றியினுல் நாள்தோ றும் வளர்ந்து செல்வமுடையவனுக வோங்கும்படியே, செய்யின் -

(அதற்கான வீரச் செயல்களைச்) செய்வானாயின், (அவ் வரசனுக்கு) அமிர்து - அமுதம்போல இனிமை செய்பவ னாவான்.

(வி - ரை) கற்புடையவள் எப்பொழுதும் கணவனுக் கினிமை செய்யக் கூடியவளாதலின், அவள் அவனுக்கு அமுதமாவாள். கற்றடங்கினவன் அறிவுடையோர்க் கினிமை செய்வானாதலின், அவன் அவர்களுக் கமுதமாம். வளமுடைய நாடு அதில் வாழுங் குடிகளுக் கினிமை செய்யக்கூடியதாதலின், அஃதவர்களுக் கமுதமாம். நற்குண முடைய அரசன் நாட்டிற் கினிமை செய்வானாதலின், அவன் அந் நாட்டிற் கமுதமாவன். வெற்றியை உண்டாக்கத்தக்க சேவகன் எப்பொழுதும் அரசனுக் கினிமை செய்யக்கூடியவனாதலின், அவன் அவ்வரசனுக் கமுதமாவன்.

நற்பு - நன்மையென்னும் பண்புப்பெயர் விகாரம்; இதில் பு - பண்புப்பெயர் விகுதி. மேகமே, ஆகவே என்பவற்றிலுள்ள ஏகாரங்கள் தேற்றப்பொருளன. அமிர்தம் என்பதற்குப் பின்னால், ஆவன் முதலிய பயனிலைச்சொற்கள், பொருட்பொருத்த நோக்கி வருவித்துரைக்கப்பட்டன. சேவகனும் - இதிலுள்ள உம்மை இறந்ததுதழுவிய எச்சப்பொருளது. (எஎ)

நல்லோர் நேயத்தால் இன்பமும், தீயோர் நேயத்தால் துன்பமு முண்டாமெனல்

[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

அருமையும் பெருமை தானு மறிந்துடன் படுவர் தம்மால்
இருமையு மொருமை யாகு மின்புறற் கேது வுண்டாம்
பரிவிலாச் சகுனி போலப் பண்புகெட் டவர்க டம்மால்
ஒருமையி னிரய மெய்து மேதுவே யுயரு மன்னே.

(ப - ரை) அருமையும்—ஒருவனுடைய அரிய தன்மையையும் (அதாவது: ஒருவன் நற்குண நற்செய்கைகளிற் சிறந்து அவனுடைய சிநேகம் பிறர்க்குக் கிடைத்த லருமையாயிருக்குந் தன்மையையும்), பெருமைதானும் - மாட்சிமையையும், அறிந்து - நன்றாக ஆராய்ந்து தெரிந்து, (தாமும் அவனுக் கிதஞ்செய்யும் உள்ளன்புடையராய்) உடன்படுவர் தம்மால் - அவனோடு சிநேகமாகப் பொருந்துவோரால், (அவனுக்கு) இருமையும் - இப்பிறப்பு, இதற்குப் பின்னடையும் நிலை (அதாவது மேலுலகம்) ஆகிய இரண்டிடங்களினும், ஒருமையாகும்-ஒரேதன்மை யுடையதாகும், இன்பு - இன்பத்தை, உறற்கு- அடைதற்கு, ஏது உண்டாம் - காரணமாகிய புண்ணிய செய்கைகள் மேன்மேலும் உண்டாகிக்கொண்டேயிருக்கும்; (துரியோதனனைக் கெடுத்தற்கு வஞ்சனையாக அவனோடு சிநேகங்கொண்டு அவனைச் சுற்றத்தோடுங் கெடுத்த) பரிவு இல்லா-உள்ளன்பில்லாத, சகுனி போல- சகுனியைப்போல, பண்பு கெட்டவர்கள்தம்மால் - குணம் கெட்டவர்களால், (அவர்கள் சிநேகங் கொண்டவனுக்கு) ஒருமையில்-இவ்வுலகத்தில் தோன்றியிருத்தலாகிய ஒரு பிறப்பில், நிரயம் எய்தும்- (மறுமையில்) நரகத்தை யடைதற்குரிய, ஏதுவே - காரணமான பாவச் செய்கைகளே, உயரும் - நாள்தோறும் வளர்ந்துகொண்டேயிருக்கும்.

(வி - ரை) ஒருவனுடைய அருமை பெருமைகளை யுணர்ந்து அவனோடு உள்ளன்போடு சிநேகஞ் செய்பவரால் அவனுக்கு இம்மை மறுமையாகிய இரண்டிடங்களினும் ஒருவிதமான இன்பத்தை யடைதற் கேதுவான புண்ணியச் செய்கைகளே யுண்டாகும்; சகுனியைப் போன்ற குடிகேடன் சிநேகத்தால் நரகத்தை யடைதற் கேதுவான பாவ கர்மங்களே யுண்டாகும்; ஆதலின், இம்மை மறுமைப் பயன்களை யடைய விரும்புவோர் சகுனியைப்போன்ற பாவிகளுடைய சிநேகத்தை விட்டு நீங்கி நல்லோருடைய நேயத்தைக் கொள்ளல்வேண்டும். (எஅ)

அடாவென்னுஞ் சொல்லை இன்சொல்லாக மதிக்கு மிடங்கள் இன்னவை யென்பது

[கலித்துறை]

கடாவி டுஞ்சமர்க் களத்தினு மடந்தைய ரிடத்தும்
விடாம லோதிய கவிதைபா ராட்டிய விடத்தும்
நடாவி டுஞ்சிறு பிள்ளைக ணவிலுமவ் விடத்தும்
அடாவெ னுஞ்சொலை யின்சொலா மதிப்பர்கற் றறிந்தோர்.

(ப-ரை) கற்று-உலகத்தில் நல்ல சாஸ்திரங்களை ஐயந்திரிபறப் படித்து, அறிந்தோர் - நன்மார்க்கங்களைத் தெரிந்த புத்திமான்கள், கடாவிடும் - வீரர் சேனைகளைச் செலுத்துகின்ற, சமர்க்களத்தினும் - போர்க்களத்திலும்; மடந்தையரிடத்தும் - தாம் ஆசையாகச் சேர்ந்துறவாடும் மங்கையரிடத்திலும்; விடாமல் - கற்பனை நயங்கள் நீங்காதிருக்கும்படி, ஓதிய-வித்வான்கள் சொல்லிய, கவிதை-செய்யுளால், பாராட்டிய இடத்தும் - புகழ்ந்து கூறியவிடத்திலும்; நடாவிடும்-நடமாடி விளையாடுகின்ற, சிறு பிள்ளைகள் - சின்னக் குழந்தைகள், நவிலும் - மழலை மொழிகளைக் கூறுகின்ற, அவ்விடத்தும்-அந்தவிடத்திலும், அடா எனும்-(அந்த வீரர்கள், ஆசைநாயகிகள், வித்வான்கள், குழந்தைகள் ஆகியவர்கள் தம்மை நோக்கி) அடா என்று சொல்லுகின்ற, சொல்லை - இழிந்த வார்த்தையை, இன் சொல்லா-இனிமையான சொல்லாக, மதிப்பர் - எண்ணுவார்கள்.

(வி - ரை) போர்க்களத்தில் அறிவுடையோராகிய வீரர்கள் உயர்வு தாழ்வு கருதாமல் ஒருவரையொருவர் நோக்கி அடா வென்று கூறுதலும், அம் மொழியை இனிய வார்த்தையாகக் கொள்ளுதலும் இயற்கை. இதைப்போலவே அறிவுடையோர், மடந்தையரிடத்துச் சரசமாடும்போது அவர்கள் அடாவென்று சொல்லுவதை யின்பமாகக் கொள்ளுதலும், வித்வான்கள் கவிபாடிப் புகழும்போது அடாவென்று சொல்லுதலை இன்பமாகக் கொள்ளுதலும், பாலர்

கள் மழலை வார்த்தை யாடும்போது அடாவென்று சொல்லுதலுக்கு மகிழ்தலும் இயல்பு. 'கடாவிடுஞ் சமர்க்களம்' என்பதற்கு, 'ஆட்டுக்கடாக்களைச் சண்டைக்கு விடும் போர்க்களம்' என்று பொருள் கூறுவாரு முண்டு; இஃதத்துணைச் சிறப்பின்று. இவ் விவேகசிந்தாமணி முதற்பாகத்திலுள்ள, 'கதலி வீரர் களத்திடை வையினும்' என்னுஞ் செய்யுட் கருத்தையே இச் செய்யுட் கருத்தும் பெரும்பான்மையும் தழுவி நிற்றலின் இதற்கு, 'வீரர்கள் சேனையைச் செலுத்திப் போர் செய்யத்தக்க யுத்தகளம்' எனப் பொரு ளுரைத்தலே சிறப்பாம்.

கவிதை பாராட்டிய-மூன்றும் வேற்றுமைத்தொகை. நடவிடும் என்பது கடாவிடும் என நீட்டல் விகாரம் பெற்றுவந்தது. நடவு - தொழிற்பெயர்; இதில் வு-தொழிற்பெயர் விகுதி; இதனோடு இடும் என்னும் துணைவினை சேர்ந்து நடத்தலைச் செய்யும் (அதாவது: நடந்து விளையாடும்) எனப் பொருள்பட்டது. 'கடாவிடும்' என்பதும் இத்தன்மையதே. (எக)

எவ்வித இனிமையான பாட்டைப் பாடினும் கல்வி யருமை யறியாதார் அதற்குத் தக்க சன்மானஞ் செய்யா ரென்பது

[கட்டளைக் கலித்துறை]

எண்ணான்கு முப்பத் திரண்டுபற் காட்டி யிசையுடனே
பண்ணாகச் செந்தமிழ்ப் பாடிவந் தாலுமிப் பாரிலுள்ளோர்
அண்ணாந்து கேட்ப ரழகழ கென்ப ரதன்பிறகு
சுண்ணாம்பு பட்ட விலையுங் கொடார்கவி சொன்னவர்க்கே.

(ப - ரை) (பிரயாசையுடன் முறைப்படி தமிழைக் கற்ற வித்வான்கள்) எண் நான்கு-எட்டு நான்காகிய, முப்பத்திரண்டு பல்-முப்பத்திரண் டெண்ணுள்ள பற்களையும், காட்டி - வெளியே தெரியும்

படி திறந்து காட்டி, (அதாவது பற்கள் முழுமையும் வெளியே தெரியும்படி சந்தோஷத்துடன் சிரித்துக்கொண்டு) இசையுடனே-இலக்கணப் பொருத்தத்துடனே, பண்ணாக-இசைப்பாடலாக, செந்தமிழ்-செவ்விய தமிழ்ச் செய்யுட்களை, பாடிவந்தாலும்-தங்கள்மீது புகழ்ச்சியாகப் பாடிக்கொண்டு வந்து சொன்னாலும், இப் பாரிலுள்ளோர் - இம் மண்ணுலகத்திலுள்ள தமிழருமை யறியாதார், (அச் செய்யுட்களுக்குத் தக்க சன்மானங் கொடுக்கச் சிறிதும் மனம் பொருந்தாதவராய் அச்செய்யுட்களை மட்டும் மிகவும் பிரியமாய்க் கேட்பவர்போல) அண்ணாந்து-முகத்தை மேலே தூக்கி (அவ் வித்வான்கள் முகத்தைப் பார்த்து) கேட்பர்-செவி சாய்த்து அச் செய்யுட்களைக் கேட்டு மகிழ்வார்கள்; அழகு அழகு என்பர்-(இச் செய்யுட்களின் கற்பனை) அழகாயிருக்கின்றது! அழகாயிருக்கின்றது!! என்று வீண்புகழ்ச்சி கூறுவர்; அதன் பிறகு-அப்படிப் பிரிய முள்ளவர்போல நடித்து வீண் புகழ்ச்சி செய்த பின்னர், கவி சொன்னவர்க்கு - அச் செய்யுளைக் கூறிய அவ் வித்வான்களுக்கு, சுண்ணாம்பு பட்ட இலையும் - சுண்ணாம்பு வைக்கப் பட்டிருந்த வெற்றிலையும், கொடார் - ஈயமாட்டார்கள், (ஆதலால், இத்தகையர்மீது கவி கூறலாகாது).

(வி - ரை) இச் செய்யுள், வித்வான்களை மதித்து அவர்க்குப் பொருளீயாத கருமிகளைக் குறித்து ஒருவராற் செய்யப்பட்டது. இவர் இத்தகைய பலரிடஞ் சென்று கஷ்டப்பட்டு அக்கஷ்டஞ் சகிக்காமையால் இச் செய்யுளைக் கூறினர்போலும். இவர் தமக்குண்டான வயிற்றெரிச்சலால் சொற்பொருளையு நோக்காது எல்லோரையுங் குறிக்கும்படி, 'இப் பாரிலுள்ளோர்' எனப் பொதுப்படக் கூறிவிட்டனர். எனினும், இச் சொல் ஈயாத கருமிகளையே குறிக்கும். இங்ஙனம் கேட்டவர்களை நிந்தித்துக் கூறும்போது, 'வித்வான்கள் தாங்க ளடைந்திருக்கும் சிரமத்தால், 'உலகத்திலுள்ளோர்' 'மனிதர்' என்று பொதுப்படக் கூறிவிடுதலும், உரைசெய்வோர்: கெட்ட

சுபாவ முடையவர்களை மாத்திரம் பிரித்துக் கூறுதலும் இயற்கை. இதனை இன்னும் இதுபோன்ற பழைய தனிச் செய்யுட்களா லுணர லாம். இங்ஙனம் பழைய வித்வான்களாற் பாடப்பெற்ற பல செய் யுட்க ளிருக்கவும், சிலர், கவிகளில் கெட்டவர்களை சுட்டிக் கூறி நிந்தித்தலுங் கூடாதென அங்ஙனம் பாடியவர்களை நிந்தித்துத் திரி வர்; இவர்கள் என்ன நியாயம்பற்றி இங்ஙனங் கூறுகின்றனரோ? அறிவுடையோர்க்கு இவர்களுடைய உள்ளக் கருத்து இன்னதென விளங்காமற் போகாது. கல்வியாளர் கெட்ட வியல்பினரை நிந்தித் துக் கூறுவதால் அவர்கள் நல்வழிக்குத் திரும்ப ஏதுவுண்டா மென்ப தை, சுயநலங் கருதித் தீயாரைக் கொண்டாடு மியல்பினையுடைய இவர் உணரார்போலும். இச் செய்யுட் கருத்தால் கவி கேட்டும் பொரு ளீயாதவர்மேற் கவி கூறலாகா தென்பது விளங்கும். ஆதலின். கவி பாடுவோர் இத்தகையர்மீது செய்யுட் கூறுமல், நற்குண நற்செய்கை யுடைய பிரபுக்கள்மீது கவி சொல்லவேண்டும்.

எண்ணான்கு முப்பத்திரண்டு - பண்புத் தொகை. சுண்ணாம்பு வைத்த வெற்றிலையைப் பெரும்பான்மையும் மனிதர் உபயோகிப் பது வழக்கமின்று; அங்ஙனம் உபயோகமற்ற வெற்றிலையுங் கொடு க்கமாட்டார்க ளெனவே அவர்களுடைய ஈயாமைக் குணத்தின் விசேஷம் நன்கு விளங்கிற்று. இசை - முதனிலைத் தொழிற்பெயர். இலையும்-இதிலுள்ள உம்மை இழிவுசிறப்புப் பொருளது. (அ0)

நாயகனை வஞ்சித்து அன்னியனைச் சேரும் மாதிற்குப்
பல விதத்திலும் துன்பமே யென்பது

[எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

மற்றொரு வனைச்சேர் மா திறந் தானும்
வசைநிற்கு முலகமுள் ளளவும்
சுற்றமும் வாழ்வுந் துணையுமே நீங்குஞ்
சோரநா யகனுமே மதியான்

பெற்றசந் ததியு மிழிவுறு மாண்ட
பின்னுறுங் கொடுவெறி நரகம்
சற்றுநே ரங்கொள் சுகத்தினல் விளையுந்
தன்மையீ தரிவையீ ருணர்வீர்.

(ப-ரை) அரிவையீர்-பெண்களே!, (இவ்வுலகத்தில் தன் நாய கனை வஞ்சித்து அவனிருக்க) மற்றொருவனை-வேறொரு சோர புருஷனை, சேர்-(கணவனுக்குத் தெரியாமல்) கூடுகின்ற, மாது-பெண்ணானவள், இறந்தாலும் - மரணமடைந்துவிட்டாலும், வசை-(அவள் இங்ஙனம் அன்னியனைச் சேர்ந்த இழிவா லுண்டாகிய) பழிமொழி யானது, உலகம் உள்ள அளவும் - இவ்வுலக மிருக்கும் வரையிலும், நிற்கும் - மறையாமல் நிலைபெறும்; (பின்னும் இத் தோஷத்தால்) சுற்றமும் - உறவும், வாழ்வும் - சுக வாழ்க்கையும், துணையும் - உதவியும், நீங்கும்-அவளுக் கில்லாமற்போம்; சோர நாயகனும் - அவளைக் கூடிய கள்ளப்புருஷனும், மதியான்-அவளைச் சிறிது மதித்து அவள் மீது அன்பைச் செலுத்தமாட்டான்; (அவள் அங்ஙனம் சோரநாயகனைக் கூடிப் பிள்ளையைப் பெற்றாலும்) பெற்ற-அவ்வா றீன்ற, சந்ததியும் - பிள்ளையும், இழிவு உறும் - (சோர சேர்க்கையால் பிறந்த பிள்ளையென்று பலர் கூறுதலாகிய) இகழ்ச்சியை, (அல்லது, தன் தாயின் சொந்த நாயகனுக்கு ஈமக் கடனாற்ற யோக்கிய மில்லாமற் போதலாகிய) இழிவை அடையும்; மாண்டபின்-அவள் இறந்த பிறகு, (அவளுக்கு) கொடு - கொடுமையாகிய, வெறி - அச்சத்தையுடைய, நரகம் - நரகமானது, உறும்-வந்து பொருந்தும்; சற்று நேரம்-சிறிது நேரம், கொள் - அவள் அடைகின்ற, சுகத்தினல்-சோரநாயக சேர்க்கைச்சுகத்தினல், விளையும்-அவளுக்கு உண்டாகும், தன்மை-இயல்பு, ஈது - இத் துன்பங்களை யனுபவித்தலாகிய இதுவாம்; உணர்வீர்-நீங்கள் அறிந்து ஒழுக்கத்தைக் கைக்கொள்வீராக.

(வி - ரை) புருஷ னிருக்க, அன்னியனைச் சேரும் மாதுச் செய்தும் வசையானது, மற்ற வசைகளிலும் அதிகப்பட்டதாதலால், அஃது அவளிறந்துவிட்டாலும் உலக முள்ளளவும் அழியாது நிலை பெற்றிருக்கும். இன்னும் அவள் உயிருட னிருக்கும்போது, சுற்றத்தார் அவளோடு சேர்ந்திருத்தல் இழிவென்று நினைத்து அவளைத் தங்கள் ஜாதியின்றும் நீக்கிவிடுவார்கள்; அவளிடத்தில் எப்பொழுதும் வியபிசாரத்தால் பல கலகங்கள் விளைந்துகொண்டே யிருக்குமாதலால் அவளுக்குச் சுகமான வாழ்வு ஏற்படவேமாட்டாது; அவளுக்கு ஆபத்து நேர்ந்தகாலத்தில் எவரும் உதவி செய்யமாட்டார்கள்; இவர்கள் இப்படி யிருந்தாலும் அவளோடு கூடிய சோரநாயகனேனும் அவளிடத் தன்புடையனு யிருப்பானேவெனில், அவனும் அங்ஙனம் அன்புடையனு யிருக்கமாட்டான்; 'இவள் நம்மைச் சேர்ந்ததுபோலவே இன்னும் பலரையுங் கூடுவாள்' என்று சந்தேகமும் அதிருப்தியுங் கொண்டிருப்பான். அவள் சோரநாயகரைக் கூடுவதனல் சந்ததிகளைப்பெறினும் அச்சந்ததிகளும் மேன்மை யடையமாட்டார்; அவளை மணந்த நாயகனுக்கு ஈமக்கடன் முதலியன செய்ய யோக்கியமற்று, 'சோரநாயகனுக்குப் பிறந்த பிள்ளைகள்' என்று பலர் கூறும் இழிவை யடைவர். அவள் மாண்ட பின்னரேனும் சுகத்தை யடைவாளோவெனில், அப்பொழுதும் ஒரு சுகத்தையு மடையமாட்டாள்; கொடுமையாகிய நரகத்தையே அடைவள். அற்ப சுகத்தை அவள் இச்சிப்பதால் இத்தனை தீமைகளும் அவளிடத்துச் சேரும். ஆதலால், ஒவ்வொரு பெண்களும் இதனை நன்குணர்ந்து கற்பைக் கைவிடா தொழுகல்வேண்டும். அறிவைய ரெல்லோரும் இதனைத் தேர்ந்து ஒழுங்கான மார்க்கத்தில் நடக்கவேண்டுமென்பதுபற்றியே இச்செய்யுள் அறிவையரை விளித்துக் கூறியதாகச் செய்யப்பட்டிருக்கின்றது. (அக)

அடக்க முதலியன இல்லாதவளோடு கணவர் கூடி வாழ்தல் பிடாரியோடு கூடி வாழ்தற்கு நேரென்பது

[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

அடுத்தமனை தொறுந்திரிவாள் கணவனுக்கு
முன்னுண்பா ளடக்க மில்லாள்
கடுத்தமொழி பேசிடுவாள் சிறுதனந்தே
டுவளிவளைக் கலந்து வாழ்தல்
எடுத்தவிடைக் கொடியாரே! தண்டலையா
ரேயெவர்க்கு மின்ப மாகக்
குடித்தனமே செயவேண்டிப் பிடாரிதனைப்
பெண்வைத்துக் கொண்ட தாமே.

(ப - ரை) எடுத்த - மேலே தூக்கிப் பிடித்த, விடைக் கொடியாரே - விருஷபக் கொடியை யுடையவரே!, தண்டலையாரே - தண்டலையில் வாசஞ்செய்யுங் கடவுளே!, (உலகத்தில்) அடுத்த மனை தொறும் திரிவாள் - (தன் வீட்டை விட்டு வெளியேறிப்) பக்கத்து வீடுகளிலெல்லாஞ் சென்று வீண் வார்த்தை பேசிக்கொண்டு திரிபவளும்; கணவனுக்கு முன் - புருஷன் சாப்பிடாமலிருக்க அவனுக்கு முன்னே, உண்பாள் - (தன் வயிற்றையே பெரிதாக நினைத்து) போசன முண்பவளும்; அடக்கம் இல்லாள்-பொறுமை யில்லாதவளும்; கடுத்த மொழி-கோப மிகுந்த வார்த்தைகளை, பேசிடுவாள்-(கணவனுக்கு முன்னே நின்று அஞ்சாமற்) பேசுகிறவளும்; சிறு தனம் தேடுவள் - (புருஷனுடைய கஷ்டத்தை நினையாமல் அவனுடைய சொற்ப சம்பாத்தியத்திலும் அவனறியாதபடி) சிறிது பொருளைக் கவர்ந்து தனக்கென இரகசியமாகச் சேர்த்துவைப்பவளும், (ஆகிய) இவளை-இத்தகைய பெண்ணை, கலந்து வாழ்தல்-மனைவியாக மணந்து கூடி வாழுதல், எவர்க்கும்-எப்பேர்ப்பட்டவருக்கும், (எத்தன்மையதாகுமெனில்) இன்பம் ஆக-சுக முண்டாகும்படி,

குடித்தனம்செய்யவேண்டி - இல்வாழ்க்கை செய்ய விரும்பி, பிடாரி தனை-பேய்க் கூட்டங்களுக்குத் தலைவியாகிய ஒரு பத்திரகாளியை, பெண்டு வைத்துக்கொண்டது ஆம் - மனைவியாகக் கலியாணஞ் செய்து வைத்துக்கொண்டது போலாம்.

(வி - ரை) ஒருவனுக் கமைந்த மனைவி, தன் குடும்பத்தைக் கவனியாமல் அடுத்த வீடுகள்தோறுஞ் சென்று வீண் வார்த்தை வளர்ப்பவளாயும், அவனுக்கு முன்னே உண்பவளாயும், அடக்க மில்லாதவளாயும், கோபச் சொற்களைப் பேசுகிறவளாயும், குடித்தனங் கெடும்படி சிறுதேட்டுத் தேடுகிறவளாயு மிருப்பாளாயின் இவளால் பலவிதத்திலும் அக் கணவனுக்குத் துன்பமே அதிகரித்துக்கொண்டிருக்குமாகையால் இவளோடு அவன் கூடிவாழ்தல் ஒரு பிடாரியோடு கூடி வாழ்வதற்கு நிகராம். பிடாரி-காளி; இவள் ஒருவகைச் சக்தியாயினும் மிகவுங் கொடுஞ் செய்கை யுடையவளாதலின் அச் செய்கை நோக்கி, இச் செய்யுளை யியற்றினோர் அவளை, கொடுஞ் சுபாவமுடைய மனைவிக் குவமையாக எடுத்துக் கூறினர் இச் செய்யுள் தண்டலையார் சதகத்திலுள்ளது. பெண்களெல்லோரும் இதனை நோக்கி நல்வழிப்பட் டுய்யவேண்டுமென்னுங் கருத்துடன் தண்டலையாரை முன்னிலையாக்கி இச் செய்யுள் கூறப்பட்டிருக்கிறது. ஆதலின், ஒவ்வொரு பெண்களும் இச் செய்யுட் கருத்தை யுணர்ந்து இதிற் சொல்லப்பட்டிருக்கும் இழி குணங்களை நீக்கி நற்குணங்களைக் கைக்கொள்வாராக. தொறும் - தொழில், இடங்களின் பன்மைப் பொருளைத் தரு மோரிடைச்சொல்; இங்கே வீடுகளின் பன்மையை யுணர்த்திற்று. (அஉ)

பொருளின்மேல் அபிமானம் வைப்பதால் அது கூட வராதென்பது

[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

என்பொருளென் பொருளென்று சீவன்விடு மனமேயொன்
றியம்பக் கேளாய்
உன்பொருளா னலதன்மே லுன்னுமம் வரைந்துளதோ
வுன்று னேடும்

முன்பிறந்து வளர்ந்ததுகொ லினியுனைவிட் டகலாதோ
முதிர்ந்து நீதான்
பின்பிறக்கும் போததுவுங் கூடவிறந் திடுங்கொல்லோ
பேசு வாயே.

(ப - ரை) (மனமே! உலகத்தில் பொருளானது நிலையற்றதாயிருந்தும் அஃது எப்பொழுதும் உன்னைவிட் டகலமாட்டாதென்று நினைத்து அதன்மீது மிக்க அபிமானம் வைத்து நிலையான முத்தியைத் தேடுதற்குரிய வழிகளை மறந்துவிட்டனை; இறந்துபோகுங் காலத்தும் இப் பொருளை மறக்கமாட்டாய்; அங்ஙனம் முடிவுகாலத்திலும் மறவாமல் அப் பொருளை) என் பொருள் என் பொருள் என்று-என்னுடைய திரவியம் என்னுடைய திரவியம் என்று நினைத்துக் கொண்டு, சீவன் விடும்-உயிரை விடுகின்ற, மனமே-எனதுள்ளமே!, ஒன்று இயம்பக் கேளாய் - நான் உனக்கொரு காரியம் இப்போது சொல்லக் கேட்பாயாக!, (நீ நினைக்கின்றபடி அப் பொருளானது) உன் பொருள் ஆனால் - உன்னுடைய பொருளாயிருப்பது மெய்யானால், அதன்மேல்-அப் பொருளின்மேல், உன் நாமம்-உன்னுடைய பெயரானது, வரைந்துளதோ - எழுதப்பட் டிருக்கின்றதோ?, (இல்லை.) உன்றனோடும் - உன்னுடனே, (அது) முன் பிறந்து - முன்னே தோன்றி, வளர்ந்தது கொல் - வளர்ந்ததோ? (இல்லை.) இனி - இனிமேல், உன்னைவிட்டு அகலாதோ-உன்னைவிட்டு நீங்கமாட்டாதோ? (இல்லை.) நீ முதிர்ந்து-நீ கிழத்தன்மை யடைந்து, பின்பு - பின்னால், இறக்கும்போது - மரணமெய்துஞ் சமயத்தில், அதுவும் - அப் பொருளும், கூட-உன்னுடனே, இறந்திடுங் கொல்லோ-மரண மடையுமோ? (இல்லை.) பேசுவாய்-(அது நான் சொன்னதற்கு மாற்றமாக இருப்பதுண்டானால் அதனை யெனக்குச்) சொல்வாயாக! (மேற் கூறியபடி அஃது உனக்கு எவ்விதத்தாலும் சொந்தமாகா தாதலால் அதன்மேலிருக்கும் அபிமானத்தை விட்டு நிலையான ஞானத்தைத் தேடுதலே நலமாம்).

(வி-ரை) பொருளானது இவ் வுலக வின்பத்திற் கின்றியமை யாததெனினும், அஃது எப்பொழுதும் ஒருவனிடத்தே நிற்பது அருமையாகலானும், அங்ஙன நிற்பினும் மரணகாலத்திலேனும் நீங்குமாதலானும், அதனைப் பெற்ருேர் அதன்மீது மிகுந்த பற்று வைத்து ஞானமார்க்கத்தை மறந்துவிடாமல் தாமரையிலைத் தண் ணீர்போல அதனிடத்து ஒட்டியு மொட்டாமலு மிருந்து, அஃதிருக் கும்போதே அதன்மூலம் அறத்தைத் தேடிக்கொள்ளவேண்டும்; அதனையே பெரிதாக நினைத்து ஒருவருக்கு மீயாமல் கட்டிக் காத்துக் கொண்டிருத்தல் மடமையாம்.

"கில்லாத வற்றை நிலையின வென் றுணரும்
புல்லறி வாண்மை கடை."

"கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று."

என்னுந் திருக்குறட் செய்யுட்களும் இதனை வலியுறுத்துவனவாம். இங்ஙனம் கூறியதனுல் பொருளைத் தேடுதற்கும் முயற்சி செய்ய லாகாதென்பது கருத்தன்று; பொருளைத் தேடி அதன்மீது பேரா சை வைத்து அதனை நல்வழியிற் செலவிடாமல் புதைத்து வைக்க லாகாதென்பதும், அதன்மூலம் தானதருமங்களைச் செய்து முத்தி க்கு வழியைத் தேடவேண்டு மென்பதுமே இச் செய்யுட் கருத்தாம். இதனைப் படிக்கும் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் மனத்தை நோக்கி இங்ஙனங் கூறி அதனை நல்வழிக்குத் திருப்பவேண்டு மென் பதுபற்றியே இச் செய்யுள் மனத்தை விளித்துச் சொன்னதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆதலின், இதனை யுணரும் அறிவாளர் ஒவ் வொருவரும் இதன் கருத்தின்படி நடந்து நற்பதவி பெறுவாராக.

'வரைந்துளதோ, அகலாதோ' என்பவற்றி னீற்றி லுள்ள ஓகார விடைச்சொல்லும், 'வளர்ந்ததுகொல், இறந்திடுங்கொல்' என்பவற்றி

னீற்றிலுள்ள சொல் என்னும் வினைப்பொருளைத்தரு மிடைச் சொல்லும் இங்கு எதிர்மறைப் பொருளில் வந்தன. (அ௩)

இன்னவர்க்கு மரியாதை செய்தல் தகும், இன்னவர்க்கு மரியாதை செய்தல் தகா தென்பது

[கலி விருத்தம்]

இறையவன் சேவகர்க் கெழுத லில்லவட்
கறைகழற் கணவன்மா ணாக்கர்க் காரியன்
முறையல மாமர்க்கு மருகர் மூப்பினும்
மறைதரு முறையினால் வணங்கல் வேண்டுமால்.

(ப-ரை) இறையவன் - அரசனா யிருப்பவன் (வயதிற் சிறியவனாயினும்), சேவகர்க்கு-தன்னிடத்தே வேலை செய்யும் பணிவிடைக்காரனுக்கு, (அவன் வயதில் முதிர்ந்தவனாயிருந்தாலும்) எழுதல்-எழுந்து மரியாதை செய்தலும்; இல்லவட்கு-மனைவிக்கு, (அவன் மூத்தவனாயிருந்தாலும் வேறெவ்வகைச் சிறப்பினை யுடையவனா யிருந்தாலும்) அறை - சப்திக்கின்ற, கழல் - வீரகண்டையை யுடைய, கணவன் - புருஷன், எழுதல் - எழுந்து மரியாதை செய்தலும்; மாணாக்கர்க்கு - சீடர்களுக்கு, (அவர்கள் வயதில் மூத்தவர்களாயிருந்தாலும்) ஆரியன் - குருவாயிருப்பவன், எழுதல் - எழுந்து மரியாதை செய்தலும், முறை அல்ல-(சாஸ்திர விதியின்படி) ஒழுங்கன்று. மாமர்க்கு-மாமன்மார்களா யிருப்பவர்களுக்கு, மருகர் - மருமக்கண்மார், மூப்பினும்-மூப்புற்றிருந்தாலும், (அவர் அந்த மாமன்மார்களை) மறை தரு-வேத சாஸ்திரங்கள் தருகின்ற (அதாவது வேத சாஸ்திரங்களிற் சொல்லுகிற), முறையினால் - கிரமத்தோடு, வணங்கல்வேண்டும் - வணங்கி மரியாதை செய்தல்வேண்டும்.

(வி-ரை) சேவகன் வயதின் முதிர்ந்தவனாயிருந்தாலும் அவனை யாளுமரசன் அவனுக்கெழுந்து மரியாதை செய்யலாகாது; அவ்வா

றே மனைவிக்கு நாயகனும், மாணாக்கர்க் காசிரியனும் வணக்கஞ் செய்தல் கூடாதாம். மருமக்கண்மார்களா யிருப்பவர்கள் வயதின் மீறிய வர்களாயிருந்தாலும் மாமன்மார்களுக்கு வணக்கஞ் செய்யவேண்டும்; இது சாஸ்திர விதியாம், 'எழுதல்' என்பது மற்றைய விரண்டிடங் கட்குங் கூட்டப்பட்டது. (அச)

பகைக்கத் தகாதவர் இன்னவரென்பது

[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

மன்னவன் கணக்கன் பார்ப்பான் வலுவுள்ளோன் மந்திர வாதி
பொன்னுள வன்கு ருக்கள் புலவன்பண் டிதன மைச்சன்
அன்னஞ்செய் திடுவோ னெங்கு மடங்காத துட்ட னாமிப்
பன்னிரு பேரோ டென்றும் பகைகன விலுங்கூ டாதே.

(ப-ரை) மன்னவன் - அரசன், கணக்கன்-கிராமக்கருணீகன், பார்ப்பான்-வேதியன், வலு உள்ளோன்-மிக்க வல்லமை பொருந்திய வன், மந்திரவாதி-மந்திரவித்தைக்காரன், பொன் உள்ளவன் - மிகுந்த திரவிய முடையவன், குருக்கள்-ஆசான், புலவன் - வித்துவான், பண்டிதன் - வைத்தியன், அமைச்சன் - மந்திரி, அன்னம் செய்திடுவோன் - சோறு சமைக்குஞ் சமையற்காரன், எங்கும் - எவ்விடத்தும், அடங்காத - பணியாத, துட்டன் - தீயன், ஆம்-ஆகிய, இப்பன்னிரு பேரோடு-இந்தப் பன்னிரண்டு பேர்களுடனே, பகை-பகை கொள்ளுதல், (எவர்க்கும்)என்றும்-எப்பொழுதும், கனவிலும்-சொப்பனத்திலும், கூடாது - ஆகாது.

(வி-ரை) உலகத்தில் எவரேனும் மன்னனோடு பகை கொண்டால் அவனால் எதுவும் இலகுவாகச் செய்யமுடியுமாகையால் அவனால் அங்ஙனம் பகைத்தவர்க்கு விரைவிற் கேடு சம்பவிக்கும். கிராமக் கணக்கனோடு பகை கொண்டால் அவன் சமயம் பார்த்துப் பயிரிடாத நிலங்களைப் பயிரிட்டவையாகச் சேர்த்தும், குறைந்த வரியுள்ளவை

னுக்கு அதிக வரி யேற்படுத்தியும், வாரம் பிரித்தல் முதலிய விஷயங்களில் நஷ்ட முண்டாகும்படிப் பல மாறுதல்களைச் செய்தும், பொய்க்கணக் கெழுதி எல்லோருக்கும் நம்பிக்கையாகக் காட்டி அங்ஙனம் பகைத்தவருடைய குடியைக் கெடுத்துவிடுவான். பார்ப்பானோடு பகைகொள்ளின் அவன் மற்றையரைப்போல் அதனை விரைவில் மறந்துவிடாமல் மனத்தில் வைத்திருந்து எந்தச் சமயத்திலாவது அங்ஙனம் பகைத்தவரை ஆபத்தான விஷயங்களிற் சிக்க வைத்துக் கெடுத்துவிடுவான்; அல்லது சாபம் முதலிய விடுத்லாற் கெடுப்பான் ஒருவர் தம்மினும் வலியானோடு பகை கொண்டால் அவன் அவரை எளிதில் வெல்வானாதலின் அதன் மூலம் அவர்க்குக் கேடு சம்பவிக்கும். மந்திரவாதியுடனே ஒருவர் பகைத்துக்கொள்ளின் அவன் மாரணவித்தை முதலியவைகளால் அவரை நாசஞ் செய்துவிடுவான். மிக்க திரவிய முள்ளவனோ டொருவ ரெதிர்த்தால் அவன் அப்பொருளின் சகாயத்தால் எந்த வழியினாலாவது அவரை விரைவிற் கெடுத்துவிடுவான். குருக்களோடு ஒருவர் பகை கொண்டால் அவனின்ஞ் சாபத்தாலவர் கெடுவர். புலவனோ டொருவர் பகை கொண்டால் அவன் பாடும் வசையினா லவர் கெடுவர். வைத்தியனோடு ஒருவர் பகை கொண்டால் அவன் அந்தப் பகையை மனத்தில் வைத்திருந்து ஏதேனும் நோய்கொண்ட சமயத்தில் சரியானபடி சிகிச்சை செய்வதற் கிணங்காமல் அவரைக் கெடுத்துவிடுவான். மந்திரியோ டொருவர் விரோதங் கொண்டால் அவன் மிகவுந் தந்திரமுடையவனாதலின் எந்த வழியினாலாவது சூக்ஷுமமாக அவ்வரைக் கெடுத்துவிடுவான். சமையற்காரனோ டொருவர் பகைத்துக்கொள்ளின் அவன் உணவு முதலியவைகளைக் கெடுப்பதனால் அவர்க்குக் கேடு செய்வான். அடங்காத துஷ்டனோடு ஒருவர் பகைத்துக்கொண்டால் அவன் எதற்கு மஞ்சாதவனாகையால் மிக்க துணிவோடு அவர்க்குப் பல தீங்குகளைச் செய்துவிடுவான். ஆதலால், இவர்களோடு எவரும் பகை கொள்ள லாகாது. (அரு)

மதியாளரோடு மதியீனர் உறவாகா ரென்பது

[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

புலியொடு புல்வாய் தானும் பொருந்தியே யுறவா னாலும்
எலியொடு பூனை கூடி யிசைந்துநன் குறவா னாலும்
நலமிகு சர்ப்பந் தேரை நன்றதா யுறவா னாலும்
மலமின்மே லவரோ டற்ப மதியின ருறவா காரே.

(ப - ரை) புலியொடு - வியாக்கிரத்துடனே, புல்வாய்-(அதற்கெப்போதும் பகையாகிய) கலைமான், பொருந்தி-சேர்ந்து, உறவானாலும்-சிநேகமானாலும்; எலியோடு - எலியுடனே, பூனை - (அதற்கெப்போதும் விரோதமாகிய) இற்புலியானது, கூடி-சேர்ந்து, இசைந்து-அதன் மனத்திற் கிணங்கி, நன்கு-நன்றாக, உறவானாலும்-நேயமானாலும்; நலம் மிகு - அழகு மிகுந்த, சர்ப்பம்-அரவத்துடனே, தேரை - (அதற்கு மிக்க பகையாகிய) தவளையானது, நன்றதாய் - நன்மையுடையதாகி, உறவானாலும்-நேயமானாலும்; மலம் இல் - குற்றமற்ற, மேலவரோடு - பெரியாரோடு, அற்ப மதியினர் - சின்ன அறிவையுடைய மூடர், உறவாகார் - எப்போதும் எவ்வகையினும் சிநேகமாகமாட்டார்.

(வி - ரை) மானோடு எக்காலத்தும் பகைகொண்டிருக்கும் புலியும் ஒரு சமயம் அதனிடத்துச் சிநேகங் கொள்ளினுங் கொள்ளும்; எலியுடனே பகைகொண்டிருக்கும் பூனையும் ஒருசமயம் அதனிடத்துச் சிநேகங் கொள்ளினுங் கொள்ளும்; தேரையுடனே பகைகொண்டிருக்கும் சர்ப்பமும் ஒரு சமயம் அதனிடத்துச் சிநேகங் கொள்ளினுங் கொள்ளும்; மதியீனர் மாத்திரம் அறிவுடையாரோடு எப்போதும் உறவாகமாட்டார்கள்; அவர்க்குத் தகுதியான அறிவீனரையே கொண்டாடித் திரிவர்.

'புல்வாய்தானும்' என்பதில் தான், உம் அசைகள். (அகூ)

இன்ன காரணங்களால் வியாதி தோன்று மென்பது

[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

தன்னைத்தான் பேணு தாலுஞ் சரீரத்தின் தண்டிப் பாலும்
பின்னுற்ற விசாரத் தாலும் பின்சல மலத்தி னாலும்
அன்னத்தை யொறுப்ப தாலு மரையுடன் முழுக லாலும்
தன்மத்தை யிகழ்வ தாலுஞ் சரீரத்தில் வியாதி தோன்றும்.

(ப - ரை) தன்னைத்தான் - ஒருவன் தன்னுடலைத் தானே, பேணுதாலும்-நல்லுணவு முதலியவற்றை யூட்டிக்காப்பாற்றாமையினாலும்; சரீரத்தின் தண்டிப்பாலும் - அவன் சரீரத்தினுடைய மிக்க வருத்தத்தாலும் (அதாவது, சரீரத்திற்கு அளவுக்கு மிஞ்சிய வேலையைக் கொடுக்க அது வருந்துவதாலும்); பின்-(அவன் தேகமெடுத்து அறியாமைப் பருவம் நீங்கி அறிவு வந்த) பின்னர், உற்ற-அவனிடத் தே வந்து பொருந்திய விசாரத்தாலும் - விசனத்தினாலும்; பின்-சிக்கிக்கொண்டிருக்கிற, (அதாவது, அவனுடைய தேகத்தில் கட்டுப் பட்டிருக்கின்ற, சலம் - நீரினாலும், மலத்தினாலும்-துர்மலத்தாலும்; அன்னத்தை - சோற்றை, ஒறுப்பதாலும்-(அவன் உண்ணுமல் வெறுத்து) நீக்குவதாலும்; அரை உடல்-பாதி தேகம் (நனையும்படி), முழுக லாலும் - (அவன்) நீரிற் குளிப்பதாலும், தன்மத்தை - அறத்தை, இகழ்வதாலும் - (அவன்) இகழ்ந்து செய்யாமல் விடுவதனாலும், சரீரத்தில் - அவனுடைய தேகத்தில், வியாதி - பிணியானது, தோன்றும் - உண்டாகும்.

(வி-ரை) ஒருவன் உணவு முதலியவைகளாற் றன்னுடம்பைப் பாதுகாவாமையினாலும், சரீரத்திற்கு அளவுக்கு மிஞ்சிய வேலைகளைக் கொடுத்து அதனை வருத்துவதனாலும், விசனமடைவதாலும், மல சல பந்தத்தை நீக்காமையினாலும், அன்னத்தைப் பிரியத்தோடுண்ணுவதற்கான உபாயத்தைத் தேடிக்கொள்ளாமையாலும், பாதியுடல் நனைந்தும் பாதி நனையாமலு மிருக்கும்படி ஸ்நானஞ் செய்வதா

லும், அறத்தை யிகழுந் தோஷத்தினாலுமே அவனுடைய சரீரத்தில் வியாதி யுண்டாகும். ஆதலின், ஒவ்வொருவரும் இக் குணங்களை நீக்கி வியாதி வாராமலிருத்தற் குபாயத்தைத் தேடிக்கொள்ளவேண்டும்.

பின்-பெயரெச்சம்; இது மலம் சலம் என்னும் பெயர்களோடு முடிந்தது. தன்மம்-தர்மமென்னும் வடமொழித் திரிபு. (அஎ)

செல்வச் செருக்கால் மனிதர்க்கு இன்ன குணங்களுண்டா மெனல்

[கலி விருத்தம்]

ஏர்பெறு மிருநிதிச் செருக்க தெய்திடில்
தேர்செவி யுடையவர் செவிட ராகுவர்
ஓர்தரு முரைவலா ரூமை யாகுவர்
கூர்விழி யுடையவர் குருட ராவரே.

(ப-ரை) ஏர் பெறு - அழகைப் பெறுகின்ற, இரும் - பெரிய, நிதி செருக்கது - திரவிய மிகுந்து அதனா லேற்படும் அகங்காரமானது, எய்திடில்-மனிதர்க்கு வந்தடைந்தால், (அவர்களுள்)தேர் - பிறர் சொல்வதைக் கேட்டுத் தெளிவதற்குதவியா யிருக்கின்ற, செவி யுடையவர் - காதுகளையுடையவர்களும், (அச் செல்வச் செருக்கால்) செவிடர் ஆகுவர் - (பிறர் சொல்லும் வார்த்தைகள் அச் செவிகளுக் கேறாமற் போவதால்)செவிட்டுத் தன்மை யுடையவராவர்; ஓர்தரும் - அறிகின்ற, உரை வல்லார் - பேசுதலில் வல்லவராயிருப்பவர்களும், (அப்பொரு ளகங்காரத்தால்) ஊமை ஆகுவர் - பிறரோடு பேசாமல் ஊமையாகிவிடுவர்; கூர் விழி உடையவர் - கூர்மையான கண்களை யுடையவர்களும், (அந் நிதிச் செருக்கால்) குருடர் ஆவர் - எதிரில் வருபவரும் தெரியாம லிருக்கத்தக்க குருட்டுத்தன்மை யுடையவராவார்.

(வி-ரை) நல்லவர்க்குச் செல்வ முண்டானால் அவர் அதனை நிலையற்றதென வெண்ணி அதன்பொருட்டுச் செருக்கடையமாட்டார்கள்; கீழ்மக்களுக்குப் பொரு ளுண்டானால் அவர் உடனே செருக்கடைவர்; அங்ஙனம் செருக்கடைந்தவரிடத்தில் பிறர் பேசினால் அந்த வார்த்தைகள் அவர்களுடைய செவிகளுக் கேறமாட்டா; அவர்கள் எவர்களுடைய வார்த்தைகளையும் கேளாமல் செவிடர்போல் இறுமாப்புக்கொண்டு திரிவர்; இன்னும் அவர்கள் பிறரோடு பேசுதற்கும் நாவெழாமல் அகங்காரங் கொண்டு ஊமையர்களைப்போன்றுந் திரிவர்; பன்முறை பார்த்துப் பழகியவர்கள் எதிரே வரினும் அவரோடு இனிய வார்த்தை யாடாமல் குருடரைப்போன்று செல்வர். கல்வி கற்றவரென்று பெயர் வைத்துக்கொண்டு திரியும் சிலருங் கூட, செருக்கால் இக் குணங்களை யுடையவர்களாய்த் திரிவதை இப்பொழுதுங் காணலாம். இவர்க ளெல்லோரும் மிருகங்களினுந் தாழ்ந்த வகுப்பைச் சார்ந்தவர்களேயன்றி, மனித வகுப்பிற் சார்ந்தவராகமாட்டார். செல்வமுற்றாலுஞ் செருக்கடையக்கூடா தென்பதை வலியுறுத்திக் கூறுதற்பொருட்டே இச் செய்யுள் கூறப்பட்டதாம். ஆதலின், அறிவுடையோர் இக் குணங்களை யொழிப்பாராக.

ஆகுவர் - இதில் ஆகு - பகுதி. (அஅ)

திரவியத்தை நல்வழியிற் செலவிடாவிடின் அது விருத்தியாகா தென்பது

[அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்]

திரவியம் வந்தபோது சேர்ந்தபல் லோர்க்கு மீந்தால்
வரவர வளரு மந்த வகைசெயா விடிற்கெட் டேகும்
ஒருகலின் கிணைவிட் டக்கா லோதநீர் போக்குப் போகப்
பெருகுறு மேரி யில்லா விடினடு வணையைப் போக்கும்.

(ப-ரை) ஏரி - குளத்தில், (வெள்ளநீர் வந்து பெருகுங் காலத்தில்) ஒரு கலிங்கினை-(ஏரியில் நிறையும் நீர் வடியும்படி கட்டப்பட்டிருக்கும் மதகுகளில்) ஒரு மதகை, விட்டக்கால்-மிகுந்த நீர் கழியும்படி திறந்துவிட்டால், ஓதநீர் - பெருகிய வெள்ளநீரானது, போக்குப் போக-அதன் வழியே போக்காகப்போக,(அவ்வெள்ளநீரால் அவ்வேரியின் கரைக்கு யாதொரு கெடுதியும் நேராமல்) ஏரி - அக் குளமானது, பெருகுறும்-நீர் நிறைந்து பெருக்கத்தை யடையும்; இல்லாவிடின்-அங்ஙனம் அந்தக் கலிங்கைத் திறந்துவிடுத லில்லாவிட்டால், நடு - அவ்வேரியினடுவே யமைந்த, அணையை - அணையாகிய கரையை, ஓதநீர்-அவ்வெள்ளநீரானது, போக்கும்-உடைத்து நாசப்படுத்தி அவ்வேரியில் நீரில்லாமற் செய்துவிடும்; (அதுபோல) திரவியம்-நிதியானது, வந்தபோது - (ஒருவர்க்குப் பூர்வ புண்ணிய வசத்தினாலே) வந்து சேர்ந்த சமயத்தில், (அவர் அதனை) சேர்ந்த - தம்மிடத்தே பொருளை விரும்பி இரப்பதற்கு வந்தடைந்த, பல்லோர்க்கும்-உத்தமராகிய பலருக்கும், ஈந்தால்-சிறிது சிறிதாகக் கொடுத்துவந்தால், வரவர - அந்த நிதியானது அவரிடத்தே வந்து சேரச் சேர, வளரும் - நாடோறும் பல வழியிலும் விருத்தியாகிக்கொண்டேயிருக்கும்; அந்த வகை செய்யாவிடில் - அவ்விதம் ஈதலைச் செய்யாவிட்டால், (அப்பொருளானது ஒரே சமயத்தில் திடுமென ஏதேனு மொருவழியினால்) கெட்டு-சிறிது மின்றி நாசமடைந்து, ஏகும் - அவரை விட்டு நீங்கும்.

(வி-ரை) ஏரியில் நீர் வந்து பெருகுங்காலத்தில் மதகைத் திறந்து அந் நீருக்குப் போக்கு விட்டால் அக் குளக்கரைக்கு எவ்வித கெடுதியு மின்றி அதில் நீர் பெருகினபடியே யிருக்கும்; அங்ஙனம் போக்கு விடாதொழியின் வெள்ளப் பெருக்கால் அவ் வேரிக்கரை உடைய அதிலுள்ள நீரெல்லாம் போய்விடும்; அதுபோல, ஒருவர்க்குத் திரவியம் வந்து சேருங் காலத்தில் அதிற் சிறிது பாகத்தை நல்

வழியிற் செலவிட்டுவந்தால் அப் பொருளானது வரவரப் பெருகும்; இல்லாவிடில் அது விருத்தி யடையாமல் ஒரேகாலத்தில் நாசமாகி விடும். எரி, ஓதநீர் என்பன இரண்டிடங்கட்குங் கூட்டப்பட்டன. (அக)

காமத்தால் விளையுந் தீமைகள் இன்னவை யென்பது

[கலி விருத்தம்]

கைதவ மிழைத்தலுங் களவு செய்தலும்
ஐதுயிர் கோறலு மறத்தைக் கோறலும்
பொய்தவ வுரைத்தலும் பொருளி ழத்தலும்
எய்திய காமத்தி னன்றி யில்லையே.

(ப-ரை) கைதவம் - வஞ்சனைகளை, இழைத்தலும்-செய்வதும்; களவு செய்தலும்-திருட்டுத்தொழிலை நடத்துதலும்; ஐது-அழகாகிய, உயிர் கோறலும் - உயிரைக் கொல்வதும்; அறத்தை - தருமத்தை, கோறலும்-கொல்லுதலும் (அதாவது: கெடுத்தலும்); பொய்-அபத்தமான வார்த்தைகளை, தவ - மிகுதியாக, உரைத்தலும்-சொல்வதும்; பொருள் - கையிலுள்ள திரவியத்தை, இழத்தலும்-இழப்பதும், எய்திய - (ஒருவனுக்குப்) பொருந்திய, காமத்தின் அன்றி - பெண்ணாசையாலல்லாமல், இல்லை - ஏற்படுவனவல்ல.

(வி - ரை) வஞ்சனை, திருட்டு கொலை, தருமக்கேடு, பொய், பொருட்கேடு முதலியவைகளெல்லாம் அன்னிய பெண்ணாசையினாலேயே உண்டாம். ஆதலின், ஒவ்வொருவரும் அதனை யொழித்தல்வேண்டும்.

'கொல்தல்' என்னுந் தொழிற்பெயர் விகாரத்தால் முதனீண்டு, "னலமுன் றனவும்......," (ந. மெ. பு. கூச) என்னும் சூத்திரவிதியால் வருமொழி முதலிலுள்ள தகரம் றகரமாக, "ஞறில்

செறி யாலள...," (ந. மெ. பு. உசு) என்னுஞ் சூத்திர விதிப்படி இல்மொழி யீற்று லகரங் கெட்டு 'கோறல்' என வந்தது. (கo)

இதுவுமது

நன்றியைக் கோறலு நலனைக் கோறலும்
வென்றியைக் கோறலும் விவேகங் கோறலும்
துன்றிய வொக்கலைத் துறந்து நிற்றலும்
கன்றிய காமத்தி னன்றி யில்லையே.

(ப - ரை) நன்றியை - நன்மையை, கோறலும்-கெடுத்தலும்; நலனை-அழகை, கோறலும்-நாசப்படுத்துதலும்; வென்றியை-வெற்றியை, கோறலும் - கெடுத்தலும்; விவேகம் - அறிவை, கோறலும் - தொலைத்தலும்; துன்றிய - நெருங்கிய, ஒக்கலை-சுற்றத்தாரை, துறந்து - நீங்கி, நிற்றலும் - துணையின்றி நிராதரவாய் நிற்பதும், கன்றிய - (முன்னே தன்னைக் கொண்டதால் பலரும் மனம்) நைந்து வருந்தியதற் கேதுவான, காமத்தின் அன்றி-அன்னிய மாத ரிச்சையா லல்லாமல், இல்லை - ஒருவனுக் கேற்படுவனவல்ல.

(வி-ரை) ஒருவனுக் கேற்படும் நன்றி, அழகு, வெற்றி, விவேகம், சுற்றம் ஆகியவைக ளெல்லாம், காமமானது அவனிடத்துப் பொருந்தின் கெடும். (கக)

இதுவுமது

பகையினை யாக்கலும் பாவ மாக்கலும்
நகையினை யாக்கலு நவையை யாக்கலும்
திகைமன மாக்கலுஞ் சிறுமை யாக்கலும்
அகைதரு காமத்தி னன்றி யில்லையே.

(ப - ரை) பகையினை-(பலருடன்) விரோதத்தை, ஆக்கலும்-உண்டாக்குதலும்; பாவம் - பல அக்கிரமச் செயல்களை, ஆக்கலும் -

செய்தலும்; நகையினை-பலரும் பார்த்திகழும்படியான இகழ்ச்சிகளை, ஆக்கலும்-தோற்றுவித்தலும்; நவையை-பல குற்றங்களை, ஆக்கலும்-செய்தலும்; திகை மனம் - மயக்கமான மனத்தை, ஆக்கலும் - உண்டாக்கலும் (அதாவது: மனத்தைக் கலங்கச்செய்தலும்); சிறுமை - தாழ்மையை, ஆக்கலும் - உண்டாக்குதலும், அகை தரு-பிறர் அடித்தல் முதலிய துன்பங்களைத் தருகின்ற, காமத்தின் அன்றி - பெண் விருப்பாலல்லாமல், இல்லை - ஒருவனுக் கேற்படுவனவல்ல.

(வி-ரை) மனிதனுக்குப் பகை, பாவம், இழிவு, குற்றம், மனக் கலக்கம், தாழ்மை முதலியவைக ளெல்லாம் காமத்தினாலேயே யுண்டாகும். பெண்ணாசையால் ஓரிடத்திற் செல்பவர்க்கு அடி முதலிய துன்பங்க ளேற்படுவது இயற்கையாதலால் அக் காமம் 'அகை தரு காமம்' என்று கூறப்பட்டது.

அகை - தல் விகுதி கெட்ட முதனிலைத் தொழிற்பெயர். அகைத்தல்-அடித்தல், அல்லது அறுத்தல். (கஉ)

உழுதொழிலின் சிறப்பு

[கொச்சகக் கலிப்பா]

அலகில்லா மறைவிளங்கு மந்தணரா குதிவிளங்கும்
பலகலையாந் தொகைவிளங்கும் பாவலர்தம் பாவிளங்கும்
மலர்குலாந் திருவிளங்கு மழைவிளங்கு மனுவிளங்கும்
உலகெலா மொளிவிளங்கு முழவருழு முழவாலே.

(ப-ரை) உழவர் - உழுதொழிலைச் செய்யுங் குடிகள், உழும் - உழுகின்ற, உழவாலே-உழவுத்தொழிலினாலே, (உலகத்தில்) அலகு-இல்லா -அளவிட முடியாத, மறை-வேதபாராயணங்கள், விளங்கும் எங்குந் தோன்றும்; அந்தணர் - வேதியராற் செய்யப்படும், ஆகுதி - ஓமாக்கினியில் நெய் சொரிதல் (அதாவது வேள்வி செய்தல்), விளங்

கும்-எவ்விடத்தும் தோன்றும்; பல கலையாம் - பல நூற்களாகிய, தொகை-கூட்டம், விளங்கும் - எங்கும் தோன்றும் (அதாவது: எங்கும் பல சாஸ்திரப் பயிற்சி ஏற்படும்); பாவலர்தம்-பாடுதலில் வல்லவர்களாகிய வித்வான்களாற் பாடப்படும், பா - கவிகள், விளங்கும்-எவ்விடத்தும் தோன்றும்; மலர் - தாமரைமலரிலே, குலாம் - சஞ்சரிக்கின்ற, திரு - இலக்குமி, விளங்கும் - எங்கும் பிரகாசிப்பாள், (அதாவது: எங்கும் செல்வமானது மிகுந்து விளங்கும்); மழை-மாரியானது, விளங்கும் - தவறாமல் தோன்றும்; மனு - நீதிகள், விளங்கும் - பிரகாசிக்கும்; உலகு எல்லாம் - உலகத்திலெல்லாம், ஒளி-புகழானது, விளங்கும் - பிரகாசிக்கும்.

(வி - ரை) உலகத்தில் - உழவர்கள் பயிர்த்தொழிலைக் குறைவின்றிச் செய்யப் பல விளைவுகளுமுண்டானால் மாத்திரந்தான் வேத பாராயணம், வேள்வி, பல சாஸ்திரப் பயிற்சி, பாவலர் கவிசெய்தல், செல்வம் பெருகல், மாதமும்மாரி பெய்தல். நீதி நிலைபெறல், நற்செய்கைகளாற் புகழுண்டாதல் முதலியவைகளெல்லா மேற்படும்.

"பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்."

என்னுந் திருக்குறளால் இவ் வுழவின் சிறப்புணரப்படும். (கஒ)

முத்தர்கள் எத்தொழிலைச் செய்தாலும் அவர்களுடைய மனம் பிர்மத்திடமே பற்றிநிற்குமெனல்

[நேரிசை வெண்பா]

எத்தொழிலைச் செய்தாலு மேதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கு மோனத்தே—வித்தகமாக்
காதிவிளை யாடியிரு கைவீசி வந்தாலும்
தாதிமன நீர்க்குடத்தே தான்.

(ப-ரை) தாதி - (குளத்திலிருந்து தண்ணீர் மொண்டு தண்ணீர்க் குடத்தைத் தலையில் வைத்துக்கொண்டு வரும்) அடிமைப் பெண்ணானவள், வித்தகமா - அதிசயமாக, காதி - (குடத்திற் பற்றியிருந்த கைகளை அதினின்றும்) துண்டு படுத்தி (அதாவது: கைகளை நீக்கி), விளையாடி-பல விளையாட்டுக்களைச் செய்து, இரு கை வீசி - இரண்டு கரங்களையும் வீசிக்கொண்டு, வந்தாலும் - வழியில் நடந்துவந்தாலும், மனம்-அவளுடைய உள்ளமானது, நீர்க்குடத்தே-தலையிலிருக்கும் தண்ணீர்க்குடத்தினிடமாகவே பற்றிநிற்கும் (அதாவது, குடம் தவறிவிடாமல் அதனைப் பாதுகாக்கும் விஷயத்திலேயே ஞாபகமாயிருக்கும்; (அதுபோல) முத்தர்-முத்தியில் விருப்பமுள்ளவர்கள், எத்தொழிலை - எந்தச் செய்கையை, செய்தாலும் - புரிந்தாலும், ஏது அவத்தை பட்டாலும்-எந்த விதமான வேதனையை யடைந்தபோதிலும், மனம்-அவர்களுடைய உள்ளமானது, மோனத்தே-மௌன நிலையாகிய சுத்த பிரமத்தினிடத்திலேயே, இருக்கும் (அதனைவிட் டகலக்கூடாதென்னும் எண்ணத்துடன்) பற்றியிருக்கும்.

(வி-ரை) தலையில் நீர்க்குடத்தை வைத்துச் செல்லுந் தாதியானவள் அக் குடத்தைக் கைகளாற் பற்றாமல் அக் கைகளை வீசி விளையாடி நடந்து சென்றாலும் அவளுடைய மனமானது, 'எங்கே நீர்க்குடம் தவறி விழுந்துவிடப் போகின்றதோ?' என்று அதன் பேரிலேயே ஞாபகமாயிருக்கும்; அதுபோல், முத்தர்கள் எத்தொழிலைச் செய்தாலும் அவர்களுடைய மனமாத்திரம், 'நமக்குப் பிரமத்தையன்றி முக்கியமானது வேறொன்று மின்று,' என்று அதனிடமாகவே பற்றி நிற்கும். நாம் என்ன தொழிலைச் செய்துகொண்டிருந்தாலும் மனத்தை மாத்திரம் நிலையான வஸ்துவில் செலுத்தினால் சுகத்தை யடையலா மென்பதை இச் செய்யுட் கருத்து நன்கு விளக்கும். காதுதல் - கூறுபடுத்தல், அல்லது வேறாக்கல். காதி என்பது கையைக் குடத்தினின்றும் வேறாகப் பிரித்தலை யுணர்த்திற்று. 'நீர்க்

குடத்தே' என்பதற்குப் பின் 'பற்றிநிற்கும்' என்னுஞ் சொல் இசையெச்சமாக வருவித் துரைக்கப்பட்டது. (கூச)

பெரியோர்கள் எத்தொழிலைச் செய்தாலும் மனத்தை மாத்திரம் கடவுளிடத்திலேயே செலுத்திக் கொண்டிருப்ப ரென்பது.

[நேரிசை வெண்பா]

சோரமனை யாட்டிமிகச் சோரபிரான் மேன்மனதாச்
சேரத் தொழில்செய்யுந் திட்டம்போல்—பேர்பெரியர்
அத்தனடி மேன்மனத்தை யாறுது வைத்துகந்தே
எத்தொழிலுஞ் செய்வ ரிசைந்து.

(ப - ரை) சோரம்-(தன்னுடைய நாயகனை விட்டு அன்னியனிடத்துக் கருத்தைச் செலுத்தும்) கள்ளத்தன்மை பொருந்திய, மனையாட்டி - ஒருவனுடைய மனைவி, (வேறு பல வேலைகளைச் செய்துகொண்டிருந்தாலும்) சோரபிரான் மேல் - தன்னுடைய கள்ளப்புருஷன்மீதே, சேர - அவனைச் சேருதற்கு, மிக மனதா - மிகுதியாக மனஞ் செல்ல, தொழில் செய்யும் - அவ் வேலைகளைச் செய்யும், திட்டம்போல்"- திறம்போல; பேர் பெரியர் - மிகவும் பெரியோராகிய ஞானிகள், அத்தன் - கடவுளுடைய, அடிமேல்- பாதத்தின்மீது, மனத்தை-உள்ளத்தை, ஆறுது-நீக்காமல், வைத்து- நிறுத்தி, உகந்தே - சந்தோஷித்துக்கொண்டே, எத்தொழிலும் - எந்தக் காரியத்தையும், இசைந்து - பொருந்தி, செய்வர்-புரிவார்கள்.

(வி - ரை) சோரநாயகி தன்னுடைய சோரநாயகன்மீதே மனத்தைச் செலுத்திக்கொண்டு எந்தக் காரியத்தையுஞ் செய்வள்; அதேபோல, ஞானிகள் பகவனடியில் மனத்தைச் செலுத்திக்கொண்டே எந்தக் காரியத்தையுஞ் செய்வர். அவர்கள் பல காரியங்களைச் செய்யினும் அவர்களுடைய மனமானது அக் காரியங்களிற் செல்

லாமல் கடவுளி னடியிலேயே சென்றிருக்கும். பேர் பெரியர் - ஒரு பொருட் பன்மொழி; இதனை மீமிசைச் சொல்லென்றுங் கூறுப.()

வியபிசாரியின் செய்கை பூனையின் செய்கைக் கோப்பா மென்பது

[கலி விருத்தம்]

ஒருவரு மறிகிலா ரெனவோ ரொண்ணுதல்
காவினிற் குமரரைக் கலத்தல் பூசைதன்
இருவிழி மூடிமற் றெவர்கள் பார்வையும்
தெரிகிலா தெனப்பயன் றிருட லொக்குமே.

(ப - ரை) ஓர் ஒண்ணுதல்-ஒரு வியபிசாரமுள்ள பெண்ணானவள், (தன்னுடைய தகாச் செய்கையை) ஒருவரும்-(உலகத்தில்) எவரும், அறிகிலார் என - தெரிந்துகொள்ளமாட்டாரென்று கருதி, காவினில் - சோரத்தன்மையாலே, குமரரை - பல வாலிபரை, கலத்தல் - இரகசியமாகக் கூடுதல், (எதற் கொப்பாமெனில்) பூசை - பூனையானது, தன் இரு விழி - தன்னுடைய இரு கண்களையும், மூடி - மூடிக்கொண்டு, (தனக் கிருட்டாயிருக்கவே, இதைப்போலவே உலகமெல்லாம் இருள் சூழ்ந்திருக்கு மாகையால்) எவர்கள் பார்வையும் - எவருடைய கண்ணும், தெரிகிலாது - தெரியமாட்டாதும் (ஆதலால், நம்முடைய திருட்டும் வெளிப்படாது) என - என்று நினைத்து, பயன் - (அடுப்படியிலுள்ள) பாலை, திருடல் ஒக்கும் - திருடுவதை நிகர்க்கும்.

(வி - ரை) பெண்கள் எவ்வளவு இரகசியமாக வியபிசாரஞ் செய்தபோதிலும் அஃதெப்படியும் வெளிப்படாமலிராது. இதனையறியாத மூடப்பெண்கள், 'தாம் இரகசியமாக இத்தொழிலைச் செய்வதால் இஃதொருவருக்கும் வெளிப்படமாட்டாது,' என்று கருதித்

தங்களிஷ்டம்போல் வியபிசாரத் தொழிலை நடத்துவர். இது, பூனை தன் கண்ணை மூடிக்கொண்டு தனக்கிருட்டாயிருப்பதை முன்னிட்டு 'நம்முடைய செய்கையை ஒருவரு மறியார்,' என்று கருதிப் பாலைத் திருடுவதை நிகர்க்கும். 'ஓர் ஒண்ணுதல்' என்பது விகாரத்தால், 'ஒரொண்ணுதல்' எனக் குறுகி வந்தது. ஒண்ணுதல் - பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. மற்று - அசை. (கசு)

புருஷன் வார்த்தை கேளாத மனைவியுடன் அவன் கூடி வாழுதல் துன்பமெனல்

[கலி விருத்தம்]

தன்னுரை கொளாதமனை வாழ்க்கையது தன்னின்
வெந்நிரயம் வீழ்வகை யேவிழுமி தம்மா
அன்னரொடு மேவியம ராடவர் தமக்குப்
பின்னுமொரு கூற்றுமுள தோபிணியு முண்டோ?

(ப-ரை) தன் உரை கொள்ளாத - (உலகத்தில் ஒரு மனிதனுக்குத்) தன்னுடைய வார்த்தையைக் கேட்டு நடவாத, மனை - இல்லாளுடனே, வாழ்க்கையது தன்னின்-(சேர்ந்து வாழும்) வாழ்க்கையைப் பார்க்கிலும், வெம் கொடிதாகிய, நிரயம் - நரகத்தில், வீழும் வகையே - வீழ்ந்து வருந்தும் முறைமையே, விழுமிது-சிறப்பினையுடையதாம்; (பின்னும்) அன்னரொடு - அத்தகைய பெண்களோடு, மேவி - விரும்பி, அமர் - பொருந்தி வாழ்கின்ற, ஆடவர் தமக்கு - புருஷர்களுக்கு, பின்னும் ஒரு - (இவர்களை யன்றி) வேறுமொரு, கூற்றும் - எமனும், உண்டோ-உளதோ? (இல்லை); பின்னும் ஒரு - வேறு மொரு, பிணியும் உண்டோ - நோயு முளதோ? (இல்லை).

(வி-ரை) ஒருவன் தன்னுடைய வார்த்தைக் கடங்காத மனைவியுடன் கூடி வாழ்தல் நரகவாதனையினுங் கொடியதாதலால் அவ்வாழ்வைக்காட்டினும் நரகத்தில் வீழ்வது நன்றாம். இத்தகைய பெண்க

ளோடு கூடி வாழும் ஆடவர்க்கு இப் பெண்கள், கூற்றைப்போலவும் நோயைப்போலவும் வேதனை செய்யக்கூடியவராதலின் இவர்களே எமனும் பிணியுமாவர். 'வெம் நிரயம்' என்பது வெம் என்பத னீற்று மகரங் கெட்டு வருமொழிமுதல் நகர மிக்கு 'வெந்நிரயம்' என வந்தது. (கூஎ)

சந்ததியற்ற இல்வாழ்க்கை பயனற்றதென்பது

[கலி விருத்தம்]

உந்து நீர்க்கட லுடுத்தபார் முழுவது மொருங்கே
வந்து தாடொழு மரசியல் வளமெலாம் பெறினும்
இந்தி ராதிபர் பெரும்பதத் திருக்கையெய் திடினும்
மைந்த ரின்றியே வாழ்வது வாழ்வுமற் றன்றே.

(ப - ரை) (மனிதர்) உந்து - (அலைகளோடு கரையில்) எறி மோதுகின்ற, நீர் - ஜலம் நிறைந்த, கடல் - சமுத்திரத்தை, உடுத்த- ஆடையாக வுடுத்திய, பார் முழுவதும் - பூமி யெல்லாம் (அதாவது, பூமியிலுள்ள மனிதர்க ளெல்லோரும்), ஒருங்கே வந்து - ஒருமிக்கக் கூடி வந்து, தாள் தொழும் - பாதங்களை வணங்கக்கூடிய (சிறப்பு வாய்ந்த), அரசியல் - அரசாட்சி முறைமையின், வளம் எல்லாம் - சிறப்புக்களை யெல்லாம், பெறினும் - அடைந்தாலும், இந்திராதியர் - இந்திரன் முதலியவர்களுடைய, பெரும் பதத்து-பெரிய பதவியில், இருக்கை - சேர்ந்திருத்தலை, எய்திடினும் - பெற்றாலும், மைந்தர் இன்றி - புத்திர ரில்லாமல், வாழ்வது-இல்வாழ்க்கை செய்தலானது, வாழ்வு அன்று - சிறந்த வாழ்க்கை யாகாது.

(வி - ரை) மனிதர் எத்தகைய சிறப்புக்களுடன் உலகத்தில் வாழினும் அவருக்குப் புத்திரபாக்கிய மில்லாவிடின் அவ் வாழ்க்கை பயனற்றதாம். இங்ஙனம் புத்திரரில்லாத இல்வாழ்க்கை பயனற்றதா மென்பதை,

"கல்லா மழலைக் கனியூறல் கலந்து கொஞ்சும்
சொல்லா லுருக்கி யழுதோடித் தொடர்ந்து பற்றி
மல்லார் புயத்தில் விளையாடு மகிழ்ச்சி மைந்த
ரில்லா தவர்க்கு மனைவாழ்வி னினிமை யென்றும்."

என்னும் பாரதச் செய்யுளானு முணர்க. 'வாழ்வு மற்று' என்பதில் மற்று - அசை. (கூஅ)

பொருளாசை பல தீமைகளைப் புரியு மென்பது

[கலித்துறை]

எவரை யும்மனந் திரிப்பது மீன்றவர் தமக்குத்
தவறி ழைத்திடப் புரிவதுந் தையலார் தங்கள்
கவறில் கற்பினை யொழிப்பதுங் கற்குநூற் கலைகள்
அவையெ லாங்கெடக் கெடுப்பதும் பொருள்விருப் பன்றே.

(ப - ரை) எவரையும் - எப்பேர்ப்பட்டவர்களையும், மனம் திரிப்பதும் - மனத்தை இயற்கைக்கு விரோதமாக மாறுபடச் செய்வதும்; ஈன்றவர் தமக்கு-பெற்ற தாய் தந்தையர்க்கும், தவறு-தீங்கை, இழைத்திடப் புரிவதும்-புரியும்படி செய்வதும்; தையலார் தங்கள் - பெண்களுடைய, கவறில்-வருத்த மில்லாத, கற்பினை-பதிவிரதா தர்மத்தை, ஒழிப்பதும் - நீக்குவதும்; கற்கும் - மனிதர் படிக்கின்ற, நூல் கலைகள் - சாஸ்திரக் கல்விகள், அவை யெல்லாம் - சபைகளி லெல்லாம், கெட - மாறுபட்டுக் கெடுதலை யடையும்படி, கெடுப்பதும் - அவற்றை நாசப்படுத்துவதும், பொருள் விருப்பு - மனத்தி லேற்படும் பொருளாசையேயாம்.

(வி - ரை) பொருளாசையானது ஏற்பட்டுவிடும் பக்ஷத்தில் எத்தகையருடைய மனத்தின் நல்ல இயல்பையுங் கெடுத்து அதனை வேறுபடுத்திக் கெட்ட வழிகளிற் பிரவேசிக்கச் செய்யும்; அதனால்

அவர் செய்யத்தகாத காரியங்களை யெல்லாம் செய்வர். 'தாய்தந்தையரை உபசரிப்பினும் பொருள் விரயமாகுமே' என்று கைப்பொருளைப் பத்திரப்படுத்திக்கொண்டு அவர்களுக்கு உணவு முதலியன சரிவரக் கொடாமல் தீங்குசெய்வர். பொருளாசையுள்ள பெண்களிடம் கற்பு நிலைநில்லாது; எவர் பணங் கொடுப்பினும் அவர்க்கிணங்கித் தங்கள் கற்பினைக் கெடுத்துக்கொள்வர். இன்னும் பொன்னாசையுள்ளவர் எவ்வளவு கல்வி கற்றிருந்தபோதிலும் எவரேனும் பணங்கொடுத்துச் சபைகளில் நீதிக்கு விரோதமான விஷயங்களைப் பேசச் சொல்லின் அங்ஙனமே பேசிப் பலரின் நிந்தனைக் குள்ளாகித் தங்கள் கல்வியின் உயர்வைக் கெடுத்துக்கொள்வர். பெரிய கல்விமான்களெனப் பெயரெடுத்தவர்களும் இங்ஙனம் பொருளாசையால் கெட்ட வழிகளிற் பிரவேசித்து அறிவுடையோர் வெறுக்கத் திரிவதை இன்றுங் காணலாம். எவரையும், மனத்தை என்னும் இரண்டு செயப்படுபொருள்களும் ஈருருபேற்று, பொருள் விருப்பு என்னும் எழுவாயுடன் சேர்ந்து ஒரு தன்மையாய் முடிந்தன. கவறு-கவற்சி; இது, வருந்துதல் எனப் பொருள்படும் தொழிற்பெயர்; கவல் - பகுதி; று - தொழிற்பெயர் விகுதி. (கககூ)

யோக்கியருக்குக் கேடுதி செய்தலும், உண்ணத் தகாதவிடத்தில் உண்ணுதலும், பொய் கலந்த சோற் கூறுதலும் எப்பொழுதும் கூடாவென்பது

[நேரிசை வெண்பா]

தான் கெடினுந் தக்கார்கே டெண்ணற்க! தன்னுடம்பின்
ஊன்கெடினு முண்ணார்கைத் துண்ணற்க!—வான்கவிந்த
வையக மெல்லாம் பெறினு முரைபற்க!
பொய்யோ டிடைமிடைந்த சொல்.

(ப-ரை) (உலகத்தில் ஒரு மனிதன் பிறருக்கு உதவி செய்தல் முதலியவற்றாலே பொருள் செலவாகத்) தான் கெடினும் - தான்

கெட்டாலும், (அங்ஙனம் பிறர்க்குதவி செய்தல் முதலிய நற்குணங்களைக் கைவிட்டுப் பிறர்க்குத் தீங்கு செய்தல் முதலிய கெட்ட வழிகளாற் பொருள் தேடித் தான் சுகப்படுவதற்காக) தக்கார் - அறிஞராகிய யோக்கியருக்கு, கேடு எண்ணற்க - தீங்கு செய்ய நினையாதிருக்கக்கடவன்!, தன் - தன்னுடைய, உடம்பின்-தேகத்திலுள்ள, ஊன் - தசையானது, கெடினும் - (நல்லுணவு முதலியன அகப்படாமையினாலே மெலிந்து) கெட்டாலும், உண்ணார்-உணவுண்ணத் தகாதவர்களுடைய, கைத்து - கையிலிருந்து வரும் உணவை, உண்ணற்க - உட்கொள்ளாதிருக்கக்கடவன்!, வான் - ஆகாயத்தால், சூழ்ந்த - மூடப்பெற்ற, வையகம் எல்லாம்-இப் பூமி முழுவதையும், பெறினும் - (பொய் கூறுவதால்) அடைவதாயிருந்தாலும், இடை - நடுவில், பொய்யோடு - பொய்யுடனே, மிடைந்த-சேர்ந்த, சொல் - வார்த்தையை, உரையற்க - சொல்லாதிருக்கக்கடவன்!

(வி - ரை) ஒருவன் தான் கெட்டுப்போவதா யிருந்தாலும் யோக்கியருக்கு உதவியே செய்யவேண்டும்; அவருக்குத் தீங்கு செய்து பொருளைத் தேடுவதால் தனக்குச் சுகங் கிடைப்பதாயிருந்தாலும் அங்ஙனந் தீங்கு நினைக்கலாகாது. நல்லுண வகப்படாமையால் தேகம் மெலிந்தாலும் உண்ணத்தகாத விடத்தில் உணவுண்ணலாகாது. பொய் கூறுவதால் பூமி முழுவதையும் பெறுவதாயிருந்தாலும் பொய்யுடனே கலந்த சொற்களைக் கூறலாகாது.

கைத்து-கையிலுள்ளது; கை - பகுதி, து - ஒன்றன்பாற் படர்க்கை விகுதி. இச் செய்யுள் நாலடியாரிலுள்ளது. (௪00)

விவேகசிந்தாமணி இரண்டாம் பாகம்
மூலமும் உரையும் முற்றுப்பெற்றன.

[...] [1000 Copies.